திருமணம்

செல்வக்கேசவராய முதலியார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை - 8

திருமணம் செல்வக்கேசவராய முதலியார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 8
திருமணம் செல்வக்கேசவராய முதலியார் (24-11-2003)

Title of the Book	:	**Tirumanam Celvakkēcavarāya Mutaliār**
Editors	:	Dr. S. Krishnamoorthy Director IITS, Taramani, Chennai - 600 113. Dr. S. Sivakami Associate Professor IITS, Taramani, Chennai - 600 113.
Publisher	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Taramani, Chennai - 600 113. Ph: 22542992
Publication No	:	509
Language	:	Tamil
Edition	:	First Edition
Date of Publication	:	2004
Paper Used	:	18.6 kg TNPL Map litho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii + 104
No. of Copies	:	1200
Price	:	Rs. 30/- (Rupees Thirty Only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road, Chennai - 600 004.
Subject	:	Biographical & Critical Studies on T. Selvakesavaraya Mudaliar

---

கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒல்லும்வகையெல்லாம் தமிழை வளர்ப்பதில் அயராது பாடுபட்டுவருகிறது. வாரக்கருத்தரங்கு, திங்கள் கருத்தரங்கு, ஆண்டுக்கருத்தரங்கு, அறக்கட்டளைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்து வருகிறது. தமிழாய்வுக்கு உடனடித் தேவை என்ன என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திவருவதே இதற்குக்காரணமாகும்.

இந்நிறுவனம் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பொருண்மைகளில் கருத்தரங்குகளை நடத்திவருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழுக்கென்று அமைந்த மரபையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தொடர்கருத்தரங்கை இந்நிறுவனம் நடத்திவந்தது. தமிழர் கலைச் செல்வங்கள் என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்காகத் தமிழ் மரபினை உணர்த்தும் வகையிலும் கருத்தரங்குகளை நடத்திவந்தது. இவையன்றியும் பல்வேறு இலக்கியப் பொருண்மைகளில் கருத்தரங்கை நடத்திவந்தபெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு. இந்நிறுவனம் தன் அளவிலும் பிற நிறுவனங்களோடு சேர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தித் தமிழாய்வுக்குச் சிறப்புச் சேர்த்து வந்துள்ளது. இக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து தமிழறிஞர்களை மையப்படுத்திய நிலையில் தொடர்கருத்தரங்கு ஒன்றைத் தொடங்க எண்ணியது. இவ்வகையில் **'தமிழறிஞர் வரிசை'** என்ற பெயரில் தொடர் கருத்தரங்கை நடத்துவதன்மூலம் அறிஞர் பலரின் அரிய தமிழ்த் தொண்டுகளை எல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்ட முடியும் என்ற நிலையில் இத்தகைய தொடர்கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது.

வரலாறு எழுதப்படாத தமிழறிஞர்களுக்கு ஒரு வரலாற்றை உருவாக்குவதன் மூலம் அத்தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகள் ஆவணப் படுத்தப்படும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதால் இத்தமிழறிஞர்கள் இம்மண்ணில் பிறந்த பயனும், இம்மண்ணிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் பின்வருவோரால் போற்றப்படும் நிலை உருவாகும். இதனால் இத்தமிழறிஞர் வரிசைக்கருத்தரங்கை வாழ்க்கை வரலாற்றுக் கருத்தரங்காக அமைக்காமல் ஆய்வுக்கருத்தரங்கமாக அமைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. அவ்வகையில் தமிழுக்கு உழைத்து மறைந்த அறிஞர்கள் பலநூறுபேர்

நம்முன் வந்தனர். அவர்கள் அனைவரைப் பற்றியும் இத்தொடர் கருத்தரங்கம் அமையவேண்டும் என்பது எங்கள் அவா. எனவே அனைவரையும் பட்டியலிட்டுப் பகுதி பகுதியாக இத்தொடர் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாகப் பதினாறு அறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தமிழறிஞர்களின் முதல் பட்டியலைக் கொண்டு தமிழறிஞர் களைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும் நாள், கட்டுரை வழங்க வேண்டிய நாள் பற்றிய குறிப்புகளுடன் முதல் அட்டவணை தயார் செய்யப்பட்டது.

இப்பதினாறு தமிழ் அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் வழங்கத் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

ஒரு திங்களுக்கு ஒரு தமிழறிஞர் என ஒருவரைப் பற்றிய கருத்தரங்கில் 5 அல்லது 6 பேர் ஆய்வு செய்யவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கட்டுரைகள் கோரப்பட்டன. ஒருவரைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்து கட்டுரை வழங்குவதால் அவ்வறிஞருடைய பன்முக ஆளுமையை வெளிக்கொணர முடியும். அத்தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு முதலில் அமையவேண்டும். பதிப்பு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு போன்ற நிலைகளில் அவ்வறிஞர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் கட்டுரைகள் பெறப்பட்டன. இக்கருத்தரங்கில் மிகுந்த விருப்பத்துடன் ஆய்வாளர்கள் கட்டுரை வழங்க முன்வந்தமை உண்மையிலேயே எங்களுக்கு வியப்பு அளித்தது. முறையாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படத் தொடங்கிய **இத்திங்கள் தொடர் ஆய்வுக்கருத்தரங்கு - தமிழறிஞர்வரிசை** புதுப்பொலிவுடன் எண்ணிய வண்ணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இம்முதல் பட்டியலைத் தொடர்ந்து இரண்டாவது பட்டியல்,மூன்றாவது பட்டியல் எனத் தமிழறிஞர் வரிசை ஆண்டுக் கணக்கில் நடைபெறும் தொடர் கருத்தரங்காக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய, நாளைய தலைமுறையினர்க்கும் தமிழ் உலகிற்கும் ஒரு சிறந்த ஆவணமாக அமைய இருக்கும் இத்தமிழறிஞர்வரிசைக் கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொடர்ந்து நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை கொள்கிறது. எப்போதும் ஒரு பணியைத் திட்டமிட்டு எதிர்கால நோக்கில் செயல்படுத்தினால் அத்திட்டம் வெற்றியடைவது உறுதி என்பதற்குச் சான்றாக இத்தமிழறிஞர் வரிசைத் தொடர் கருத்தரங்கு அமையலாம்.

இத்தமிழறிஞர் வரிசையின் எட்டாம் கருத்தரங்காகத் **திருமணம் செல்வக்கேசவராய முதலியார்** அவர்களைப் பற்றிய இக்கருத்தரங்கு

அமைகிறது. இக்கருத்தரங்கில் ஐவர் கட்டுரை வழங்கியுள்ளனர். இக்கட்டுரைகள் செல்வக்கேசவராய முதலியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர்தம் படைப்புத்திறனையும், பதிப்புத்திறனையும், உரைநடைத் திறனையும், உரைத் திறனையும் இத்தமிழுலகிற்கு வெளிக்கொணரும் நிலையில் அமைந்துள்ளன. சென்னை மாநகருக்கு அருகே உள்ள திருமணம் என்ற ஊரில் இவர் பிறந்ததால் இவரைத் திருமணம் செல்வக்கேசவராய முதலியார் எனச் சிறப்புடன் சுட்டி அழைத்தனர். இவர் பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவருக்கிருந்த ஆசிரிய அனுபவத்தால் இலக்கியங்களை மாணவர்களுக்கு எளிய நடையில் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற தணியாத ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது. இதனால் சிலப்பதிகாரத்தைக் கண்ணகி சரித்திரம் என்ற பெயரில் உரைநடையாகப் படைத்துத் தந்துள்ளார். ஒவ்வொரு இலக்கியத்திலும் எவ்வளவு பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன என்பதைப் பட்டியலிட்டுக் காட்டிய பெருமை இவருக்குண்டு. தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமை இவருக்கிருந்ததால் தமிழ்ப் பழமொழிகளுக்கு இணையான ஆங்கிலப் பழமொழிகளையும், ஆங்கிலப் பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளையும் தொகுத்து தமிழுலகிற்கு வழங்கியுள்ளார். ஆங்கில இலக்கியங்களைவிடத் தமிழ் இலக்கியங்கள் எவ்வகையிலும் குறைந்தவை அல்ல என்பதைப் பல மேடைகளில் எடுத்துக்காட்டியுள்ளார். தமிழுக்குக் 'கதி' கம்பரும் திருவள்ளுவருமே எனக் கணித்துக் கூறிய சிறப்புக்குரியவர். இத்தகு பன்முகச் சிறப்புகளையெல்லாம் ஓரிழையில் கோத்து இவர்தம் ஆய்வுத்திறன் வெளிப்படும் நிலையில் **திருமணம் செல்வக்கேசவராய முதலியார்** என்ற நூல் வெளிவருகிறது. இந்நூல் தமிழுலகிற்குப் பெருமை சேர்ப்பதுடன் தமிழ் இலக்கிய வரலாற்றில் கூடுதல் வரவாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை
26-07-04

இயக்குநர்

கட்டுரையாளர்

முனைவர் கா. சத்தியபாமா
விரிவுரையாளர்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
தஞ்சாவூர் - 613 007

முனைவர் ஆ. தசரதன்
திட்டக்கல்வியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

முனைவர் பு. பாலாஜி
விரிவுரையாளர்
இந்துக் கல்லூரி, பட்டாபிராம்
சென்னை

திருமதி அ. பூரணலதா
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

திரு ஆ. மணவழகன்
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

உள்ளே

வாழ்க்கை வரலாறு

- அ. பூரணலதா 1

படைப்புத்திறன்

- ஆ. மணவழகன் 15

கம்பநாடர்

- கா. சத்தியபாமா 41

பதிப்புத்திறன்

- ஆ. தசரதன் 60

உரைநடைத்திறன்

- பு. பாலாஜி 85

வாழ்க்கை வரலாறு

அ. பூரணலதா

பிறப்பும் வளர்ப்பும்

சென்னை மாநகரின் அருகேயுள்ள 'திருமணம்' செல்வக் கேசவராயரின் பிறந்த ஊராகும். கேசவ சுப்பராய முதலியார்-பாக்கியம் அம்மையாரின் மகனாக 1864-ஆம் ஆண்டு செல்வக் கேசவராயர் பிறந்தார். இவரின் தந்தை செல்வச் செழிப்போடும் தமிழாற்றலோடும் பலரும் புகழும் மாமனிதராய்த் திகழ்ந்தார். இவர் பிறந்த குடி வேளாண்குடி.

பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய கேசவ சுப்பராய முதலியார், தம் மகன் செல்வக்கேசவராயரைச் சிறந்த கல்விமானாக உருவாக்க விரும்பினார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் திறம்பெறுமாறு கல்வி புகட்டினார். பள்ளிக்கு அனுப்பிப் பயிலச் செய்தபோதும், இல்லத்தில் நாள்தோறும் செல்வக்கேசவராயருக்குத் தமிழைக் கற்றுத் தந்து, இளமையிலேயே தமிழ்ச்சுவையில் நாட்டம் கொள்ளுமாறு பயிற்றுவித்தார் தமிழாசிரியர் சுப்பராய முதலியார். செல்வக் கேசவராயர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றதோடன்றி மலையாளத்திலும் தெலுங்கிலும் நன்கு பயிற்சி பெற்றுப் பன்மொழிப் புலமை கொண்டவராய் மிளிர்ந்தார். இவர் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேறியபின் தமிழ், ஆங்கில நூல்களையும் இடைவிடாது தாமே கற்றார். இதனால் இவருடைய அறிவு பரந்து விரிந்தது. செல்வக்கேசவராயர் பச்சையப்பன் கல்லூரியில் 'இண்டர் மீடியட்' படிக்கும் போதே, தமிழை விருப்பப்பாடமாக ஏற்று விரும்பிப் படிக்கத் தொடங்கினார். தமிழ், ஆங்கிலம் முதலிய பாடங்கள் எல்லாவற்றிலும் செல்வக்கேசவரே முதன்மையாக நின்று பி.ஏ. பட்டத்தைப் பெற்றார். எம்.ஏ. வரையில் தமிழே செல்வக் கேசவராயரின் விருப்பப்பாடமாக விளங்கியது. இவரே தமிழில் எம்.ஏ. பட்டத்தை முதன் முதலாகப் பெற்றார்.

திருமண வாழ்க்கை

செல்வக்கேசவராயர் 'வேதவல்லி'யைத் திருமணம் புரிந்து இல்வாழ்க்கையை இனிது நடத்தினார். மணத்தின் பேறு மக்கட்பேறு என்பதற்கிணங்க, அவருக்குச் செல்வப் புதல்வர்கள் மூவர் பிறந்தனர். செந்தமிழிடத்தே தணியாக் காதல் கொண்டதனால், தம் பிள்ளைகளுக்குப் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்று பெயர்கள் இட்டார். இவ்வாறு தமிழ் மேல் தீராக்காதல் கொண்டு, உரையாசிரியர்களின் பெயர்களைத் தம் பிள்ளைகளுக்குச் செல்வக்கேசவராயர் இட்டதைக் கண்ட பலரும் இவர்தம் தமிழ்ப்பற்றைப் பெரிதும் போற்றிக் கொண்டாடினர்.

பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியத் தொழில்

தாம் பிறந்த ஊரான திருமணத்தை விட்டுச் செல்வக் கேசவராயர் சென்னை, பெரம்பூரில் குடியேறினார். பி.ஏ., எம்.ஏ., முதலிய பட்டங்களைப் பெற்ற அவர்தம் கல்விமாட்சிக்கு அரசாங்க அலுவலைப் பெறுதலே சிறப்பாகும் என்று பலரும் வற்புறுத்தினர். செல்வக் கேசவரும் தம் வாழ்க்கையைச் செவ்வனே நடத்தற்பொருட்டு ஓர் அலுவல் துறையில் புகவேண்டிய நிலையில் இருந்தார். அதே வேளையில் தமிழ்த்தாய்க்குத் தக்க தொண்டு செய்ய வேண்டும் என்பதே அவரின் உள்ளக்கிடக்கையாக இருந்தது. செல்வக் கேசவராயர் பெற்றிருந்த ஆங்கில மொழித்திறம், செல்வாக்கும் ஊதியமும் மிக்க வேறு துறைகளை அன்று பெற்றுத்தரும் வாய்ப்புக் கொண்டிருந்தது. ஆனால் செல்வக்கேசவராயரின் உள்ளம் பெருமையையும் புகழையும் செல்வத்தையும் நாடவில்லை. பிறர்க்குப் போதித்தல் தம் அறிவு வளர்வதற்கும் தமிழ்த் தொண்டிற்கும் சிறந்த வழியாகும் என்பதை நன்குணர்ந்த செல்வக்கேசவர் ஆசிரியத் தொழிலை நாடினார். பச்சையப்பன் கல்லூரியில் குறிப்பாகத் தமிழாசிரியராகப் பணி செய்வதையே அப்பெருந்தகை விரும்பினார். இதனால் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் பதவி பெற்றார்.

அன்று ஆங்கிலத்தின் செல்வாக்கினால் தமிழ்மொழி வீழ்ச்சியடைந்திருந்தது. குறிப்பாகத் தமிழாசிரியர்கள் நன்கு மதிக்கப் பெறுவதில்லை. பேராசிரியருக்குத் திங்கள் ஊதியமே அறுபது வெண் பொற்காசுகள் தான். ஆங்கிலத்தில் பி.ஏ., எம்.ஏ.., முதலிய பட்டங்களைப் பெற்ற இவர், ஊதியக் குறைவை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. தமிழ்த்தொண்டு புரிதலையே தம் கடமையாகக் கொண்டார். இவர் புரிந்த செந்தமிழ்த் தொண்டு சிறந்ததாக விளங்கியது. இதனைக் கல்லூரித் தலைவர் முதலியோர் எண்ணி மதித்தனர். திங்களூதியம் இருநூற்றைம்பது வெண் பொற்காசுகளாக

ஏற்றம் பெற்றது. செல்வக்கேசவர் தமிழ் வளர்ச்சியையே பெரிதும் குறிக்கோளாகக் கொண்டு மாணவர்கட்குக் கல்வி போதித்தார். அவரின் இனிமை ததும்பும் விரிவுரையும் கனிவான பேச்சும் மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தன. குறும்பு செய்யும் மாணவர்களும் இவரின் போதனைத் திறனால் ஒழுங்கு நெறியில் நின்றனர்.

தம்மைப் போலவே தம் மாணவர்களும் பன்மொழிப் புலமை பெற வேண்டும் என்ற அவாவினால் பல மொழிகளையும் தம் வகுப்பில் போதித்தார். ஊதியம் பெறுவதற்காகப் பணி செய்யாமல், பணி செய்வதையே தம் கடமையாக எண்ணினார்.

இவர் சொற்பொழிவாற்றுதலிலும் வல்லவராய்த் திகழ்ந்தார். இவரின் சொற்பொழிவு திட்ப நுட்பஞ் செறிந்தும், நகைச்சுவையோடும் விளங்கியது. 'சளசள' வென்று, பொருளற்று, நீண்ட நேரம் பேசும் வழக்கம் இவரிடம் காணப்படவில்லை.

கல்லூரியில் பயில்விக்கும் பாங்கும், மாணவர்களோடு பழகும் பான்மையும், உணர்த்துவிக்கும் மேன்மையும், உள்ளத் தெளிவோடு உரைக்கும் இனிய சொற்களும் பச்சையப்பன் கல்லூரியில் செல்வக்கேசவராயரின் செல்வாக்கை மிகுவித்தன. மாணவர்களும் உடன் பணிபுரியும் ஆசிரியர்களும் அப்பெருமகனாரை, 'முதலியார்' என்று மிகுந்த பாசத்தோடும், உயர்ந்த மதிப்போடும் அழைத்து மகிழ்ந்தனர். இவரின் மாணவர்கள் பலர், ஆசிரியரைப் போலவே புகழ்பெற்ற தமிழறிஞர்களாய் விளங்கினர். அப்பெருமக்களுள், புகழ்பெற்ற தமிழறிஞர் தெ.பொ.மீ., சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகிய இருபெருமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழுணர்வு

ஒருமுறை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவிற்கு இவர் தலைமை தாங்கினார். அவ்விழாவில் ஓர் இளைஞன் ஆங்கிலக் கவிகளுக்கும் தமிழ்க்கவிகளுக்குமுள்ள குணங்களைப் பற்றி ஒரு கட்டுரை படித்தான். அதில் ஆங்கிலக் கவிகள் பாடிய பாட்டுக்களிலிருக்கும் இன்பம் போலத் தமிழ்க் கவிகளில் இன்பம் இராது என்று மொத்தத்தில் கூறினான். செல்வக்கேசவராயர் தலைமைச் சொற்பொழிவு செய்ய வேண்டிய காலம் வந்தபோது இளைஞனின் கூற்றை மிகவும் கண்டித்தார். தமிழ் அறிஞர்களுடைய பாட்டுகள் ஆங்கிலக்கவிகளுடைய பாட்டுகளை விட எந்த வகையிலும் குறைந்தவையல்ல என்று பல மேற்கோள் எடுத்துக்காட்டி மெய்ப்பித்தார். மகாகவி சேக்ஸ்பியர் தம் நாடகத்தின் ஓரிடத்தில்

'கண்டவுடன் காதல் கொள்ளாதார் பிறகு எப்பொழுதும் உண்மையில் காதல் கொள்ளாதவரே" என்று கூறியதை எடுத்துக் கொண்டு அவருக்கு 1500 வருடங்களுக்கு முன்பாகத் திருக்குறள் எழுதிய தெய்வப் புலமைத் திருவள்ளுவரின், "கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள், என்ன பயனுமில" என்னும் குறளையும் வைத்துக் கொண்டு இவற்றின் ஏற்றத் தாழ்வுகளைப் பற்றி ஏறக்குறைய கால் நாழிகை அழகாகப் பேசித் திருவள்ளுவருடைய குறளே மேம்பட்டது என்று கூறி முடித்தார்.

மற்றொரு முறை பல ஆங்கில அறிஞர்களும் தமிழ் அறிஞர்களும் கூடியிருந்த ஒரு பேரவையில் அறிஞர் ஒருவர் ஆங்கிலக் கவிகளைப் பற்றிப் புகழ்ந்து பேசி, லார்ட் பைரனின் (Lord Byron) Roll Roll on Roll thou dark blue ocean என்ற வரியைக் கூறி, "அதில் கடல் அலைகள் உருண்டு வருவதைப் பற்றி அவ்வோசையே நமது காதில் விழுவது போல் எவ்வளவு அழகாய் எழுதியிருக்கிறார்" என்று கூறியபோது செல்வக்கேசவராயர், புகழேந்திப் புலவர் எழுதிய பாட்டை எடுத்துக் கூறினார்.

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்-தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று.

"இந்தப் பாட்டில் கடல் அலைகள் ஒன்றின் பின் ஒன்றாய் வருவதும் போவதும் புரளுவதும் விழுவதும் இரங்குவதும் எவ்வளவு அழகாய் எழுதப்பட்டிருக்கின்றது. ஒருவன் கடற்கரையில் நின்று அலைகளைப் பார்ப்பதும் அலைகளின் ஓசையைக் கேட்பதும் போல நமது கண்முன் தோன்றும் படி புகழேந்திப் புலவர் எவ்வளவு அழகாய் வருணித்திருக்கிறார். லார்ட் பைரன் எழுதியதை விட இப்பாட்டு மேம்பட்டதல்லவா?" என்று கூறி முடித்தார். இவர் மேற்கூறியபடி தமிழ் மொழியானது மற்ற மொழிகளுக்குரிய புகழை விட எந்த விதத்திலும் குறைந்தபடியன்று என்று மெய்ப்பிப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். இதற்கேற்ப Parallel Proverbs என்னும் அரிய நூலை அச்சிட்டுள்ளார். அதில் ஆங்கிலத்திலுள்ள சிறந்த பழமொழிகள் ஒவ்வொன்றிற்கும் ஒப்பான அல்லது சிறிது மேம்பட்ட தமிழ்ப் பழமொழிகளை இணைத்து அச்சிட்டுள்ளார். தமிழ் மொழியின் வரலாறு என்னும் ஒரு நூலையும் இயற்றியுள்ளார்.

நூற்பணி

தமிழுக்குக் 'கதி' யாகத் திகழும் புலவர்கள் கம்பரும் திருவள்ளுவருமே எனக் கணித்துச் சொன்ன செல்வக்கேசவராயர், தமிழ் மொழியின் பால் ஆழ்ந்த பற்றுதல் கொண்டு விளங்கிய தோடல்லாமல், தமிழில் அளப்பரிய பெரும் புலமை கொண்டவராகவும் திகழ்ந்தார்.

காலந்தோறும் உரைநடை வளர்ச்சி பெற்று வந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது. செல்வக்கேசவருடைய காலத்தில் இப்போது உள்ளது போல் எண்ணற்ற உரைநடை நூல்கள் இல்லை. சில உரைநடை நூல்களே இருந்தன. ஆயின் அந்நூல்களின் நடைகள் முன்னேற்றம் அற்றவையாகக் காணப்பட்டன. செல்வக்கேசவர் உரைநடை வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற தொண்டு புரிய வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். அந்நாளில் புலவராய் இருந்தவர்கள் செய்யுள் இயற்றுவதற்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். உரைநடையின் பால் அவர்தம் கவனம் செல்லவில்லை. முதலில் செல்வக்கேசவராயர் எழுதிய "அக்பர்" என்னும் உரைநடைநூல் அறிஞர் பலருடைய பாராட்டுதல்களைப் பெற்றதோடு தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் வளமூட்டி வழிகாட்டியது.

கம்பநாடர், தமிழ், தமிழ் வியாசங்கள், வியாச மஞ்சரி, கண்ணகி சரித்திரம், கலிங்கத்துப் பரணி (கதா சங்கிரகம்), குசேலர், குசேலோ பாக்கியானம், அரிச்சந்திர புராணம், அபிநவக் கதைகள், திருவள்ளுவர், இராபின்சன் குரூசோ, மாதவ கோவிந்த ரானடே, பஞ்சலட்சணம் முதலியவை இவர் படைத்த இருபதுக்கும் மேற்பட்ட பெருநூல்களில் மிகு புகழ் கொண்டவையாகும். இந்நூல்கள் ஒவ்வொன்றிலும் செல்வக்கேசவராயருடைய பெரும் புலமைத் திறனைக் காண முடிகிறது.

இவருடைய தமிழ்நடை பொருட்செறிவுடையது; பழமொழிகள் நிறைந்தது. கம்ப நாடர், கண்ணகி சரித்திரம், திருவள்ளுவர் முதலியன முதன் முதலாகத் திறனாய்வு முறையில் எழுதப்பட்டவை.

அக்பர்

இறைமாட்சிக்குச் சரித்திரபூர்வமாக எடுத்துக்காட்டத்தக்க இந்திய அரசனான அக்பரைப் பற்றிய நூல். இந்நூலில் ஆப்கானிய முகம்மதியர், பாபர், ஹுமாயூன் ஆகியோர் பற்றிய செய்திகளும் அக்பர் அரசுபெற்றது, அக்பரின் அருள், இரக்கம், நடுவுநிலைமை,

வீரம் முதலிய குணவிசேஷம், வெற்றித் திறங்கள், கல்விச் சாலைகள், சித்திர வித்தை, சங்கீதம் உள்ளிட்ட எண்ணற்ற செய்திகளும் கூறப்பட்டுள்ளன. அவர் செய்த எண்ணற்ற சீர்திருத்தங்களையும் விரிவாகக் கூறுகின்றது இந்நூல்.

கம்ப நாடர்

'கம்ப நாடர்' என்னும் இவ்வுரைநடை நூல் திறனாய்வு முறையில் எழுதப்பட்டது. கம்பரைப் பற்றியும் அவர் இயற்றிய கம்பராமாயணத்தில் உள்ள சிறப்பியல்புகளைப் பற்றியும் சுவை நயங்களைப் பற்றியும் மிகத் தெளிவாக எழுதியுள்ளார். இந்நூலில் எழுதப்பட்டுள்ள அரிய கருத்துகள் பாராட்டத்தக்கனவாக இருப்பதுடன் நூலாராய்ச்சி செய்வோர் மேற்கொள்ள வேண்டிய முறையும், கேசவராயரின் புலமைத் திறமும் இந்நூலால் நன்கு விளங்குகின்றன.

கம்பராமாயணம் என்ற கடலைக் கடைந்து அதனின்று எடுத்த சாரமாகிய அமுதம் போன்ற இந்நூல், கம்பராமாயணத்தைக் கற்கப் புகுவார்க்கு அரிய முன்னுரையாக அமைந்துள்ளது எனலாம்.

தமிழ்

முதல்பாகம் தமிழ் சுய பாஷை; இரண்டாம் பாகம் தமிழருடைய முற்கால நிலைமை; இவ்விஷயங்களைப் பல திறங்களால் ஆராய்ந்து விரித்துரைப்பதானதொரு நூலாக அமைந்துள்ளது.

தமிழ் வியாசங்கள்

கல்வி-செய்யுள்-நட்பு- சுகாதாரம் - செல்வம் - வசனம் - சாதுரியம் என்னும் பொருள்களைப் பற்றியும் ஆங்கிலம், தமிழ் நூல்களின் சாராமிசங்களையும், அனுபவத்திலறிந்த செய்திகளையும் தொகுத்து இடையிடையே பொருத்தமான முதுமொழிகளையும், மேற்கோள்களையும் காட்டி எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கியது.

வியாசமஞ்சரி

திமிரி சபாபதி முதலியாரால் சிறுவர் சிறுமியருக்கு உபயோகமாக எளிய நடையில் எழுதப்பட்ட நூல் நற்புத்திபோதம். இந்நூல் நெடுங்காலமாக இரண்டாம் பதிப்பின்றி வீணாய்ப் போவதைக் கண்டு, ஓரோவிடத்தில் சில தொடர்களையும் சில வாக்கியங்களையும் விடுத்தும், கலியாணஞ் செய்து கொள்ளுதல் என்னும் பகுதியில் இளைஞர்களுக்கு அவசியமில்லாத சில பகுதிகளை விடுத்தும், தர்மம் செய்தல், வீண் செலவு செய்தல் என்கிற

பகுதிகளில் பெரும்பாகம் விட்டுவிடுவது தகுதியாகத் தோன்றினமையால் விடுத்தும் மிகுந்த பாகத்தைப் பணஞ்சம்பாதித்தல் என்கிற பகுதியில் சேர்த்தும், வியாசமஞ்சரி என்னும் புதுப்பெயருடன் பதிப்பித்துள்ளார். இதில் அடங்கியுள்ள வியாசங்கள் - காலையில் எழுதல் - கடவுளைத் தொழுதல் - உலாவப் போதல் - கல்வி கற்றல் - சினேகஞ் செய்தல் - பணஞ்சம்பாதித்தல் - கலியாணம் செய்து கொள்ளுதல் என்பனவாகும். ஜன விநோதினியிலிருந்து ஐந்து வியாசங்கள் எடுத்துப் புதுக்கியும் திருத்தியும் 1-ஆவது அனுபந்தமாகச் சேர்த்துள்ளார். அவை கைத்தொழில் - மனிதர்க்குள்ள பரஸ்பர சம்பந்தம் - காலதாமதம் - சம்பாஷணை - உழைப்பின் சிறப்பு என்பன. சில வழக்குத் தொடர்மொழிகளை அகராதியாக 11-ஆவது அநுபந்தமாய்ச் சேர்த்துள்ளார்.

கண்ணகி சரித்திரம்

மகா பதிவிரதையான கண்ணகி வரலாற்றைப் பஞ்ச காவியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு உரைக்கும் நூல். கல்லூரி மாணவர்களும், எளிதில் செய்யுளைப் படித்தறிய ஒழிவில்லாத பிறரும், சிலப்பதிகாரத்தின் சாரத்தை எளிதில் அறியும் பொருட்டு, சரிதத்திற்கு அங்கமான அனைத்தையும் இயன்ற வரையில் தழுவி, உரைநடையில் எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தைப் பின்பு படித்து இன்புறுவதற்கு, 'கண்ணகி சரித்திரம்' என்ற இந்நூல் ஒருவாறு கருவியாகக் கூடும் எனலாம்.

கலிங்கத்துப்பரணி (கதாசங்கிரகம்)

குலோத்துங்கச் சோழன் தன் மந்திரியான கருணாகரத் தொண்டைமானைக் கொண்டு கலிங்க தேசத்தை வெற்றிகொள்ள, ஜயங்கொண்டார் அவ்வெற்றியைச் சிறப்பித்துப் பாடிய பரணிப் பிரபந்தத்தை உரைநடையில் சுருக்கி எழுதியுள்ளார்

குசேலோபாக்கியானம் & அரிச்சந்திர புராணம்

இந்நூல்கள் மூலத்தின் முக்கியமான பகுதிகளைத் தழுவியும் அவசியமில்லாத சங்கதிகளை விலக்கியும், உரை இடையிட்டு, எளிதில் படித்தறியும்படி சுருக்கமாய் அமைந்துள்ளன.

திருவள்ளுவர்

திருவள்ளுவருடைய காலத்தையும், அவர் திறத்தையும் நோக்கத்தையும், திருக்குறளின் போக்கையும் ஒருபுடை ஆராய்ச்சி செய்வதான ஒரு நூலாகப் படைத்துள்ளார்.

பஞ்சலட்சணம்

மாணவர்கள் தமிழிலக்கணத்தை எளிதில் கற்குமாறு, எழுத்தையும் சொல்லையும் வாக்கியத்தையும் பற்றிய நன்னூல் சூத்திரங்களை (உதாரணங் காட்டாமல்) முன்பின், பின்முன்னாக ஏற்றபடி வரிசைப்படுத்தியுள்ளார். மற்றும் அணியையும் யாப்பையும் சுருக்கமாக உதாரணங்களுடன் உரைநடையில் எழுதிப் பொருளின் பாகுபாட்டையும் இயல்பையும் விளக்கியுள்ள இலக்கணச் சுருக்கமாக அமைகிறது.

குசேலர்

கண்ணனுக்கு ஒரு சாலை மாணாக்கரான குசேலர் தன் மக்கள் படுகின்ற வறுமைத் துன்பத்தைக் கருதி மனைவி செய்த விண்ணப்பத்தால், துவாரகை சென்று கண்ணனைக் கண்டு அருள்பெற்ற பாகவதபுராணக் கிளைக்கதையே இந்நூலாய் வடிவெடுத்துள்ளது.

இராபின்சன் குருஸோ

ஓர் ஆங்கிலேயன் அமெரிக்காவை அடுத்த ஆளில்லாத ஒரு தீவில் விடப்பட்டு அங்கே நெடுங்காலம் தனியாய் ஜீவித்திருந்ததாக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு கதையின் சுருக்கம். இதனைச் செல்வக் கேசவராய முதலியார் சிறுவர் சிறுமியரும் படித்தறியுமாறு எளிய நடையில் எழுதியுள்ளார்.

அபிநவக் கதைகள்

இதில் ஆறு கதைகள் அடங்கியிருக்கின்றன.

கற்பலங்காரம் : ஓர் அரசன் தான் விவாகம் செய்து கொண்ட ஓர் எளிய மாதின் கற்பைப் பரிசோதிக்குமாறு செய்த கொடுமைகளும், அவற்றிற்கு ஈடுகொடுத்துத் தன் கற்பை நிலைநாட்டி, அவள் கற்பலங்காரியெனப் புகழப் பெற்றதுமாகிய செய்திகளை விவரிக்கிறது இக்கதை.

தனபாலன் : தான் செய்துவந்த கொடுக்கல் வாங்கல் வியாபாரத்தில் கள்ளக் காசுகள் கலந்திருந்ததனால் மரணதண்டனை அடைந்த ஒருவனைத் தூக்கிலிடுகிற சமயத்தில், அந்த மோசத்துக்குக் காரணன் இன்னான் என்பது வெளியாகித் தண்டனையினின்றும் விடுபட்ட கதை.

கோமளம் : மகாகவி சேக்ஸ்பியரின் ஸிம்பலின் நாடகத்தைத் தமிழ்ச் சிறுவர்களுக்கேற்றவாறு எழுதிய ஒரு பதிவிரதையின் கதை.

சுப்பையர் : சென்னைச் சிங்காரவனத்தில் ஒரு காலத்தில் சந்தைக் கடைகள் தீப்பற்றிய போது காணாமல் போன ஒருவன், உத்திரகிரியைகளெல்லாம் நடந்தபின் திரும்பி வந்த ஓர் உண்மைக் கதை.

கிருஷ்ணன் : விடுமுறையில் தாய் தந்தையரைப் பார்க்கப் போயிருந்த சகோதரர் இருவரில் ஒருவன், உரிய நாளில் கல்விச்சாலைக்குத் திரும்பாமல் ஒரு நாள் தாமதிக்கும் பொருட்டுச் செய்த மோசத்தில் விளைந்த விபரீதத்தை விரித்துரைப்பது.

ஆஷாட பூதி : பல உபகாரம் செய்த சினேகிதருக்கு அந்தரங்கத்தில் செய்த துரோகத்தை விரித்துரைக்கும் கதை.

பதிப்பித்தல்

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும், தமிழின் உரைநடை வளம் செழிக்கச் செய்த தமிழறிஞர்களுள் முதலியார் முதன்மைச் சிறப்புப் பெற்று விளங்கினார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் திறமும் உரமும் பெற்றிருந்த செல்வக்கேசவரராயர், தமிழின் உரைநடையை வளப்படுத்திய பேரறிஞராய்ப் பெருமையும், பெரும்புகழும் பெற்று விளங்கியதோடு பதிப்பாசிரியராகவும் பெரும் புகழ் பெற்றார். 'ஆசாரக் கோவை', 'அறநெறிச் சாரம்', 'முதுமொழிக் காஞ்சி', 'அரிச்சந்திர புராணம்', 'பழமொழி' ஆகியவை அப்பெருமகனாரால் பதிப்பிக்கப் பெற்ற சிறப்புப் பெற்றவை.

ஆசாரக் கோவை : பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான 'ஆசாரக் கோவையை' 1893-இல் சென்னை செங்கல்வராய நாயக்கருடைய அனாதை அச்சுக்கூடத்தில் திருத்தங்களுடன் பதிப்பித்துள்ளார். இதன் இரண்டாம் பதிப்பு 1898இலும் மூன்றாம் பதிப்பு 1918இலும் நான்காம் பதிப்பு 1934இலும் வெளிவந்துள்ளது. முன் பதிப்புகள் பழைய உரையோடு ஒருவாறு 'கண்ணழிவு மாத்திரம் செய்து' கருத்துரையும் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றன. இவர் தில்லையம்பூர் சந்திரசேகர கவிராய பண்டிதர் 1857இல் பதித்த அச்சுப்படியையும், தி. கனகசுந்தரம் பிள்ளை உதவிய படியேட்டையும் சேர்த்து ஒப்பிட்டுப் பார்த்துச் சில வெண்பாக்களுக்கு உரை வேறுபாடுகளை எடுத்துக் காட்டிப்

பொருளட்டவணை, அரும்பத அகராதி ஆகியவற்றுடன் பதிப்பித்துள்ளார். ஆங்கிலத்தில் முன்னுரையும், தமிழில் பதிப்புரையும் கொடுத்துள்ளார்; பாட்டு முதற்குறிப்பகராதியும் தரப்பட்டுள்ளது.

முதுமொழிக் காஞ்சி : 1919இல் முதற் பதிப்பும் 1933இல் இரண்டாம் பதிப்பும் இவர் வெளியிட்டுள்ளார். இதில் பதினெண் கீழ்க்கணக்கு விளக்கமும் மூலமும் உரையும் தரப்பட்டுள்ளன.

அறநெறிச் சாரம் : இவர் இதனை 1905 இல் முதற்பதிப்பாகவும் 1912, 1919, 1936இல் முறையே இரண்டாம், மூன்றாம், நான்காம் பதிப்புகளாகவும் வெளியிட்டுள்ளார். இதில் மூலம், பாடபேதம், அரும்பொருள் விளக்கம், அறநெறிச்சார அனுபந்தம் அமைந்துள்ளன.

சில பாக்கள் பொருள் இதுவோ அதுவோ எதுவோ என்று துணியலாகாமல் இருந்தன. அப் பாக்களையும் அறியாமையால் விடுபட்ட வழுக்களையும், வேறு பிரதியுடையவர் கண்டுபிடித்து வெளியிடுதல் வேண்டும் என்றும், அன்னோர் அது செய்து வேறொரு பதிப்பு அச்சிடுவதாயின், தம்மிடத்தில் மீதியிருக்கும் அச்சுப் பிரதிகளை அழித்துவிட ஆயத்தமாக இருப்பதாகவும், 'இதுவே தாம் இறுக்கும் தண்டனை' என்றும் அவர் தமது முகவுரையில் தெரிவித்திருக்கிறார். இது அவரது கரவில்லா உள்ளத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

முதல் பகுதியாகத் தமிழ்ப் பழமொழிகட்கு நேரான ஆங்கிலப் பழமொழிகளும், இரண்டாம் பகுதியாக ஆங்கிலப் பழமொழிகட்கு நேரான தமிழ்ப் பழமொழிகளும் அகர வரிசையில் அமைக்கப்பெற்ற அரியதொரு நூலொன்றையும் (234 பக்கங்கள் கொண்டது) 1903ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

தனித்தமிழ் ஆர்வம்

தமிழ் மொழியைத் தம் உயிரினும் மேலானதாகக் கருதிய செல்வக் கேசவராய முதலியார், தனித்தமிழ் ஆர்வம் கொண்டு, தமிழ் இலக்கியங்களில் வடமொழிக் கலப்பின் தன்மையை ஆய்ந்துணர்ந்து அறிவிக்கவும் செய்தார். தமிழ் நூல்களில் எத்துணை விழுக்காடு வடசொற்கள் விரவியுள எனக் கணக்கெடுத்துக் கொடுக்கிறார். ஔவையார் பாடலில் நூற்றுக்கு எட்டும், குறுந்தொகையில் நூற்றுக்கு நான்கும், வடமொழிச் சொற்கள் வந்துள்ளன என்றார். மேலும் நான்மணிக் கடிகையில் இருபது சொற்கள், திருக்குறளில் அதிகாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு சொற்கள், நாலடியாரில்

ஐந்து பாடல்களுக்கு ஒரு சொல், கல்லாடத்தில் பாட்டுக்கு ஐந்து, பத்துப் பாட்டில் ஐந்து, என்றெல்லாம் ஒவ்வொரு நூலாகக் கற்றுத் தெளிந்து, அவை பெற்றிருந்த வடமொழிக் கலப்பை எண்ணி, வரையறை செய்து தமிழுலகம் அறியச் சொன்னவர், செந்தமிழ் ஆர்வலர் தி. செல்வக் கேசவராய முதலியார் ஆவார். "பழந்தமிழ் நூல்களில் பிழை எனத் தான் கண்டுணர்ந்து கூறினால் பேரறிஞர்கள் தன்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள்?" என்ற அச்சம் சிறிதும் இல்லாமல், நக்கீரப் பார்வையுடன் வடமொழிக் கலப்புள்ளவை இவையிவை என்று பட்டியலிட்டுக் காட்டிய திறம் இவரின் தமிழ்க் காதலை உலகுக்கு உணர்த்துகிறது. தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்த செல்வக்கேசவராயர் தமிழ் மொழியின் முதன்மையையும் பெருமையையும் உலகிற்கு நன்கு எடுத்துக்காட்டிய தனித்தமிழ் ஆர்வலராய் விளங்கினார்.

பன்முகச் சிறப்பு

அப்பெருமகனார், 'கம்பனைப் போல், திருவள்ளுவனைப் போல் ஒரு கவிஞன் உலகத்தில் இதுவரை தோன்றவில்லை' எனும் மதிப்பீட்டை ஆழமாக அறிவிலும் உணர்விலும் பெற்றவர். 'தமிழனாகப் பிறந்ததே பெரும் பேறு' என்று எண்ணி வாழ்ந்தார். கல்லூரியில் படிக்கின்ற போதே ஆங்கில இலக்கியங்களையும், தமிழ் இலக்கியங்களையும் 'ஒப்பீடு' செய்து படிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த செல்வக்கேசவரின் உள்ளம் தமிழ் மொழியையே பெரிதும் போற்றியது. தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்த இவர், தம் மாணாக்கர்க்குத் தமிழ்ப் பற்றினை உண்டாக்கிய நல்லாசிரியராகவும் விளங்கினார். புகழ்மிக்க தமிழாசிரியராகவும் போற்றுதலுக்குரிய நூலாசிரியராகவும், சீரிய சொற்பெருக்காளராகவும், தேர்ந்த கட்டுரையாளராகவும் பாராட்டத்தக்க பதிப்பாசிரியராகவும் திகழ்ந்த பன்முகச் சிறப்புடைய இப்பெருந்தகை, தனித்தமிழ் ஆர்வலராகவும் விளங்கினார்.

பயன்படுத்திய நூல்கள்

செல்வக்கேசவராய முதலியார் தாமும் தம் தந்தையார் புலவர் கேசவசுப்பராய முதலியாரும் ஆராய்ச்சிக்குத் தொகுத்து வைத்திருந்த 500க்கும் மேற்பட்ட பழம் பதிப்பு நூல்கள், செல்வக் கேசவராயரின் பேரன்மார்களில் ஒருவரான திரு. நம்பிராசனால் பெருவிருப்பத்தோடு சென்னை, மறைமலையடிகள் நூல் நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அந்நூல்களில் மேலைநாட்டுத் தமிழ்ப் பேரறிஞரும், திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய நூல்களை மொழி

பெயர்த்தவரும் 88ஆவது அகவை வரை தமிழ்த் தொண்டாற்றியவரும், தமது கல்லறையில் 'தமிழ் மாணவன்' என்று பொறிக்கும்படி கூறியவருமான ஜி.யு. போப் பயன்படுத்திய (உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த) புறநானூறும், பழமொழி நானூறு சொற்கோவை ஏடுகளும், 201 முதல் 400 பாட்டுகள் வரையுள்ள ஏடொன்றும் கிடைக்கப்பெற்றன. 1 முதல் 200 வரை எழுதப் பெற்ற ஏடு மறைந்து போயிற்றாம். 201 முதல் 400 பாட்டுகள் அடங்கிய கையெழுத்துப் புத்தகத்திலே 67 பாடல்களுக்குப் போப் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பு உள்ளது. முதற் பகுதியிலும் சில பாடல்களுக்கு மொழிபெயர்ப்பு இருந்திருக்கும். ஆனால் அக்கையெழுத்துப்படி காணப்பெறாதது மிகவும் வருத்தத்திற் குரியதாகும்.

இப் புறநானூற்று உரைநூலில் கழகம் வெளியிட்ட 'Tamil Heroic Poems' என்ற நூலில் இல்லாத இரண்டு பாடல்கட்கு போப் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பு காணப்பட்டது.

அகவை முதிர்ச்சியினால் பழமொழி நானூறு, புறநானூறு ஆகிய இரண்டையும் போப் பேராசிரியர் செல்வக்கேசவராயருக்கு அனுப்பி எஞ்சிய பாட்டுகளுக்கும் ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடுமாறு எழுதியிருத்தல் வேண்டுமென்று ஊகிக்க வேண்டியதாகின்றது. கடிதப் போக்குவரவு இருந்திருக்க வேண்டும். அவை போற்றிப் பாதுகாக்கப்பெறாமையால் கிடைக்கப் பெறவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு நூல்களும் மறைமலையடிகள் நூல் நிலையத்திலே போப் ஆராய்ந்து எழுதிய மற்ற நூல்களோடு சேர்த்து வைக்கப்பட்டுள்ளன.

நிறைவு

தமிழ் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாளில் மிகுதியான நாட்களைச் செலவிட்ட செல்வக்கேசவராயர் 1921ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாள் தமது ஐம்பத்தேழாவது அகவையில் இவ்வுலகை விட்டு மறைந்தார். செல்வக்கேசவராயரின் மறைவு அவருடைய மாணவர்களின் உள்ளத்தையும் தமிழ் ஆர்வலர்கள், பொதுமக்களின் உள்ளத்தையும் பெரிதும் வருத்தியது. அவருடைய பூதவுடல் மறையினும் புகழுடல் நிலைபெற்று விளங்குகின்றது. அப்பெருந்தகையின் தமிழ்த் தொண்டும், தமிழுணர்வும் என்றென்றும் தமிழ் நெஞ்சங்களால் நன்றிப் பெருக்கோடு வணங்கத்தக்கவை; வழிபடத்தக்கவை; வழிகாட்டத் தக்கவையுமாகும்.

தி. செல்வக்கேசவராயரின் படைப்புகளும் பதிப்புகளும்

1. **அக்பர்**, சென்னை : கி.க.அ. சங்கத்தாரின் அச்சுக்கூடம், 1931.

2. **அபிநவக் கதைகள்:** (Tamil Novelettes), சென்னை : திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1921.

3. **இராபின்சன் குரூசோ** (Robinson Crusoe), சென்னை; கி.க.அ. சங்கத்தாரின் அச்சுக்கூடம், 1915.

4. **கண்ணகி சரித்திரம்** (Kannaki Charithiram) சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; 1947.

5. **கம்ப நாடர்** (ஆய்வு நூல்); சென்னை ; திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்; 1974.

6. **கலிங்கத்துப் பரணி** (கதா சங்கிரகம்); சென்னை ; திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1928.

7. **தமிழ் வியாசங்கள்** (Tamil Essays); சென்னை; திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1945.

8. **திருவள்ளுவர்** (Thiruvalluvar a study); சென்னை ; டயோசீசன் அச்சுக்கூடம்; 1934.

9. **பஞ்சலட்சணம்** (Manual of Tamil Grammar); சென்னை ; திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1922.

10. **முதுமொழிக் காஞ்சி**, (தி. செல்வக்கேசவராயர் விளக்கவுரையுடன்), சென்னை; டயோசீசன் அச்சுக்கூடம்; 1933.

11. **வியாச மஞ்சரி** (அல்லது) நற்புத்தி போதம், (Simple Essays in Tamil); சென்னை ; திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1921.

துணை நூல்கள்

1. யான் கண்ட புலவர்கள், பம்மல் சம்பந்த முதலியார், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1962.

2. புலப்பாட்டு நெறி, பி.தெட்சணாமூர்த்தி, இலஞ்சியார் பதிப்பகம், திருநெல்வேலி, முதற்பதிப்பு, 1984.

3. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மது. ச. விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

4. உரையாசிரியர்கள், மு.வை. அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1995.

5. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு, 1980.

6. கலைக்களஞ்சியம், தொகுதி ஐந்து, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1958.

7. தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள், குன்றக்குடி பெரிய பெருமாள்

8. கம்ப நாடர், தி.செல்வக்கேசவராய முதலியார், சென்னை, கழக வெளியீடு, ஆண்டு 1974.

❄❄❄❄❄

படைப்புத்திறன்

ஆ. மணவழகன்

செல்வக்கேசவராய முதலியார் முதன் முதல் எம். ஏ., தமிழ்ப் பட்டம் பெற்றவர். பச்சையப்பன் கல்லூரிமாணவர். அக்கல்லூரியிலேயே தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றியவர். மாணவர்களுக்குத் தமிழ்ப்பற்றினை உண்டாக்கியதோடு அவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களை எளிதில் கற்க வேண்டும் என்ற நோக்கில், அதற்கான வழிவகைகளைச் செய்தவர். சீரிய சொற்பெருக்காளர். சிறந்த உரைநடையாளர். தேர்ந்த கட்டுரையாளர். தொடக்கத்தில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வளமூட்டி வழிகாட்டியவர். சிறந்த ஆராய்ச்சியாளர். தம் கருத்தைத் தக்க சான்றுகாட்டி நிறுவும் வன்மையாளர்.

படைத்த நூல்கள்

செல்வக்கேசவராயர் படைத்த நூல்களாகத் தமிழ், தமிழ் வியாசங்கள், வியாசமஞ்சரி, திருவள்ளுவர், கண்ணகி சரித்திரம், அக்பர், அபிநவக் கதைகள், இராபின்சன் குருசோ, மாதவ கோவிந்த ரானடே, பஞ்சலட்சணம், கலிங்கத்துப்பரணி உரைநடை ஆகியவை அறியப்படுகின்றன.

படைப்புத்திறன் காணப் பயன்பட்ட நூல்கள்

செல்வக்கேசவராய முதலியார் படைத்த நூல்களுள் கிடைத்த நூல்களான திருவள்ளுவர், அக்பர், கண்ணகி சரித்திரம், கலிங்கத்துப்பரணி உரைநடை, வியாசமஞ்சரி, பஞ்சலட்சணம் என்ற

படைப்புகளின் வழி அவர்தம் படைப்புத்திறன் இக்கட்டுரையில் வெளிக் கொணரப்படுகிறது.*

கட்டுரை அமைப்பு

இக்கட்டுரையானது, அவர் படைத்த நூல்களுள் ஆறு நூல்களைக் கொண்டு படைப்புத் திறனை வெளிக்காட்டுவதாக அமைகிறது. அதற்கேற்பப் படைப்புகளை ஆய்வு நோக்கில் அமைக்கும் போக்கு, நூலின் சிறப்புகளை வெளிக்கொணரும் பாங்கு, தக்க ஆதாரங்களோடு மறுக்கும் பண்பு, நிறைகுறை காணும் தன்மை, கையாளும் உத்திமுறைகள், பன்னூல் பயிற்சியும் பன்மொழிப் புலமையும் என்னும் தலைப்புகளின் கீழ் அவர்தம் படைப்புத்திறனை வெளிக்காட்டித் தொகுப்புரையுடன் கட்டுரை நிறைவு செய்யப்படுகிறது.

நூல்கள் அறிமுகம்

திருவள்ளுவர்

கட்டுரை அமைப்பில் திருக்குறளின் சிறப்பை வெளிக்கொணர்வதோடு, திருவள்ளுவர் காலத்தையும், நூற்திறத்தையும், வள்ளுவர் நோக்கத்தையும், திருக்குறள் அமைப்பையும் ஆய்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

கலிங்கத்துப்பரணி

குலோத்துங்கச்சோழன் தன் மந்திரியான கருணாகரத் தொண்டைமானைக் கொண்டு கலிங்கதேசத்தை வெற்றி கொள்ள, ஜயங்கொண்டார் அவ்வெற்றியைச் சிறப்பித்துப் பாடிய பரணிப்பிரபந்தத்தை வசன நடையில் சுருக்கி எழுதியது.

வியாசமஞ்சரி

சிறுவர் சிறுமியருக்கு உபயோகமாகத் திமிரி சபாபதி முதலியார் என்பவர் சென்ற நூற்றாண்டின் இடையில் சில வியாசங்களை எளிய நடையில் எழுதி அச்சிட்ட நற்புத்திப்போதம் என்னும் நூலை அடியொற்றிப் பல புதிய போதனைகளையும் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. இதில், காலையில் எழுதல், கடவுளைத்

செல்வக்கேசவராய முதலியாரின் நூல்கள் பார்வைக்கு அரிதான நிலையில், அவர் கைப்பிரதியாகப் பயன்படுத்திய படைப்புக்களை, அவரின் வழித்தோன்றல்களின்வழிப் பெற்றுப் பாதுகாத்து வைத்திருப்பதோடு, இக்கட்டுரைக்கான குறிப்புகள் எடுக்கக் கொடுத்துதவிய 'மறைமலை அடிகள் நூலகத்தார்க்கு' நன்றி நவில்வது இவண் கடமையாகிறது.

தொழுதல், உலாவப்போதல், கல்விகற்றல், சினேகஞ்செய்தல், பணஞ்சம்பாதித்தல், கல்யாணஞ்செய்துகொள்ளுதல் போன்ற தலைப்புகள் இடம்பெற்றுள்ளன. ஜனவிநோதினியிலிருந்து ஐந்து கட்டுரைகள் எடுத்துத் திருத்தியெழுதியும், பதிப்பித்தும் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை, கைத்தொழில் - மனிதர்க்குள்ள பரஸ்பரசம்பந்தம் - காலதாமதம் - சம்பாஷணை - உழைப்பின் சிறப்பு என்பன. சில வழக்குத் தொடர்மொழிகள் அகராதியாக இரண்டாவது பின்னிணைப்பாய்ச் சேர்க்கப் பட்டுள்ளன.

கண்ணகி சரித்திரம்

கண்ணகியின் வரலாறு சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு உரைநடை வடிவில் எளிமையாக உரைக்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் எடுத்துக்காட்டு நிகழ்ச்சியாக வரும் சில சம்பவங்கள் கண்ணகி சரித்திரத்தில் கதைப் போக்கிலேயே இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன.

அக்பர்

இந்நூலானது, அக்பரின் சரித்திரத்தை உரைப்பது. இந்நூல் முற்றிலும் கால அடிப்படையில் அக்பரின் வரலாற்றைக் கூறுவதாக அமையாமல் நிகழ்ச்சிகளின் தொகுப்பாக அமைந்துள்ளதால், படிப்பவர் ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளது.

பஞ்சலட்சணம்

இந்நூல் தமிழின் ஐந்திலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவற்றைக் கூறும் இலக்கணக் கையேடாக அமைந்துள்ளது. 'எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கற்பிக்கத்தக்க முறையாக நன்னூல் சூத்திரங்களை வகைப்படுத்தித் தொகுப்பது இவ்விலக்கணச் சுருக்கத்தின் நோக்கம்' என்ற இந்நூலின் முகவுரையிலிருந்தே இந்நூலின் தன்மையை அறியலாம். எழுத்தையும், சொல்லையும் சூத்திரத்தோடு விளக்கி, மற்ற இலக்கணங்களான பொருள், யாப்பு, அணி என்பனவற்றைச் சூத்திரங்காட்டாமல் உரைநடையாக அமைத்துச் செல்கிறது இந்நூல்.

தமிழ்ப் பற்று

செல்வக்கேசவராய முதலியார் சிறந்த தமிழ்ப்பற்றாளராக விளங்குகிறார். தமிழ் இலக்கியங்களில் எவ்வெவற்றில் எத்தனை எத்தனை வடசொற்கள் கலந்துள்ளன என்று பட்டியலிட்டுக்

காட்டுவதிலிருந்தே இவ்வுண்மையை உணரலாம். திருவள்ளுவரைப் பற்றிக் கூறுமுகத்தான் ‘தமிழுக்குக் கதியாவார் இருவர் எனச் சில புலவர் புகல்வதுண்டு, கதி என்பதில் கஃகானைக் கம்பநாட்டாழ்வாருக்கும், திஃகானைத் திருவள்ளுவருக்கும், ஞாபகச் சூத்திரமாகக் கொள்ளல் வேண்டும்’[1] என்கிறார். இதில் அவர்தம் தமிழ்ப்பற்றும், தமிழிலக்கியப் படைப்பாளர்கள் மீதுள்ள பற்றும் வெளிப்படுகிறது.

‘எவ்விதத்திலாவது பிள்ளைகள் எளிதில் இலக்கணங் கற்றுத் தமிழைப் போற்றுதல் வேண்டுமென்பதே இந்நூலை அச்சிடுதலான விருப்பம்’[2] என்று, தமிழ் மொழியிலான ஈடுபாட்டினை எவ்வகையிலாவது பிள்ளைகள் மனதில் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆதங்கத்தினைத் தமது பஞ்சலட்சணம் நூல் முகவுரையில் வெளிப்படுத்துவதிலிருந்தும், ‘தமிழர்க்கு உதவியாகத் தமிழ் வல்லுநர்கள் செய்ய ஒரு தலையான பல வேலைகள் ஏற்பட்டுவருகின்றன. அது செய்யாத வரையில் அவர்கள் பாஷாபிமானமும் தேசாபிமானமும் இல்லாதவர்களென்று பழிக்கப்படுவர். இப்பழியை ஒழிக்கும் பொருட்டுத் தமிழிலக்கிய விலக்கணங்களை மாணவர்கள் எளிதிலறிந்து பயின்று புலமை நிரம்பும்படி செய்வது இயற்றமிழாசிரியர்களைப் பொறுத்த கடமை. இக்கடமையைக் கடைபோகச் செலுத்துமாறு தமது அறிவாற்றலாலும் அனுபவ சித்தியாலும் தோன்றுகின்ற முறைகளை இவர்கள் மேலும் மேலும் பின்பற்றுவாராக. இது செய்யாவிடின் இவர்கள் கூலிக்கு மாரடிப்பவரே யாவர்’[3] என்பதிலிருந்தும் இவரின் தமிழ்ப்பற்றினை அறியலாம். மேலும், தமிழின் இனிமையும், பெருமையும், சிறப்பும், வனப்பும், வளமும் எல்லோருக்கும் எளிய முறையில் எட்ட வேண்டும் என்ற இவரின் விருப்பமும் இதில் வெளிப்படக் காணலாம்.

பஞ்சலட்சணம் நூலில் வடசொல் பற்றிக் கூறுமிடத்து, வடமொழியில் இருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்களைப் பட்டியலிட்டுக் காட்டுவதோடு, அவற்றிற்குப் பொருத்தமான தமிழ்ச்சொற்களையும் வழங்குகிறார். இதில் சுமார் 175 வடமொழிச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச்சொற்களையும் கொடுத்துள்ளார். சௌக்கியம் என்ற சொல்லிற்கு மட்டும் பொருத்தம் காணாமல் விடுகிறார். மேலும், சில வடமொழிச் சொற்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களைக்

1. திருவள்ளுவர் ப.7.
2. பஞ்சலட்சணம். புதிய பதிப்பின் முகவுரை
3. பஞ்சலட்சணம். புதிய பதிப்பின் முகவுரை.

கொடுத்துள்ளார். காட்டாக, சேஷம் என்பதற்கு மிச்சம், எச்சம் என்ற இரண்டு சொற்களையும், பரிசம் என்பதற்குத் தொடுதல், ஊறு என்ற இரண்டு சொற்களையும், சேதம் என்பதற்குக் கேடு, நட்டம், பிரிவு[1] என்ற மூன்று சொற்களையும் பொருத்தம் காணுகிறார்.

தமிழில் படைக்கப்படும் படைப்புகளில் பெரும்பாலும் வடசொற்களைத் தவிர்த்தலே சிறப்பு என்பது இவரின் கருத்து. அப்படிப்பட்ட இலக்கியங்களே சிறந்தவை என்கிறார். இதனை, கலிங்கத்துப் பரணியின் சிறப்பைப் பற்றிக் கூறுமிடத்து 'உலகவழக்கான சிலசொற்களையும் தொடர்களையும் இடைப்பெய்தும், இவர் வாக்கானது சொற்கட்டுத்தளராமல் இருக்கின்றது. வடசொல்வழக்கு அருகியிருப்பதும், இந்நூலின் சிறப்பியல்புகளில் ஒன்று'[2] என்கிறார். தமிழ்ப் படைப்பாளர்கள் பிறமொழிக் கலப்பைத் தவிர்த்தல் நலம் என்ற இவரின் தமிழ்ப்பற்றை இது தெளிவாக்குகிறது.

படைப்புகளை ஆய்வு நோக்கில் அமைக்கும் போக்கு

செல்வக்கேசவராய முதலியாரின் படைப்புகள் பெரும்பாலும் ஆய்வு நோக்கில் அமைந்துள்ளன. தம் கருத்தைப் பலவகையிலும் சான்றுகாட்டி நிறுவும் தன்மையினை இவர் படைப்பில் காணமுடிகிறது.

இவர் படைப்புகளில் கால ஆய்வுகள், பெயர்க்காரண ஆய்வுகள், இட ஆய்வுகள், கதாபாத்திர ஆய்வுகள், படைப்பாளர் சமயம் பற்றிய ஆய்வுகள், பாடபேத ஆய்வுகள், நிறை குறை ஆய்வுகள் போன்றன நிகழ்த்தப்பட்டுள்ளன. இவர்தம் படைப்புகள் மூல நூலைத் தழுவியதாக இருப்பின், மூலநூலாசிரியனின் கருத்தில் இருந்து கூடியமட்டும் பிறழாமல் தம் கருத்தை அமைத்துச் செல்கிறார். 'கவிவாணர் பாட்டிலமைத்த பழம் பொருளை அறிவதரிதாகலின், நூலை ஓதுகின்றவர்களும், நூற்கு உரை காண்கின்றவர்களும், இயன்றமட்டில், அவ்வந்நூலாசிரியருடைய கருத்தை உய்த்துணர்தல் வேண்டும். அங்ஙனமன்றி இவர் தத்தம் மதத்தை நூலிலேற்றி யுரைத்தலும், நூல் தம் மதத்துக்கு இடங்கொடாவிடின் வலிந்தும் நலிந்தும் பொருள் கோடலும், பாடபேதம் பண்ணுதலும், அவமேயான காரியங்களாம்.'[3] என்ற இவரின் வாதத்தின் அடிப்படையிலேயே இவர்தம் படைப்புகளும் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

---

1. பஞ்சலட்சணம் பக்.31-34.
2. கலிங்கத்துப்பரணி பக்.8-9.
3. திருவள்ளுவர் ப.22.

கால ஆய்வு

திருக்குறளின் காலம் பற்றிக் கூற வந்த செல்வக்கேசவராயர், 'திருவள்ளுவமாலையில் பாயிரங் கூறிய புலவர்களனைவரும் ஏகக்காலத்தில் இருந்தவருமல்லர். புறநானூறு முதலானவற்றின் சார்பைக் கொண்டு ஆராயுமிடத்தில், பதின்மர் பன்னிருவர் ஏகக்காலத்தவராக இருத்தல்கூடும் என்பது தெளியப்படுகின்றது. எங்ஙனமாயினும், சங்கப் புலவர்கள் ஓரோர் காலத்தில் திருக்குறட்குக் கூறிய பாயிரத்தைப் பின் எவரோ ஒருவர் திருவள்ளுவ மாலையாகத் தொகுத்தனர் என்பதே தேற்றம்.

திருக்குறளும் தொல்காப்பியமும் ஆகிய இரண்டுமே சிதைவுறாமல் இப்பொழுது வழங்கும் நூல்கள் எல்லாவற்றினும் முற்பட்டனவாம்.'[1] என்கிறார். திருக்குறள் பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும் காலத்தால் முந்தியது என்பதே செல்வக்கேசவராயரின் முடிவாகும்.

மேலும், திருக்குறளைப் பற்றிக் கூறுமிடத்து, 'இந்நூல் ஏறக்குறைய இப்பொழுது எஞ்சிநிற்கும் இலக்கியங்கள் எல்லாவற்றினும் முற்பட்டதாகக் காண்கின்றது. எங்ஙனமாயினும், இதற்கு முன்னே இன்னோரன்ன நூல் தமிழில் இருந்ததாகக் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. வடமொழியில் உள்ள மிருதிகளும் வருண சமயச்சார்புடனே நியாயப்பிரமாணங்களை அவ்வக் காலத்துக் கேற்றபடி கூறிய நூல்களாயின. நாம் கண்ட கேட்ட பிற தேயங்களிலும், இவ்வகையான நூல் யாதொன்றும் இருப்பதாக இதுகாறும் கேட்டிலோம். ஆகவே, இஃது இணையில்லாத நூலாயிற்று. நூற்பாகுபாடுகளும் நூற்போக்கும் நுதலிய பொருளும் நமதாசிரியர் தமது கல்விகேள்விகளினாற்றலால் தாமே தமது புந்தியில் புதுவதாகக் கூர்ந்துய்த்தறிந்துரைத்தனவா மாதலின், இவ்வாசிரியரும் இணையில்லாதவராயினார்.'[2] என்றும்; 'மதியூகிகளான சில தமிழாசிரியருடைய தற்காலவாராய்ச்சியாலும், சிலப்பதிகாரம் மணிமேகலை யென்னும் பெருங்காப்பியங்களிற் கிடைக்கலான ஆதரவுகளாலும், பிறவற்றாலும், திருவள்ளுவர், ஏறக்குறையச் சாலிவாகன சகாப்தத்தின் தொடக்கத்தில், அதாவது, கி.பி. முதனூற்றாண்டில் இருந்தவரென்பது துணியப்படுகின்றது. அதனினும் முற்பட்டவர் எனத் துணிந்துரைத்தற்கான ஆதாரங்கள் அகப்படவில்லை. எங்ஙனமாயினும் இன்றளவும் நின்று நிலவுதலான தமது நூலை, வள்ளுவனார் வரையறுத்து வகைப்படுத்திக்கொண்டு,

---

1. திருவள்ளுவர் பக். 16-17.

2. திருவள்ளுவர் ப.42.

'செய்யுந்தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கில் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை' யென்று, மயிலைமாநகரிலே உதயநிமித்தமாகத் தமது தறியின் மேல் தலைகுனிந்து சீலை நெய்யா நிற்கையில், மத்திய காலமும் உதயமாயிற்றில்லை; துருக்கருடைய முகம்மதிய மதம் தோன்றிற்று மில. கிறிஸ்துவ மதம் அப்போதுதான் முளை கிளம்பிக்கொண்டிருந்தது. இந்தியாவிலும், சைவம் அத்துவிதம் வைணவம் என்னும் சமயபேதங்களுக்குரிய சமயச்சாரியர்கள் எல்லாரும், வள்ளுவனார்க்கு நெடுங்காலம் பிற்பட்டு அவதரித்தவர்கள்.'[1] என்ற முடிவாலும் திருக்குறள் தோன்றிய காலம், திருக்குறள் பெருமை, திருவள்ளுவர் அருமை அனைத்தையும் ஒருங்கே சுட்டுகிறார்.

பரணி இலக்கியக் காலம் பற்றிக் கூறும் பொழுது, 'தொல்காப்பியத்தில் இதற்கிலக்கண மின்மையால், இது பிற்காலத்தில் படைத்துக்கொண்ட ஒருவகைப் பிரபந்தம் போலும்.'[2] என்பர்.

கலிங்கப்போர் நடந்த காலத்தை வரையறுக்குமுகத்தான், 'முதற் குலோத்துங்கச் சோழன் கி.பி. 1070 - முதல் 1118 வரையில் அரசியல் நடத்தினதாகச் சாசனவாசிரியர்கள் தலைக்காட்டியிருக் கின்றனர். அரசுசெய்யத் தொடங்கினது முதல் இருபதாண்டளவில் செய்த சிலாசாசனங்கள் யாதொன்றிலும் கலிங்கத்துவென்றி குறித்திலது. இருபத்தாறாம் ஆண்டிலே செய்த சாசனங்களில் கலிங்கதேசத்தை மீண்டும் வென்ற செய்தி குறித்திருக்கின்றது. ஆகவே கலிங்கத்தை முதலில் வென்றது 1090ஆம் ஆண்டுக்கு இப்பாலாக இருத்தல் வேண்டும். ஆகவே இந்தப் பிரபந்தத்தின் காலம் கி.பி. பதினொராவது நூற்றாண்டின் கடைசிக் காலமே என்பது துணிவு'[3] என்ற முடிவிற்கு இடங்கொடுக்கிறார்.

இவ்வாறு செல்வக்கேசவராய முதலியார் படைத்த நூல்களில் அந்நூலைப் பற்றிய கால ஆராய்ச்சியும் தவறாமல் இடம்பெற்று முழுமையான தகவலுக்கு வழிகாட்டுவதாய் அமைவதோடு, அவை நூல் மற்றும் கதை நிகழ்ச்சி பற்றிய காலத் தெளிவையும் படிப்போர்க்குத் தெரிவிப்பதாய் அமைந்துள்ளன.

நூலாசிரியன் பற்றிய ஆய்வு

சிறந்த படைப்புகளை உரிமை கொண்டாடுவதென்பது உலக இயற்கை. அதிலும் திருக்குறள் போன்றதொரு உலகப்

---

1. திருவள்ளுவர் ப.10.
2. கலிங்கத்துப்பரணி ப.7.
3. கலிங்கத்துப்பரணி ப. 9.

பொதுமறையை அவரவர் உரிமைகொண்டாட எண்ணுவதில் வியப்பேதுமில்லை. திருவள்ளுவர் எச்சமயத்தவர் என்ற கேள்விக்கு அவரவர் அவரவர் சமயத்திற்கு ஏற்ப இயைந்து போகும் கருத்துகளை முன்னிறுத்தி உரிமைகொண்டாடியுள்ளனர். செல்வக்கேசவராய முதலியாரோ, 'திருவள்ளுவரை ஆருகத சமயியென்று சிலரும் சைவ சமயியென்று பலரும் வாதிப்பர். ஆயினும், வைதிகா சாரங்களை மேற்கொண்டு நிற்கும் திருக்குறட் கருத்தை நோக்க அவரை ஆருகதரென்று சாதிக்கப் போந்த நியாயம் காண்கிலம்'[1] என்கிறார்.

அத்தோடு, 'இத்திருக்குறளை இயற்றியருளிய ஆசிரியர் இன்ன சமயத்தினர் என்று துணிந்துரைப்பது இயலாது. இவர் எச்சமயத்தின ராயினு மாக.

ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி

என்றும்,

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

என்றும்,

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியா
நின்றது மன்னவன் கோல்

என்றும்,

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு

என்றும்

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்

என்றும்

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்

என்றும் வருவனவற்றால் இவர் பொதுப்பட இந்துமதத் துக்குட்பட்டவர் என்பது துணிவு. ஆயினும் முதற்பாலில்

---

1. திருவள்ளுவர் ப.60.

முதற்குறளில் விஷ்ணுவுக்குரிய பகவந்நாமத்தை உரைத்தமையாலும், இரண்டாவது பாலில்

மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு

என நிலங்கடந்த நெடுமுடி யண்ணலைக் குறித்தமையாலும், மூன்றாவது பாலில்

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு

எனப் பரமபதத்தைக் குறித்தமையாலும், வள்ளுவர் வைணவர் என்பார் வைணவர். 'அகாரார்த்தோ விஷ்ணு' என்ற கருத்தை 'அகரமுதல வெழுத்தெல்லாம்' எனத் தழுவியிருப்பதும் வள்ளுவர் வைணவர் என்பதை வலியுறுத்துமென்பர்.

குறுமுனிவன் முத்தமிழும் என்குறளும் நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்

என்று திருவள்ளுவரே கூறினதாகக் கூறும் ஒரு தனிப் பாடலையும் ஆதாரங்காட்டுகின்றனர்.

ஊரவர் கௌவை யெருவிட் டன்னைசொன் னீர்படுத்து

என்னும் 43ஆவது திருவாய்மொழியின் நாலாவது பாசுரமும்

ஊரவர் கௌவை யெருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்

என்னும் குறளும்,

கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலு மைங்கருவி
கண்ட வின்பந் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம்
ஒண்டொடியா டிருமகளு நீயுமே நிலாநிற்ப

என்னுந் திருவாய்மொழியும்

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மெண்டொடி கண்ணே யுள

என்னும் குறளும், ஒன்றை யொன்று அடியொற்றிக் கொண்டாற் போலே யிருப்பதும், வள்ளுவர் வைணவர் என்னும் வைணவர்க் குற்ற சான்றாம். 'எண்குணத்தான் தாளை வணங்காத்தலை' என்றது சிவபரமாதலால் சைவர்கள் வள்ளுவரைச் சைவர் என்பர். துறவறவியலில் ஞானம் கூறும் பகுதிகள் சைவசித்தாந்தக்

கருத்துகளை ஒத்திருப்பதும் தங்களுக்கு ஆதாரம் என்பர். 'மலர்மிசையேகினான்' என்றதனாலும்

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று

என்றதனாலும், 'பூமேனடந்தான்' என்னும் பெயரை உட்கொண்டு 'மலர்மிசையேகினான்' என்றதனாலும், ஜைனர்கள் வள்ளுவரை ஜைனர் எனக் கூறிக்கொள்வர். 'மலர்மிசை யேகினான்', 'வேண்டுதல் வேண்டாமையிலான்' 'பொறிவாயிலைந் தவித்தான்' என்னும் புத்த தேவனது பெயர்களை எடுத்தோதிக் கடவுள் வாழ்த்துக் கூறுதலாலும் புத்ததேவன் விதந்து கூறிய அருளறத்தினை வள்ளுவர் மிகுத்துக் கூறுதலாலும், பௌத்த பிடகத்தில் பிக்ஷுக்களுக்கென்று விதித்த விரதங்களையே துறவறவியலில் துறவிகட்கு விதித்தமையாலும், வள்ளுவர் பௌத்தரெனக் கொள்வதற்கும் இடமுண்டு என்கிறார். ஜி.யூ. போப்பையர் 'எங்கள் ஏசுநாதர் மலைமேற் செய்த ஹிதோபதேசத்தின் பிரதிசப்தமாகும் இத்திருக்குறள்' என்பர். 'எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு' என்றார் பரிமேலழகர். எவரெவரெத்திறத்தர் அவரவர்க்கு அவ்வத்திறத்தவராய்த் தோன்றும் இவர் சர்வ சமய சமரசவாதி எனல் சால்புடைத்து'[1] என்பதே செல்வக்கேசவராயரின் கருத்தாக அமைகிறது.

இவற்றோடு திருவள்ளுவர் பிறப்பு, வாழ்ந்த இடம், குடும்ப வாழ்க்கை, தொழில் பற்றிய செய்திகளையும் பல குறிப்புகளில் இருந்தும் கர்ணபரம்பரைக் கதைகளிலிருந்தும் எடுத்தியம்பித் தம் நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறார்.

இட ஆய்வு

செல்வக்கேசவராய முதலியாரின் படைப்புகள் பெரும்பாலும், எடுத்துக்கொண்ட நூலின் எல்லாவகையான கூறுகளையும் ஆய்வு செய்து காணும் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அவ்வகையிலேயே தம் நூல்களான கலிங்கத்துப் பரணி, கண்ணகி சரித்திரம் இரண்டிலும் நிகழ்ச்சி நடந்த இடத்தினைப் பற்றிய ஆய்விலும் இறங்குகிறார்.

கலிங்கத்துப்பரணியைப் பற்றிக் கூறுமிடத்து, 'கலிங்கநாட்டில் பெற்ற வெற்றித்திறத்தைக் கூறுவதாகலின், இந்தப் பிரபந்தம் கலிங்கத்துப்பரணி எனப் பெயர் பெற்றது. கலிங்கமானது, இப்போது வடஸர்க்கார் என்னும் பிரதேசத்தில் கோதாவரி நதிக்கு

1. திருவள்ளுவர் பக். 57-58.

அப்பாற்பட்டது. தற்காலத்தும் விசாகப்பட்டணத்துக்கருகில் உள்ளதோர் நகரம் கலிங்கப்பட்டணம் என வழங்குவது இதனை நன்கு வற்புறுத்தும். கலிங்கராசனை வெற்றி கொள்ளுமாறு செல்லும் சோழனுடைய படையானது சில ஆறுகளைக் கடந்து செல்வதாக இந்நூலில் கூறியிருக்கின்ற வர்ணனையினாலும் இதனை உணர்தலாகும். பண்டை நாளின் இந்திய ராச்சியங்களை வரையறுத்துக் காட்டும் பூகோளப் படங்களாலும் இதனை உணர்தலாகும்.'[1] என்று கலிங்கத்துப் பரணி போர் நடந்த இடத்தைப் பற்றி ஆய்ந்துத் தம் முடிவினை முன்வைக்கிறார்.

இதே போலத் தம் நூலான கண்ணகி சரித்திரத்தின் பின்னிணைப்பாகக் கண்ணகி வானவூர்தியில் வானுலகம் சென்றதாகச் சொல்லப்படும் இடம் எது என்பதற்குப் பலரும் வெளியிட்டுள்ள ஆய்வு முடிவுகளைப் கொடுத்திருப்பதோடு, சேலம் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடே சேரன் செங்குட்டுவனை மலைவாழ் மக்கள் சந்தித்துக் கண்ணகி வானுலகு சென்ற அதிசயத்தைக் கூறிய இடம்[2] என்ற தம் முடிவினையும் தெளிவு படுத்துகிறார்.

கதைமாந்தர் பற்றிய ஆய்வு

செல்வக்கேசவராய முதலியார் தம்நூல்களில், கதை நடந்த காலத்தையும், இடத்தையும் ஆய்விற்கு எடுத்துக்கொண்டது போலவே, கதைமாந்தர் பற்றிய ஆய்வையும் மேற்கொண்டுள்ளார். ஒரு பெயரினைக் கொண்ட பலருள்ளும் யார்காலத்து நிகழ்ச்சி இது என்பதன் தடுமாற்றத்தை இவ்வாய்வு தடைசெய்வதாய் அமைந்து படிப்போர்க்குப் பயனளிக்கிறது எனலாம்.

இவ்வகையில், செல்வக்கேசவராயரின் குலோத்துங்கன் பற்றிய ஆய்வையும், கருணாகரன் பற்றிய ஆய்வையும் குறிப்பிடலாம்.

குலோத்துங்கன் பற்றிக் கூறுமிடத்து, 'இந்தப் பிரபந்தத்தின் காலம் கி.பி. பதினொராவது நூற்றாண்டின் கடைசிக் காலமே என்பது தெளிவு. இந்த முதலாம் குலோத்துங்கச்சோழன் விக்கிரமசோழனுடைய தந்தை. விக்கிரமசோழனுலாவில்,

> **சேலைத் துரந்த சிலையைக் கடிந்திருகால்**
> **சாலைக் களமறுத்த தண்டினான்–மேலைக்**

---

1. கலிங்கத்துப்பரணி ப. 6.
2. கண்ணகி சரித்திரம் பக். 82-85.

கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமும் கைக்கொண்
டடல்கொண் டமரா டரச-ருடலை
இறக்கி வடவரையே எல்லையாய்த் தொல்லை
மறக்கலியும் கங்கமு மாற்றி-அறத்திகிரி
வாரித் திகிரி வலமாக வந்தளிக்கும்
ஆரிற் பொலிதோள் அபயற்குப் -பார்விளங்கத்
தோன்றிய கோன் விக்கிரம சோழன்

என வருகின்றது. விக்கிரமசோழன் கி.பி. 1118-முதல் 1132 வரையில் அரசாண்டதாகச் சாசனவிற்பனர்கள் முடிவுசெய்திருத்தலால், கலிங்கத்துப்பரணிகொண்டவன் முதலாம் குலோத்துங்கனே என்பது பெறப்படும்[1] என்ற அடையாளத்தைக் காட்டுகிறார்.

இதே போலக் குலோத்துங்கனின் படைத்தலைவன் கருணாகரனைப் பற்றிக் கூறுமிடத்துக் 'குலோத்துங்கனுக்குக் கலிங்கத்தை வென்று தந்தவன் கருணாகரன் என்பவன். அவன் வண்டைநகரரசன். தொண்டைமான் என்னும் பட்டம்பெற்றவன். அவனைப் படிக்காசு புலவர்,

பண்டையோர் நாளையி லோரேர் கலிங்கப்
பரணிகொண்டு
செண்டையு மேருவில் தீட்டுவித் தோன்கழற்
செம்பியன்சேய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற கோனந்தித்
தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணாகரன் தொண்டை
மண்டலமே

என்று புகழ்ந்திருக்கிறார். செம்பொற்சிலை யெழுபதில்

அவிக்கா தரங்கூர் புனிதர்மகிழ்ந்
தருள்வன் னியரை யாம்புகழச்
செவிக்கமுதா மெனக்கேட்டுச்
சிந்தை யுவந்து சீர்தூக்கிப்
புவிக்கா யிரம்பொன் னிறைநீக்கிப்
பொற்றன் டிகைபூ டணத்தோடும்
கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான்
கருணாகரத் தொண்டை வன்னியனே

என்று கம்பர் புகழ்ந்திருக்கிறார். சிலையெழுபது கம்பர் பாடியதாயினும் ஆக, எவர் பாடியதாயினும் ஆக, கலிங்கத்தை

---

1. கலிங்கத்துப்பரணி பக். 9-10.

வென்றுவந்தவன் வன்னியகுலதிலகம் என்பதும் இதனால் விளங்கும்'[1] என்ற உண்மையை உணர்த்துகிறார்.

நூலின் சிறப்புகளை வெளிக்கொணரும் பாங்கு

செல்வக்கேசவராயர் படைப்புகளைப் பொறுத்த வரையில், தாம் எடுத்துக்கொண்ட படைப்புகளின் முழுத் தன்மைகளையும் வெளிக்கொணரும் பொருட்டுத் தேவையான அத்தனைக் கூறுகளையும் கையாண்டுள்ளார். அப்படைப்புக்குத் தொடர்பான செய்திகள், நிகழ்ச்சிகள், கட்டுரைகள், விவாதங்கள், பிற நூற்செய்திகள், வரலாற்றுக் குறிப்புகள், அறியப்படாத உண்மைகள் என்ற அனைத்தையும் சேர்த்து, அந்நூலைப் பற்றிய முழுப்பார்வைக்கு வழி வகுப்பது இவர்தம் பண்பாக உள்ளது. திருக்குறளின் சிறப்புப் பற்றிக் கூறுமிடத்து, 'பெண்பாலினர் தாம் அழகு மிக்குடையராயினும் அணிகலனணியும் அவாவுடையவர்கள். கவிவாணர்களும் தாம் உரைக்கும் பொருள் அழகுடையதாயினும் அதனை அணியமைத்தே கூறுவர்.

அணியிலாக் கவிதை பணியிலா வனிதை

என்றார்அகத்தியரும். நமதாசிரியரும் அங்கங்கே சிற்சில அணிகளை அமைத்துவைத்தனர்'[2] என்று தொடங்கித் திருக்குறளில் பயின்றுவந்துள்ள சொற்பின்வருநிலை, பொருட்பின்வருநிலை, பிறிதுமொழிதல், இலக்கணை, உடம்பொடுபுணர்த்தல், உருவகம், ஏகதேச வுருவகம் போன்ற அணிகளை ஆதாரக் குறள்களோடு எடுத்துக்கொடுக்கிறார். அவ்வளவோடு, வள்ளுவர் பயன்படுத்தியிருக்கும் சிறந்த உவமைகளைச் சுட்டியும் சிறப்புச் செய்கிறார்.

'புலவர்கள் கல்வி கேள்விகளின் சிறப்பும் பிரபஞ்ச வியாபாரமும் பிரகிர்தி ஞானமும், அவர்கள் தங்கள் நூலில் நுதலும் பொருள்களை விளக்கும்படி காட்டும் உவமானங்களாலே நன்கு விளங்கும். சாதாரணமான சம்பாஷணையில் தானம் அவரவர்கள் எடுத்துக்காட்டும் உவமானங்களால், அவரவர்களுடைய யோக்கியதை இனத்தியல்பு தொழிற்றிறம் மதியுகம் மனப்போக்கு முதலான சில பாவங்களெல்லாம் நன்கறியக் கூடும் அன்றோ! கதிரவன் நுழைந்து பாராத இடத்தையும் கவிகள் கண்டறிவர் எனத் தெலுங்கரில் ஒரு பழமொழி உண்டு. ஒரு சம்பந்தமும் இல்லாத பொருள்களுக்கு ஒற்றுமைநயங் கற்பித்து உவமானங் கொள்ளுதல்

---

1. கலிங்கத்துப்பரணி பக். 13-14.

2. திருவள்ளுவர் ப. 50.

சிறந்த கவிராயர்களுக்கு இயல்பாக இருக்கின்றது. தலைமயிருக்கும் ஒருவன் நிலைமைக்கும் என்ன சம்பந்தம் உண்டு? ஆயினும் நுனித்தறிவார்க்கு ஒற்றுமை புலப்படும்.[1]

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை

என்பது தொடங்கி, ஆமைக்கும் அடக்கத்துக்கும், அனிச்சமலருக்கும் அடிக்கும், நிழலுக்கும் தீமையின் பயனுக்கும் காட்டப்பட்ட உவமைச் சிறப்புகளைக் காட்டாக முன் வைத்துத் திருக்குறளின் சிறப்பையும் வள்ளுவர் பெருமையையும் சுட்டிக் குறள் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறார்.

இதைப் போலவே கலிங்கத்துப்பரணி நூலைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, 'கடைதிறப்பில் சிருங்காரரசமும், இந்திரசாலத்தில் அற்புதரசமும், போரில் வீரரசமும், களம்பாடியதில் ஆசியரசமும் அமைந்திருக்கின்றன. வெற்றியைக் கேட்ட களிப்பின் மிகுதியாலும், அரசன்மீதுள்ள ஆர்வத்தின் மிகுதியாலும், இவ்வாசிரியர், நூலின் நடையை மொத்தத்தில் குதிரைப் பாய்ச்சலாகக் கொண்டு செல்கிறார். நூலின் பகுதிகளுக்கேற்பவும், அவ்வப்பகுதியின் சுவைக்கேற்பவும், நடையானது மல்லகதியும் மயூரகதியும் வானரகதியும் விடபகதியும் வியாக்கிரகதியுமாக வேறுபட்டுச் செல்கின்றது. பின்வருநிலை, உவமை, தற்குறிப்பேற்றம், தன்மைநவிற்சி என்னும் அணிகள் அங்கங்கே அழகுசெய்கின்றன.'[2] என்று நூற்சிறப்பின் பண்புகளை வெளிப்படுத்துகிறார். ஒரு நூலின் முழுமையான சிறப்பை வெளிக்கொணர அந்நூலை அந்நூலின் கருத்தோடு ஒப்புடைய பிறிதொரு நூலோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே சிறந்த முறையாகும். இவ்வகையான போக்கையும் கையாண்டுள்ளார் ஆசிரியர். திருக்குறளின் சிறப்பைக் கூறவந்த செல்வக்கேசவராயர், அதன் சிறிய உருவத்தின் சிறப்பை முதலில் ஒப்பு நோக்கி உயர்வு படுத்துகிறார். இதற்காகத் திருக்குறளின் கருத்தோடு ஒப்புமை உடைய நாலடியாரின் சில செய்யுட்களை எடுத்துக் குறளோடு பொருத்திப் பார்க்கிறார்.

இந்நோக்கில், 'நமதாசிரியர் இந்நூலை ஏனைப்பாக்களாற் கூறாது குறட்பாக்களாற் கூற எடுத்துக்கொண்டதனால், சுருங்கச்சொல்லல்- விளங்கவைத்தல்-நவின்றோர்க்கினிமை-நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகள் இந்நூலில் இனிதாக அமைவனவாயின.' நாலடியாரில்,

---

1. திருவள்ளுவர் ப.54.
2. கலிங்கத்துப்பரணி ப. 8.

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்--வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு

எனப் பெரியாரோடு பெரியார் கொள்ளும் நட்பு, பிறைமதி வளர்வதுபோல நாட்குநாள் வளரும்; இழிஞரோடு இழிஞர் கொள்ளும் நட்பு, நிறைமதி தேய்வதுபோல நாட்கு நாள் தேய்ந்துவிடும் என்பதனை, வள்ளுவர்,

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

என ஒரு குறளில் சுருங்கச் சொல்லியிருக்கின்றனர் என்கிறார். இதைப் போன்ற இன்னும் சில நாலடியார் செய்யுட்களையும் குறள்களையும் ஒப்பு நோக்குகிறார். ஒப்புநோக்கலின் முடிவில், 'ஒரு பொருளையே ஓதும் இரண்டு நூலை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்தே அவ்வந்நூலின் திறம் விளங்குமாதலின், இங்ஙனம் நாலடியையும் குறளையும் ஒப்பிட்டுப் பார்த்தோம். ஒப்பிட்ட ஒவ்வொரு பொருளையும் நமது குறளே சுருங்கச்சொல்வதா யிராநின்றது.'[1] என்று குறளின் சிறப்பை முன்வைக்கிறார்.

நுட்பமான செய்திகள்

ஒரு நூலின் சிறப்பிற்கு அந்நூல் நுவலும் செய்திகளோடு பின்னிணைப்புகளும், ஆங்காங்கே செருகிச் செல்லும் சில நுட்பமான செய்திகளும் காரணமாகின்றன. இத்தன்மையைச் செல்வக்கேசவராய முதலியாரின் திருவள்ளுவர், கலிங்கத்துப்பரணி உரைநடை, அக்பர், கண்ணகி சரித்திரம் போன்ற நூல்களில் காணமுடிகிறது. இவ்வகையில் கலிங்கத்துப் பரணியில் சயங்கொண்டார் பற்றிய செய்தியையும், கருணாகரத் தொண்டைமான் யார் என்பதைப் பற்றிய நுட்பமான செய்தியினையும் ஆசிரியர் கொடுத்துள்ளமை படிப்போர்க்குத் தெளிவைக் கொடுப்பதாய் அமைந்துள்ளது.

செயங்கொண்டாரைப் பற்றிக் குறிப்பிடும் இடத்து, 'இது சயங்கொண்டார் என்னும் புலவர் பாடியது. 'வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோ சயங்கொண்டான்' எனப் புகழப்பெற்றவர் இவரே.

இவர் சோழனுடைய அவை வித்துவான்களின் தலைவர். தென்னாட்டுப்புலவர் சிலர் போந்துபுரிந்த வாதப்போரில்

1. திருவள்ளுவர் பக்.44-45.

வெற்றியடைந்ததனால் 'சயங்கொண்டான்' என்றொரு பட்டப்பெயர் பெற்றிருந்தார். கலிங்கரை வென்றசெய்தியை அறிந்தவுடனே சோழன் இப்புலவரை நோக்கி 'யானும் சயங்கொண்டான் ஆயினேன்' என்றான். உடனே இப்புலவர் 'அங்ஙனமாயின் சயங்கொண்டான் சயங்கொண்டான்மீது பரணி புனைவான்' என்றுரைத்துப்போய் இந்தப் பிரபந்தத்தை இயற்றிவந்து அரசன் அவையிலே அரங்கேற்றினார். அப்போது அரசன் தனது கருவூலத்தினின்றும் பொற்றேங்காய்களை வருவித்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு தாழிசையின் முடிவிலும் ஒவ்வொரு காயாக உருட்டித்தந்து களிகூர்ந்தான். அங்ஙனம் ஒரு கன்னபரம்பரை வழங்கி வருகின்றது'[1] என்ற செய்தியினையும் சேர்க்கிறார்.

எந்நூலைப் பற்றிய படைப்பாயினும், அந்நூலின் சிறப்புக் கூறுகளை எவ்வகையிலேனும் வெளிக்கொணர முயல்வதே ஆசிரியரின் பண்பாக உள்ளதைக் காணமுடிகிறது. 'சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையின் உரையில், அடியார்க்கு நல்லார் கலிங்கத்துப்பரணியில் நின்றும் சில தாழிசைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார். இதனால் இந்நூலின் பெருமையும் இவ்வாசிரியர் பெருமையும் நன்கு விளங்கும். மூவருலாவிலும் கண்டறியாத சில செய்திகள், இந்தநூலில் உரைத்திருக்கும் சோழருடைய இராசபாரம்பரியத்தில் குறித்திருக்கின்றன.'[2] என்று கலிங்கத்துப் பரணியின் சிறப்பை வெளிக்கொணர்வது இப்பண்பிற்கு ஒரு பதமாக அமைகிறது.

தக்க சான்றுகளோடு மறுக்கும் பண்பு

செல்வக்கேசவராயர் தம் படைப்புகளில், உரையாசிரியர், படைப்பாசிரியர்கள், ஆய்வாளர்கள் போன்றோரின் கருத்தோடு மாறுபடும் இடத்துத் தக்க சான்றுகளோடு தம் கருத்தை நிலைநிறுத்தும் பாங்கினைப் பார்க்கமுடிகிறது. எடுத்துக்காட்டிற்கு ஒன்றிரண்டைக் காணலாம்.

தமிழ் நெடுங்கணக்குப் பற்றிய ஆய்வு

செல்வக்கேசவராயர் தம்முடைய பஞ்சலட்சணம் நூலில் தமிழ் நெடுங்கணக்கின் வரலாறு என்ற தலைப்பில் நெடுங்கணக்கைப் பற்றிய ஆய்வில் இறங்குகிறார். இதில் 'தமிழெழுத்துக்களும் கிரந்த எழுத்துக்களும் தேவநாகரியெழுத்துக் களிலிருந்தோ அதற்கு முந்திய அசோக மகாராஜனுடைய சிலாசாசனவெழுத்துக்களிலிருந்தோ

---

1. கலிங்கத்துப்பரணி பக்.7-8.
2. கலிங்கத்துப்பரணி ப.8.

உண்டானமை என்பதும், தென்னாடுகளில் பனையேடுகளில் எழுத்தாணிகொண்டெழுதும் வழக்கத்தால் அவை உருவு திரிந்தன என்பதும், சிலருடைய கொள்கை. மலையாளத்தில் உள்ள யூதரும் ஹியன் கிறிஸ்தியரும் பெற்றுள்ள ராஜ சாசனங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன. அந்தச் சாசனங்களில் ஒன்று கி.பி. 774ஆம் ஆண்டில் ஏற்பட்டது. தமிழ் நெடுங்கணக்கின் மிகப் பழமையான வரிவடிவில் அவை எழுதியிருக்கின்றன. அவற்றை வட்டெழுத்தென்பர் சாசனசர்ச்சை செய்வோர். அவ்வடிவு ஏறக்குறைய கி.பி. பத்தாவது நூற்றாண்டில் வழக்கிழந்ததாகக் காண்கிறது. அப்பால் ராஜசாசனங்களாகிய கல்வெட்டுகளைக் கோலெழுத்தென்பர் (கோல்-செங்கோல்).

அகத்தியர் தமிழ்நாட்டில் புகுதற்கு முன்னரே தமிழில் இயல் இசை நாடகமான இலக்கியவிலக்கணங்கள் வழங்கி யிருந்ததனால், தமிழ் நெடுங்கணக்கு வேறு நெடுங்கணக்கினின்றும் பிறந்ததன் றென்பதே துணிவு. அதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. மிக்க வீரத்துடனே போர்புரிந்து இறந்த வீரனது ஞாபகச் சின்னமாகக் கல் நடுதல் என்று முற்காலத்தில் தமிழ் நாட்டில் ஓர் வழக்கு உண்டு. அதாவது, கழல்வீரர் நீண்ட கல் ஒன்று கொண்டுவந்து அதனை மஞ்சன மாட்டி மடையும் மதுவும் மலரும் முதலியன கொடுத்து விழாநடத்திக் கல்லில் இறந்த வீரனது பெயரும் பீடும் எழுதி ஓரிடத்தில் நடுதலாம். இந்த வழக்கத்தால் தமிழர் அசோகனுக்கு முந்தியே தமிழ் நெடுங்கணக்குடையார் என்பது விளங்கும்.

கடைச்சங்கக்காலத்து நிகண்டாகிய திவாகரம்

பெயரெழுத்து முடிவெழுத்து வடிவெழுத்துத் தன்மை
யெழுத்தென எழுத்தின் பெயரியம் பினரே.

என்றும், அக்காலத்து நிகண்டாகிய பிங்கலந்தையும்

வடிவுபெயர் தன்மைமுடிவு நான்கெழுத்தே

என்றும் உரைக்கின்றன. அவற்றுள் வடிவெழுத்தென்பன பூர்வ எகிப்தியர் வழங்கியது போன்ற சித்திரக்குறிகள்.

பெயரெழுத்தென்பன சீனர்போல ஒவ்வொரு பெயரை உணர்த்துதற்கு இட்டு வழங்கும் சங்கேதக் குறிகள்.

தன்மையெழுத்தென்பன குணங்கள் சக்திகள் முதலியவற்றைக் குறித்தற்கு வழங்கிய அடையாளங்கள்.

பூர்வ எகிப்தியர்கள் விவேகத்தைக் கண்ணும் எறும்பும், அறிவின்மையை ஈயும், நன்றியின்மையை விரியன் பாம்பும்,

வெற்றியைக் கருடனும், தந்திரத்தை நரியுமாகக் குறித்து வழங்கியது இதற்கு உதாரணம். முடிவெழுத்தென்பன வினை நிகழ்ச்சியை உணர்த்தும் வாக்கியங்களைக் குறிக்க வழங்கிய அறிகுறிகள். இரண்டு அல்லது பல பிராணிகளின் அவயவங்களை ஒன்றாகக் கலந்து ஓருருவம் அமைத்து ஒரு விஷயத்துக்கே குறியாக வழங்குவது எகிப்தியர் முறை.

மேற்கூறியது போலவே யாப்பருங்கல விருத்தியானது 'உருவே யுணர்வே ஒலியே தன்மையென' மற்றோர் எழுத்துவகை காட்டி அவற்றுள்,

காணப்பட்ட உருவமெல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவி லோவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்

என்றும்

கொண்டஓர் குறியால் கொண்ட வதனை
உண்டென் றுணர்வது உணர்வெழுத்தாகும்

என்றும்

இசைப்படு புள்ளின் எழாஅலொடு புணர்ந்து
செவிப்புல னாவது ஒலியெழுத் தாகும்.

என்றும்,

முதற்கா ரணமும் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய உணர்வும்
அவற்றொடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப் பிறந் திசைப்பது தன்மை யெழுத்தே

என்றும் விளக்குகின்றது.[1]

தமிழில் பல வகையான எழுத்துருக்கள் இருந்தன என்பதையும். தமிழ் நெடுங்கணக்கானது பிறவற்றிலிருந்து காலத்தால் முந்தியது என்பதையும் இவ்வாறு ஆதாரங்காட்டிப் பிறர் கருத்தை மறுக்கிறார்.

பரிமேலழகர் கருத்துக்கு மாற்றுக் கருத்து

திருக்குறளுக்குப் பரிமேலழகர் 'வடமொழியைத் தழுவிச் செய்தது' என்று தமதுரையில் கூறும் சில இடங்களைச்

---

1. பஞ்சலட்சணம் பக். 16-17.

செல்வக்கேசவராய முதலியார் மறுத்துரைக்கிறார். 'அரசனீதியாவது காவலை நடாத்து முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்துக் கூறுகின்றார் எனப் பொருட்பாலுக்குப் பாயிரமுரைத்து உரைகூறப் புகுகின்றனர் பரிமேலழகர். காமத்துப்பாலின் உரைப்பாயிரத்திலும், பரிமேலழகர், 'இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றியோதுதலான்' என்றும், 'இனி, தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்தது' என்றும், உரைப்பாயிரத்தின் இறுதியில் 'ஈண்டும் பிரிவினை வடநூன்மதம் பற்றி... நால்வகைத்தாக்கிக் கூறினார்'[1] என்றும் கூறுதலால், திருக்குறளுக்கு வடநூற் போக்கையே பின்பற்றி இவர் உரைகூறுவது தேற்றம்' என்று பரிமேலழகரின் நிலையினை மேலும் சில சான்றுகளோடு கூறி, ஆனால், வள்ளுவர் கருத்தோ பரிமேலழகர் கருத்தன்று என்பதனை ஆதார விளக்கங்களைக் கொண்டு நிறுவுகிறார்.

நிறை குறை காணும் தன்மை

செல்வக்கேசவராயர் பேச எடுத்துக்கொள்ளும் இலக்கியத்தின் சிறப்புகளை எல்லாவகையினும் வெளிக்கொணர முயலும் அதே வேளையில், அவ்விலக்கியத்தில் காணப்படும் இடர்ப்பாடுகளையும் சுட்டிச்செல்லத் தவறவில்லை. குறளைப் பற்றிக் கூறும்போது, 'வள்ளுவர் ஒவ்வோ ரதிகாரத்தையும் பப்பத்துக் குறளாகக் கூறுவதென்று வரையறுத்துக் கொண்டதில் இரண்டு விதமான இடர்ப்பாடுண்டு. அதிகாரப்பட்ட பொருள் பத்துக்குறட்குக் குறைவதாயின், கூறியது கூறுதல் மற்றொன்று விரித்தல் மிகைபடக்கூறல் முதலான குற்றங்களுக்கு இடமுண்டாகும்; அன்றியும் விதிமுகத்தானும் மறைமுகத்தானும் பல அதிகாரங்கள் கூறவேண்டுவது மாகும். கடவுள்வாழ்த்து அதிகாரப் பட்ட விடத்தில், நீடுவாழ்வார் இன்னார் என்பதை இரண்டு குறளால் உணர்த்தினார். அவ்விரண்டு குறளையும் ஒன்றாக இணைத்திருக்கலாம்.

> அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற்
> பிறவாழி நீந்த லரிது

என்ற குறளையும்

> பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
> இறைவனடி சேரா தார்

1. திருவள்ளுவர் பக். 22-26.

என்ற குறளையும் ஒரு முடிபாக முடிப்பது நன்றாகும். இல்வாழ்க்கை அதிகாரப்பட்ட இடத்தில், துறவறத்தினும் இல்லறம் ஏற்றமுடையது என்பதற்கு,

> அறத்தாற்றி னில்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
> போஒய்ப் பெறுவ தெவன்

என்றும்

> ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
> நோற்பாரி னோன்மை யுடைத்து

என்றும் மூன்று குறள் கூறினார். நட்பு அதிகாரப்பட்ட விடத்தில் கூறவேண்டுவன வெல்லாம் ஓரதிகாரத்தில் அடங்காமையால், அதனைப் பல வதிகாரங்களாக வகுத்துக்கொண்டார்.'[1] என்பன போன்ற செய்திகளைச் சுட்டுகிறார்.

மேலும், தம்முடைய பஞ்சலட்சணம் நூலில் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள நிறை குறைகளைத் 'தமிழ் நெடுங்கணக்கில் உள்ள மிகையும் குறையும்' என்ற தலைப்பின் கீழ்ப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இதில்,

> 'தமிழ் மொழியின் உச்சாரணத்துக்கு அவசியமான ஒலிகள் நாற்பது. வரிவடிவில் அவற்றைக் குறிப்பதற்கு உள்ள எழுத்துக்கள் முப்பத்தொன்றே. ஆகவே மற்ற ஒன்பதொலிகளுக்கும் ஒன்பது தனிவேறெழுத்துக்கள் இன்மை தமிழ் நெடுங்கணக்கிற்கு ஒரு குறையே என்னலாம். தமிழேயான சொற்களில் வல்லெழுத்துக்களை எடுத்தொலிப்பதற்கான குறிகள் இல்லை. இனமான மெல்லொற்றையும் சில இடையெழுத்தையும் அடுத்துவரும் வல்லினம் எடுத்தொலிப்பதே இயற்கையாதலால் அவ்விதமான குறிகள் வேண்டுவனவல்ல. மெல்லின இடையினங்களை அடுக்காமல் தனியாகவே க ச ப என்பவை புகுதல் வசித்தான், வருபவன் என்ற சொற்களிற்போல வேறு புதிய ஒலிகளாக உச்சரிக்கப்பெறும். உரிய எழுத்துக்களில்லாமை குறையே. இணையெழுத்தாகக் கொள்ளினும் எழுத்துப்போலியாகக் கொள்ளினும் ஐகார ஔகாரங்கள் மிகையே என்னலாம். ஐகார, ஔகாரங்களையும் அவை ஊர்ந்துவரும் உயிர்மெய்களையும் ஒழிப்பினும் தமிழ் இடர்ப்படாது. ங்-ங இரண்டு தவிர ஙகரவருக்கத்தில் மற்றையவெல்லாம் மிகையே. நகரமும்

1. திருவள்ளுவர் பக். 43-44.

> னகரமும் பிறப்பளவில் வெகுவாய் வேறுபடாமையாலும், இரண்டும் மெல்லினமே யாகையாலும், இவ்விரண்டும் வேண்டா. ஒன்றே அமையாதோ எனின், நகரம் தகரத்துக்கே இனமாய்த் தந்நகரமென்றும் னகரம் றகரத்துக்கினமாய் றன்னகரமென்றும் வழங்கப்படுவனவாயின; ளகரத்தோடு தகரமும் நகரத்தோடு றகரமும் மயங்குதலில்லை, ஒன்றே கொண்டால், முந்நூறு-முன்னூறு, எந்நாடு-என்னாடு என்னும் தொடர்மொழிகளில் சந்தியிடர்ப்பாடு உண்டாகும்; பொருட்டெளிவுங்கெடும். ஆதலால் இரண்டும் வேண்டும் என்பதே விடை. இடையின ரகரம் வல்லின றகரம் ஆகிய இரண்டில் ஒன்றை ஒழித்து விடலாமே எனினும் இவ்வித இடர்ப்பாடுகளோடு தனிமொழிகளின் பொருண்மலைவும் உண்டாமாதலால் அங்ஙனம் ஒழிப்பது ஆகாது. ஹிந்துஸ்தானி- பாரஸீகம்-இங்க்லீஷ் முதலான பாஷை களிலிருந்து தமிழில் வந்து வழங்குதலான சொற்களை வரிவடிவில் அமைத்துக்காட்டத் தமிழ் நெடுங்கணக்கில் போதிய எழுத்துக்கள் இல்லை"[1]

என்ற உண்மையைத் தெளிவுபடுத்துகிறார்.

கையாளும் உத்தி முறைகள்

செல்வக்கேசவராய முதலியார் தம் படைப்புகளில் படிப்போரின் தெளிவிற்கும், மகிழ்விற்கும், சோர்வின்மைக்கும் ஏற்ப நடையை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. படிப்போர்க்கு வினா எழுப்புவதான இடங்களில் தானே வாசகனாக இருந்து அவைபோன்ற வினாக்களை எழுப்பி அதற்கான விடைகளையும் தருவதாகத் தம் நடையை அமைத்துள்ளார். காட்டாக,

> வாய்மை யெனப்படுவ தியாதெனின், யாதொன்றும்
> தீமை யிலாத சொலல்

என்று, தமிழ்வேதமாகக் கொள்ளும் இந்நூலில், அறத்துப்பாலில், துறவறவியலில், வாய்மையை வற்புறுத்துமிடத்தில்,

> பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்

என இவ்வாசிரியர் எடுத்துரைத்தது ஏற்குமா?"[2] என்ற கேள்வியையும் கேட்டு, இல்லை இல்லை அப்படி எடுத்துரைத்ததுச் சரியே என்னும் வகையில் விளக்கத்தினையும் கொடுத்துள்ளமையைச் சுட்டலாம்.

---

1. திருவள்ளுவர் ப. 35.
2. பஞ்சலட்சணம் ப. 16.

மேலும், செல்வக்கேசவராயர் தம் நூல்களில் தேவையான இடங்களிலெல்லாம் பல வகையான பழமொழிகளை இடம்பெறச் செய்துள்ளார். இவரின் அக்பர் என்ற நூலின் இடையிடையே ஐம்பதுக்கும் மேற்பட்ட பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. வியாசமஞ்சரி நூலின் பின்னிணைப்பில் சுமார் 650 வழக்குத் தொடர்மொழிகளையும், சுமார் 1050 பழமொழிகளையும் அகரவரிசைப்படுத்திக் கொடுத்துள்ளார். அத்தோடு, 'குடித்தனமோ துரைத்தனமோ?' என்பன போன்ற சொற்றொடர்களையும் அங்கங்கே இட்டுச்சென்று தம் கருத்தோடு படிப்போரை ஒன்றச் செய்கிறார்.

செல்வக்கேசவராயரின் அக்பர் என்ற நூல் ஒரு வரலாற்று நூலாக இருந்தாலும், பிற வரலாற்று நூல்களைப் போலக் கால அடிப்படையில் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் பட்டியலிட்டுப் படிப்போரை நெற்றிசுருங்க வைக்காமல், தேவையான இடங்களில் மட்டும் காலவிவரத்தினைக் கொடுத்துப் பிற இடங்களை ஆச்சர்ய மூட்டும் நிகழ்ச்சிகளால் நிரப்பிப் படிப்போரை வியப்பில் ஆழ்த்துகிறார் ஆசிரியர். அக்பர் பற்றிய இவரின் நூலுக்கு, அக்பரைப் பற்றி வெளிவந்த பிறநூல்களையும், பிறமொழி நூல்களையும், பல வகையான குறிப்புகளையும் கொண்டு அதிலிருந்து நிகழ்ச்சிகளைத் தேர்வு செய்துள்ளமையும், அக்பரின் வரலாற்றினைப் பாபரில் தொடங்கிச் சலீமில் முடித்திருக்கும் போக்கும், இந்தியாவை ஆண்ட முகலாயர்கள் பற்றிய முழுப் பார்வைக்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளது.

பன்னூல் பயிற்சியும் பன்மொழிப் புலமையும்

செல்வக்கேசவராய முதலியாரின் படைப்புகளில் காட்டும் சான்றுகளையும், கொடுக்கும் பின்னிணைப்புகளையும், எடுத்துச்சொல்லும் கருத்துகளையும் கொண்டு அவர்தம் பன்மொழிப் புலமையையும், பன்னூல் பயிற்சியையும் அறிய முடிகிறது. ஒரு நூலில் தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்குத் தொடர்பான செய்திகள் எவ்வெவ் வடிவத்தில் வெளி வந்திருந்தாலும் அவையனைத்தையும் தம் பார்வையில் பதித்துள்ளார். தேவையான இடங்களில் அத்தகவல்களை இணைப்பதோடு, எஞ்சியதைப் பின்னிணைப்பால் நிரப்புகிறார். இவர் 'நாம் கண்ட கேட்ட பிற தேயங்களிலும், இவ்வகையான நூல் யாதொன்றும் இருப்பதாக இதுகாறும் கேட்டிலோம்'[1] என்பதிலிருந்து இவரின் பரந்துபட்ட மொழிப்புலமையையும்,

1. திருவள்ளுவர் ப. 42.

இலக்கிய நோக்கையும் அறியலாம். ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளைப் பற்றிய செய்திகளைக் கொடுப்பதோடு, தெலுங்குப் பழமொழிகளையும் சேர்க்கிறார். திருக்குறளின் வைப்புமுறை போன்றவற்றை விளக்குமிடத்து, வட மொழியில் உள்ள இலக்கியச் செய்திகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அதே வேளையில் அக்பரைப் பற்றிப் பாரசீக மொழி நூல்களில் உள்ள செய்திகளையும் கோடிட்டுக் காட்டத்தவறவில்லை. இவையாவும் ஆசிரியரின் பன்மொழிப் புலமைக்குச் சான்றாக அமைகின்றன.

பஞ்சலட்சணம் நூலில் திசைச்சொற்களைப் பற்றிக் குறிப்பிடும் இடத்தில், சுமார் 60 அரபிச் சொற்களையும், 40 பாரசீகச் சொற்களையும், 90 இந்துஸ்தானிச் சொற்களையும், 10 போர்ட்யுகேசியச் சொற்களையும், 90 ஆங்கிலச் சொற்களையும், இதரமானவை என்ற தலைப்பில் 10 சொற்களையும், மற்றும் 175 வடமொழிச் சொற்களோடு பொருத்தமான தமிழ்ச் சொற்களையும்[1] பட்டியலிட்டுத் தம்முடைய பன்மொழிப் புலமையை வெளிப் படுத்துகிறார்.

திருவள்ளுவர் நூலின் பின்னிணைப்பில், அபிதான கோசம், திராவிடப் பிரகாசிகை, சிறைசெய்காதை - மணிமேகலை, நல்வழி, புலவர் புராணம், கல்லாடம், பரிபாடல் உரைச்சிறப்புப்பாயிரம், போன்றவற்றின் செய்திகளையும், மற்றும் உருத்திரசன்ம கண்ணர், கவிசாகரப் பெருந்தேவனார், நப்பாலத்தனார், மதுரைப் பாலாசிரியனார், கால்டுவெல், ஜி.யு. போப் போன்றோர்களின் திருக்குறள் பற்றிய சிந்தனைகளோடு (ஒரு) தனியன் என்ற குறிப்போடு பெயர் அறியப்படாததோர் கருத்துகளையும் இணைத்துள்ளார். இத்தன்மை இவரின் பரந்துபட்ட, ஆழமான இலக்கியப் புலமையைக் காட்டுவதாய் அமைகிறது. இதைப் போலவே ஒவ்வொரு நூலின் பின்னிணைப்பினையும் நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு

செல்வக்கேசவராய முதலியார் படைப்புகள் பெரும்பாலும் மாணவர்களின் பயன்பாட்டினை முதன்மை நோக்காகக் கொண்டு, அவர்கள் தமிழின் இனிமையையும், எளிமையையும், இலக்கிய வளங்களையும், இலக்கணப் பொருள்களையும் எளிதில் அடைய வேண்டும் என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன.

---

1. பஞ்சலட்சணம் பக்.26-34.

எளிமைத்தன்மையையும், கட்டுரை அமைப்போடு கூடிய ஆய்வுப் பாங்கையும் இவரின் ஒவ்வொரு படைப்பிலும் காண முடிகிறது.

இவரின் கண்ணகி சரித்திரம், திருவள்ளுவர், கலிங்கத்துப் பரணி போன்ற படைப்புகளில் இறுக்கமாய் உள்ள இலக்கியங்களை இலகுவாய் வடிவமைத்துக் கொடுக்கும் திறன் காணப்படுகிறது. இத்தன்மை, மக்கள் மூலநூலைப் படிப்பதற்கான ஆர்வத்தைத் தூண்டுவதாய் அமைகிறது.

பஞ்சலட்சணம் என்ற நூல் தமிழின் ஐந்திலக்கணமான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பனவற்றின் சாரத்தைப் பிழிந்து கொடுப்பதாய் அமைந்துள்ளது. இலக்கணம் என்றாலே எட்டிக்காயெனப் பார்க்கும் மாணவர்களின் பார்வையை இந்நூல் மாற்றுவதாய், இலக்கணம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாய் அமைந்து ஆசிரியரின் படைப்புத்திறனை வெளிக்காட்டுகிறது.

செல்வக்கேசவராயரின் ஒவ்வொரு படைப்பும் ஆய்வு நோக்கிலேயே அமைந்துள்ளது. நூலின் காலம் பற்றிய ஆய்வுகள், இடம் பற்றிய ஆய்வுகள், கதைமாந்தர் பற்றிய ஆய்வுகள், பாடபேத ஆய்வுகள், படைப்பாளர் சமயம் பற்றிய ஆய்வுகள், நிறை குறை பற்றிய ஆய்வுகள், ஆசிரியர் பற்றிய ஆய்வுகள், சொற்கள் பற்றிய ஆய்வுகள் போன்றன நிகழ்த்தப்பட்டுள்ளன. இவை ஆசிரியரின் ஆய்வு நோக்கோடு கூடிய படைப்புத்திறனைப் பறைசாற்றுகின்றன.

ஆசிரியரின் ஒவ்வொரு நூலும், அந்நூலுக்குத் தொடர்பான பிறவழிச் செய்திகளைப் கொண்டிருப்பதோடு, பின்னிணைப்பில் அந்நூல் கருத்துக்குத் தொடர்பான கட்டுரைகள், வெளிநாட்டார் குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள், இதழ்வழிச் செய்திகள், பிறநூல் செய்திகளைக் கொண்டு முழுமையடைகிறது.

கருத்தில் மாறுபடும் இடங்களில், ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆதாரங்களாலும், தக்க வாதங்களாலும் உரையாசிரியர், ஆய்வாளர், படைப்பாசிரியர் போன்றோரின் கருத்துகளை மறுக்கும் திறனை இவர் படைப்புகளில் காணமுடிகிறது.

செல்வக்கேசவராயரின் மொழி நடையினையும், சான்றுகாட்டும் தன்மையையும், மொழி ஆளுமையையும் கொண்டு அவரின் தமிழ், வடமொழி, தெலுங்கு, ஆங்கிலம் போன்றவற்றில் உள்ள புலமையை உணரமுடிகிறது.

தமிழ்ப் படைப்புகளில் கூடிய வரையில் வடமொழிச் சொற்களைத் தவிர்த்தல் வேண்டும் என்ற இவர்தம் எண்ணம், இவரின் படைப்பிலும், வடமொழிச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிட்டுக் கொடுப்பதிலும் வெளிப்படுகிறது.

இலக்கியத்திற்கு உரையெழுதுவோர், நூலாசிரியனின் கருத்தைத் திரித்துக் கூறுதலோ, தன் கருத்தைத் திணித்துக் கூறுதலோ கூடாதென்பதை இவர்தம் கூற்றுகளும், படைப்பின் போக்குகளும் தெளிவாக்குகின்றன. இதனால் இவரின் வழிநூல்கள் முதல்நூலாசிரியரின் கருத்தில் வழுவாமல் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

நூற்பாக்களுக்கு விளக்கம் அளிக்கும் பொழுது தம் விளக்கத்தோடு, தேவையான இடங்களில் பிற உரையாசிரியரின் விளக்கங்களையும் இட்டுச் செல்லும் போக்கினை இவர் படைப்பில் காணமுடிகிறது.

அக்பர், கண்ணகிசரித்திரம், கலிங்கத்துப்பரணி உரைநடை, பஞ்சலட்சணம், வியாசமஞ்சரி ஆகியவை எளிமையை அடிப்படையாகக் கொண்டே படைக்கப்பட்டுள்ளன. இதன்வழி மூலநூல்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதான இதன் முதன்மை நோக்கம் வெற்றி பெற்றதாகவே கொள்ளலாம்.

பஞ்சலட்சணம் என்ற இவரின் இலக்கண நூலும் இலக்கணம் கற்போர்க்கு முதல் படியாக அமைந்துள்ளமை போற்றுதற்குரியது.

குறளைப் போலவே செல்வக்கேசவராயரின் படைப்புகளும் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மையைப் பெற்றுள்ளமை ஆசிரியரின் படைப்புத் திறனின் வெற்றி எனக்கொள்ளலாம்.

முதன்மை நூல்கள்

1. திருவள்ளுவர், தி. செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1920.
2. பஞ்சலட்சணம், தி. செல்வக்கேசவராய முதலியார், கி.க.அ. சங்கத்தார் அச்சுக்கூடம், சென்னை, 1921.
3. சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி கதா சங்கிரகம், தி. செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1928.
4. தமிழ் வியாசமஞ்சரி (நற்புத்தி போதம்), தி. செல்வக்கேசவராய முதலியார், Printed At The Madras Diocesan Press, Vepery. 1921.

5. அக்பர், தி. செல்வக்கேசவராய முதலியார், கி.க.அ. சங்கத்தாரின் அச்சுக்கூடம், சென்னை, 1931.

6. கண்ணகி சரித்திரம், தி.செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1947.

துணை நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மது.ச. விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள், குன்றக்குடி பெரிய பெருமாள்.

கம்பநாடர்

கா. சத்தியபாமா

தமிழில் தோன்றிய காவியங்களுள் தன்னிகரற்று விளங்குவது கம்பராமாயணம். எளிமையும் இனிமையும் நிறைந்தது. பலராலும் போற்றப்படும் பல்வேறு சிறப்புகளையும் அழகையும் கொண்டது. வால்மீகியின் இராமகாதையை முதல்நூலாகக் கொண்டு எழுதப்பட்டது என்றாலும் தமிழகத்தின் பண்பாடு கலாசாரம் ஆகியவற்றுக்கேற்ப அமைந்த காவியம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய அறிஞர் பலர், கம்பரின் கவித்திறனையும் உயர்ந்த உள்ளத்தையும் சிறப்பாகப் போற்றியுள்ளனர். அத்தகைய பெரியார்களுள் ஒருவராக விளங்குபவர் செல்வக்கேசவராய முதலியார். கம்பர் மீது மிகுந்த மதிப்புக் கொண்டுள்ள இவர், "தமிழிற்குக் கதியாவார் இருவர்; ககரத்தைக் கம்பராகவும் திகரத்தைத் திருவள்ளுவராகவும் கொள்ளுக" என்பார். கல்லூரி மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இவர் எழுதிய நூல் 'கம்பநாடர்'என்பதாகும். இந்நூல் கம்பரைப் பற்றியும் கம்பராமாயணத்தைப் பற்றியும் ஆய்வு செய்யும் சிறந்ததொரு நூலாக அமைந்துள்ளது.

"கம்பநாடர்" நூல் சென்னை, டயோசிசன் அச்சகத்தினரால் (Diocesan Press) 1926 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் பழம்பெருமை வாய்ந்த தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தில் பார்வை நூலாகக் கிடைக்கின்றது. இந்நூலின் முதல் பக்கத்தில் "Kambar an essay" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதோடு, ஆங்கிலத்தில் ஒருபக்கத்திற்குள் அடங்கக் கூடிய 1909 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட முன்னுரை ஒன்றும் அமைந்துள்ளது. அதில் இந்நூல் செங்கல்வராய நாயக்கருடைய ஆர்பனேஜ் அச்சகத்தில் அச்சிடப்பட்டதாக அமைந்துள்ளது. எனவே இந்நூலின் முதல்

பதிப்பு 1909 இல் வெளிவந்துள்ளது என்பதும் மறுபதிப்பு அவர் மறைவிற்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வெளிவந்துள்ளது என்பதும் புலனாகும்.

நூலின் முன்னுரையிலேயே தாம் "கம்ப நாடர்" நூலைப் படைத்ததற்கான நோக்கம் என்ன என்பதைக் குறிப்பிட்டுள்ளார். கம்பரைப் பற்றியும் அவர் படைத்துள்ள இராமாயணத்தைப் பற்றியும் சுருக்கமாகக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்குவதே தம் நோக்கம் என்று கூறியுள்ளார். நூறு பக்கங்களில் அமைந்துள்ள இந்நூலின் முன் பாதியில் கம்பருடைய வாழ்க்கை வரலாறு குறித்து விரிவாகக் குறிப்பிடும் செல்வக்கேசவராய முதலியார், பின்பாதியில் கம்பராமாயணத்தின் கவித்துவம் பற்றி விரிவாகப் பேசுகிறார்.

ஆய்வின் நோக்கம்

நூலின் தோற்றுவாயில் தம்முடைய ஆய்வு நோக்கம் எது என்பதை வரையறுத்துக் கொள்கிறார் செல்வக்கேசவராய முதலியார்.

''புராதன கவிகளைப் புதிய கட்டளைக் கருவிகளால் அளந்து பார்ப்பதும் தக்கதன்று. ஆகவே, கம்பநாடரது ஜீவியசரித்திரத்தை விரிவாக ஆராயப் புகுவதும், இவருடைய நூல்களின் தராதரங்களைப் பலபடத் தேடித் துருவிப் பார்ப்பதும் இந்த வியாசத்தின் நோக்கம் அல்ல. ஏனைக் கவிராயர்களில் இவர் எம்மாத்திரம், ஏனைக் காவியங்களில் இவருடைய இராமாயணம் எம்மாத்திரம் என்பன துணிவதே இந்த வியாசத்தின் ஒருதலையான நோக்கம். இவருடைய புலமைத் திறத்தையும் குணங்குறிகளையும் இராமாயணத்தால் அறியக் கூடுமாயின், அவற்றை ஆராய்வதும், இந்த வியாசத்தின் ஒருபுடை நோக்கமாம்'' (ப.9) என்று எடுத்துரைத்துத் தம் ஆய்வு செய்யப்புகுவனவற்றை, 1. கவிச்சக்கரவர்த்தி ஆகின்ற இவர் யார்? இவர் எக்காலத்தவர்? இவர் காலத்திருந்த ஏனைப் புலவர் எவர்? இவர்க்கு ஓதலான நூல்கள் எவை? அவற்றில் எவற்றால் இவர் புலமை உருப்பெற்றது? இவரைச் சிறப்பெய்துவித்த இராமாயணத்தின் முக்கியாம்சங்கள் என்ன? இவர் இயற்றிய ஏனை நூல்கள் எவை? இவரைக் குறித்து இவர் இயற்றிய நூல்களால் ஏதேனும் அறியலாகுமா? என்ற இத்தகைய வினாக்களை எழுப்பிக் கைக்கெட்டலான சாதனங்களின் சார்பைக் கொண்டு, ஒருதலைச்சார்பாக ஒன்றும் கூறாமல் நடுநிலைமையாக இயன்றமட்டில் இவ்வினாக்களை இங்கு விடுக்க முயல்வோம் (ப.16) என்கிறார்.

ஆய்வு மூலங்கள்

கம்பநாடர் சரிதத்தை உள்ளபடி ஒழுங்காக வரையறுக்கத் தக்க ஆதரவுகள் மிகச் சிலவே. அவை தொண்டை மண்டல சதகம், சோழமண்டல சதகம், பாண்டிமண்டல சதகம், தமிழ் நாவலர் சரிதை முதலியவற்றில் காணப்படும் சில பாக்களும் கன்னபரம்பரையாக வழங்கும் சில வரலாறுகளுமேயாம் என்று குறிப்பிடும் செல்வக்கேசவராய முதலியார், "கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான்" சிங்களத்தீவில் சிங்காதனம் ஏறிய காலத்தை மஹாவம்சம் என்னும் பௌத்த சரித்திரக் குறிப்பு வெளியிட்ட அளவில் கடைச்சங்கம் இருந்த காலம் கட்டுரைக்கக் கூடியதாயிற்று. சிலாசாஸனங்கள் குலோத்துங்கன் முதலான சில சோழராசாக்கள் காலத்தை வரையறுத்து விட்டமையால், கம்பர் முதலான கவிகளுடைய காலம் ஒருவாறாக விளங்கி வருகிறது என்று குறிப்பிட்டுத் தம்முடைய ஆய்வுக்கான மூலங்கள் எவை என்பதை வரையறை செய்து கொண்டு நூலைத் தொடங்குகிறார்.

காவியம் பெயர்க் காரணம்

காவியம் என்னும் பெயராவது காவிய லட்சணமாவது தொல்காப்பியத்தில் கூறப்பட்டதில்லை. காவியம் என்னும் வடமொழிப் பெயர். "நாடகக் காப்பிய நன்னூ னுனிப்போர்" என மணிமேகலை யுள்ளும், "கூத்திய ரிருக்கையும் சுற்றியதாகக் காப்பிய வாசனை கலந்தவை சொல்லி" என உதயணன் கதையுள்ளும், "கருதுவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம, வெரியற விகற்பித்திட்டார்'' எனச் சிந்தாமணியுள்ளும் வழங்கியதை அடியார்க்குநல்லார் எடுத்துக் காட்டுகின்றனர். வான்மீகி முனிவர் அருளிச் செய்த இராமாயணம் ஒன்றே சிறப்புவகையால் காவ்யம் என முதலில் வழங்கப்பெற்றது. அப்பால் அத்துறைப்பட்ட நூல்கள் வடமொழியில் காவ்யம் என வழங்கலாயின (ப.11) என்று காவியம் என்பதற்கான விளக்கத்தை அளிக்கிறார்.

வடமொழியிலுள்ள 'காவ்யாதர்சம்' என்னும் அலங்கார சாஸ்திரத்தைத் தமிழில் மொழிபெயர்த்த காலம் குலோத்துங்க சோழன் காலம். அம்மொழிபெயர்ப்பான தண்டியலங்காரத்தில், ''பெருங்காப் பியநிலை பேசுங் காலை'' எனத் தொடங்கும் சூத்திரத்தில் காவிய லஷணம் உரைத்திருக்கின்றது. இச்சூத்திரத்தில் வரும் "நாற்பொருள் பயக்கு நடைநெறித்தாகித் தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய் என்பது, விழுமியது நுவலினும்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் கொள்ளலானதே. "சுவையும் பாவமும் மெய்ப்பாட்டியலிற் போந்தன" எனத் தொல்காப்பியம், "அம்மை முதலிய எட்டும் தொடர்நிலை செய்யுட்கு இலக்கண மென்பதும்,

அவற்றுள் இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும், தோலென மொழிப தொன்மொழிப் புலவர் என்பதும் தொல்காப்பியம். இங்ஙனமான தொடர்நிலைச் செய்யுள்களில், ஒருபுடை பிற்காலக் காப்பியங்களோ டொத்து, மேற்கூறிய இலக்கணங்கள் அமைந்து விளங்குவன சிலப்பதிகாரமும் மணிமேகலையும் என்கிறார் (ப.11-14). மேலும், வடமொழிக் காவியப் போக்கினைத் தமிழில் புகுத்தியவர் திருத்தக்கத்தேவர் என்று ஆய்ந்துரைக்கிறார்.

"பிற்காலக் காவியங்கள் வடமொழியில் 'சதுஷ பாதம்' என வழங்கும் பாவிற்கேற்பத் தமிழில் ஏற்பட்ட விருத்தப் பாக்களையே யாப்புறவாகக் கொள்ளலாயின. இங்ஙனம் செய்யலுற்றவர்களில் மிக்க ஸித்தி பெற்றவர் திருத்தக்கத்தேவர் என்பவர். இவர் பாடிய காவியம் சீவக சிந்தாமணி. வடமொழிக் காவியப் போக்கினைத் தமிழில் கொணர்ந்து கூட்டும் ஒருசார் கருத்தினையும் நன்கு நிறைவுறுத்தினார்'' என்பதன் வாயிலாக வான்மீகியால் வகுக்கப்பட்ட பாவிற்கு ஏற்ற யாப்பாக விருத்தப்பாக்கள் தமிழில் அமைந்ததை உரைக்கிறார். கம்பர், வடமொழிப் போக்கைப் பின்பற்றிய தமிழ்க் காப்பியங்களை ஓதி, அவற்றது கட்டுக் கோப்பின் மர்மங்களைச் செவ்விதின் உணர்ந்தவராகித் தமக்கு எடுத்துக் காட்டாக இருந்த காவியங்களினும் சிறந்த காவியம் பாடுவாராயினார்.

ஆசிரியர் பெயர்

கம்பரைப் பற்றிப் பல்வேறு செய்திகளையும் ஒன்றுதிரட்டி ஆய்வுகளை மேற்கொண்ட செல்வக்கேசவராய முதலியார் கம்பருடைய பெயர் 'கம்பர்' என்றும் 'கம்பநாடர்' என்றும் 'கம்பநாட்டாழ்வான்' என்றும் வழங்கப் பெற்றது என்பதோடு,

1. கம்பர் என்பது ஏகாம்பர முடையாரது பெயர் மரூஉ என்பர் சிலர்.

2. காளிவரம் பெற்றுக் கவிபாடு முன்னே, அறிவிலாச் சிறியராய்க் கம்பம்போல் இருந்தவராதலின் ஏனைச்சிறார்கள் இவரைக் கம்பன் கம்பன் என்றழைத்துவந்த காரணத்தால் கம்பர் எனப்படுவாராயினார் என்பர் வேறு சிலர்.

3. இவருக்கு இளமையில் கல்வி பயில்வித்த கணக்காயரது கம்பங்கொல்லையைக் காத்துவந்த காரணத்தால் கம்பர் எனப்பட்டார் என்பாரும் உளர்.

4. காளிங்கராயன் குதிரையைச் சாவவும் வாழவும் பாடியதைக் கேட்டு, அரசன் இவரை வருவித்த அளவில், இவரும் கம்பங்கொல்லையைக் காத்திருந்த கம்பத்துடனே சென்றார். இவரைக் கண்ட அரசன், இந்தக் கம்பனோ அது செய்தவன் எனக் கேட்டதனால் எழுந்ததான பெயர் என இக்காரணப் பெயர்கள் அனைத்தையும் (ப. 17) புலவர் புராணத்தார் எடுத்துக் கூறுவதை எடுத்துரைக்கிறார். இன்று இவை அனைவராலும் கூறப்படும் எளிய கருத்துகள் என்றாலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவை ஆய்வு அறிஞரிடையே பல்வேறு கருத்து மாறுபாட்டினைத் தோற்றுவித்தன என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். மேலும் அவருடைய நாடு குறித்தும் ஆய்கிறார்.

கம்பநாடு இவருடைய முன்னோர்களது ஜன்மதேச மாகையால், இவர் கம்பநாடர் என்று பெயர் பெற்றிருக்கலாம் என ஊகித்து, அதற்கு ஆதரவாக ஸ்ரீரங்கத்து வித்துவாமிசர்கள் இவரைக் கம்பநாட்டாழ்வான் எனப் புகழ்ந்து உள்ளதைக் 'கம்பநா டுடைய வள்ளல்' என்றும் 'கம்பநாட் டாழ்வான் கவி' என்றும் கூறுவதன் வாயிலாகச் சுட்டியுரைத்துள்ளார் (ப. 18).

தேரழுந்தூரில் பிறந்தவர் என்பதற்குச் சடகோப ரந்தாதியிலும் இராமாயணத் தனியன் ஒன்றிலும் வருவனவற்றை எடுத்துரைத்து, இன்னும் அவ்வூரில் 'கம்பர் மேடு' என்று ஒரு மனை வழங்கி வருவதும் இதனை வலியுறுத்துகின்றது என்று கூறுகிறார். 'கம்ப மேடு' என்பதற்கான பெயர்க் காரணத்தையும் ஆராய்ந்து, கம்பர் வீட்டில் நாடோறும் புதுமட்கலங்களில் அடிசில் அடுவது வழக்கம். அட்டுக் கழிந்த கலங்களை ஒரு கொல்லையில் எறிந்து வந்தனர். இங்ஙனம் உடைதலுற்ற குயக்கலங்கள் நாளடைவில் மேடிட்டன. கம்பருடைய வாழ்க்கைக்கு அறிகுறியான இந்த மேட்டை எவரும் கைக்கொள்ளாமல் விட்டனர் என அவ்வூரினர் கூறிவருகின்றனர் என்ற அரிய செய்தியைக் கூறுகிறார்.

வம்ச மரபு

கம்பரை ஓரரசனுடைய புதல்வர் என்பர்; திருவழுந்தூர் பிடாரி கோயிற் பூசை செய்யும் ஓச்சனின் புதல்வர் என்பர்; வேளாண் மரபினர் என்பர் எனப் பலவற்றையும் எடுத்துக் கூறி, அவ்வக் கருத்திற்கு ஏற்ற செவிவழி, இலக்கியச் சான்றாதாரங்களை எடுத்துக் காட்டுகிறார். (ப.19)

1. இவர் தம்மகன் அம்பிகாபதியை அரசன் கொன்ற காரணம் பற்றிப் பழிவாங்கத் தருணம் பார்த்திருந்தவர். வேட்டையாடும் போது ஒரு யானையால் துரத்திவரப்பட்ட

அரசகுமாரனை, "காட்டானை விட்டாலும் கவியானை விடாது" என்று ஈட்டியால் குத்திக் கொன்றவர் என்பதொரு கதை கொண்டு ராஜவம்சத்தில் பிறந்தவர் என்பார் கூற்றை, அத்தகையவராயின் மன்னர்களிடமிருந்து பெற்றோ வென்றோ ஊரையோ நாட்டையோ ஆண்டிருக்கலாம் என்று மறுக்கின்றார்.

2. வெண்ணெய்நல்லூர்ச் சடையப்பமுதலியார் போன்றோருடனும் மூவேந்தர்களுடனும் சமபந்தி போஜனம் செய்ததாகவும், கம்பருடைய மாணாக்கரான ஏகம்பவாண முதலியார் கம்பர் வீட்டிலே சிலநாள் இருந்து விருந்துண்டதாகவும் கன்னபரம்பரை உண்டு. இவர் திறம் கண்டு வேற்றுமை பாராட்டாமல் இருந்திருக்கலாம் என்று கூறுவதோடு, ஏரெழுபது நூல், இராமாயணத்தில் பலவிடங்களில் திருவெண்ணெய்நல்லூர் சடையப்பமுதலியாரைப் போற்றியிருத்தல், சடகோபரந்தாதியில், வேளாண் மரபினரான நம்மாழ்வாரைக் 'குருகூ ரெங்கள் குலக்கொ ழுந்தே" எனப் போற்றியிருத்தல் என்பன இலக்கியச் சான்றுகளாக விளங்குவதைக் காட்டுகின்றார்.

3. "சீரணி சோழநாட்டுத் திருவழுந்தூ ருவச்சன்" என்ற பாடமும் வாணியந்தாதன் என்பான் ‘‘மைம்மணிச் சீரன்றிச் சீரறியாக் கம்ப நாடன்" எனப் பாடிய வசைப்பாட்டும் ஒச்சன் என்பார்க்குச் சான்றாக உள்ளன என்று காட்டித் திருவழுந்தூ ருவச்சன் என்பது சந்தத்தின்படி சரியாக அமையவில்லை என எடுத்துரைக்கிறார்.

இறுதியாக அனைத்துக் கருத்துகளுக்கும் சான்றாதாரங்கள் இருப்பதால் இறுதியில் "அறிவார் யார் நல்லான் பிறக்குங் குடி?" என்ற வினாவினை எழுப்பி ஆய்வு உலகிற்கு ஆய்வின் முடிவை விட்டுவிடுகிறார்.

இளமையும் கல்விப்பயிற்சியும்

கம்பரின் இளமைப் பருவத்தைப் பற்றியும் கல்விப் பயிற்சியைப் பற்றியும் ஆய்வு செய்யப்புகும் செல்வக்கேசவராய முதலியார், தமக்கு முன்னால் கூறிய அறிஞர்களின் கருத்துகளை எடுத்துரைத்துத் தம்கருத்தை வெளியிடுகின்றார்.

'காளிங்கராயன் குதிரையால் இவர் காளிவரம் பெற்ற கதையைப் பலரும் கேட்டிருப்பார்கள். ஒரு பிரமராக்ஷஸனுடைய உபதேசத்தால் கம்பர் கவிபாடும் தெய்வப் புலமை பெற்றாரெனத் தொழுவூர் ஸ்ரீவேலாயுத முதலியார் தமது ஏரெழுபது முகவுரையில் உரைத்திருக்கின்றனர். இத்தன்மைத்தான கதைகளால் பெறப்படும் உண்மையாவது, அவர் இளமையிற்றானே கவிப்பாடுந் திறம்

உடையவர் என்பதேயாகும். இளமையில் சடையப்ப முதலியாருடைய வீட்டில் வளர்ந்தபடியால் அம்முதலியாருடைய மைந்தரோடு இவரும் ஒரு கணக்காயரிடத்தில் சிறிது கல்விப்பயிற்சி செய்யப்பெற்றவர் என்பதில் ஐயமின்று. இவர் வரகவி என்று கூறுவார் கூறுக. இவர் பல நூல்களையும் படித்தவர் என்பதற்கு இவருடைய இராமாயணமே சான்று பகரும்" (ப.21).

கம்பரும் அவர் காலத்துப் புலவரும்

கம்பருடைய சமகாலத்தில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க புலவர்களைப் பற்றி எடுத்துக் கூறி, அவர்தம் புலமையை ஒப்பிட்டு நோக்கிக் காணுகின்றார் செல்வக்கேசவராயர். மேலும் மேலைநாட்டுக் கவிகளோடு ஒப்பிட்டு நோக்கிக் காணும் ஒப்பியல் அணுகுமுறை அவர்தம் பரந்துபட்ட பிறமொழியறிவையும் புலப்படுத்துவதாக அமைந்து காணப்படுகின்றது.

சோழ மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம் ஆகிய சான்றாதாரங்களை எடுத்துக்காட்டிக் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர், ஔவையார் என்னும் நால்வரும் சமகாலத்தவர் என்று எடுத்துரைத்து அவரவர்தம் புலமைச் சிறப்பை நுணுகிக் காண்கிறார் செல்வக்கேசவராய முதலியார்.

"ஔவையார் மிக்க அனுபவஸித்தி எய்தியிருந்தவர். மிகச்சிறந்த ஆசுகவி. உலகியலுக்கு அமைந்த நீதிகளைப் பாடிவந்தவர். அதனால் புவிராயர் கவிராயர் முதலான எல்லோராலும் பூசிக்கப்பட்டு வந்தார். புகழேந்தியானவர், இங்க்லீஷில் பௌவர், கோல்ட்ஸ்மித் என்பார்களைப் போல் செம்பாகமான கவி. கம்பர், கற்பான சக்தியிலும் வருணனை யலங்காரங்களிலும் மில்டனுக்குக் குறைந்தவரல்லர். யூரோப்பியர் களுடைய ஆதிகவியான ஹோமருக்கு எவ்விதத்திலும் இளைப்பவரல்லர். பிரபஞ்ச விலாஸப் புலமையில் ஒருவாறு ஷேக்ஸ்பியரோ டொத்தவர். ஒட்டக்கூத்தரோ, கதே முதலானவர்களைப் போல் இரண்டாந்தரமான கவியென்று கொள்ளலாம். கூத்தரும் கேவலம் அல்பமான கவி அல்லராயினும், கம்பராகிய கதிரவன் முன் மின்மினியாகத் தோன்றினர். புகழேந்தியான சந்திரன் முன்னே தாராகணங்களில் ஒன்றாகக் காணப்பட்டார். இவர்கள் மூவரும் ஒவ்வொரு துறைப்பாடலில் மிகக் கைபோனவர்கள். வெண்பாவில் புகழேந்தியும், விருத்தப்பாவில் கம்பரும், கோவை உலா அந்தாதி பாடுவதில் ஒட்டக்கூத்தரும், இணையற்றவர் (ப.25) என்று நடுநிலையில் நின்று தன்னுடைய கருத்துகளை விளக்கி ஓர் ஒப்பிலக்கிய ஆய்வாளராக விளங்குகிறார்.

கம்பர் காலம்

கம்பருடைய காலத்தைக் குறித்து மாறுபட்ட கருத்துகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிஞரிடையே நிலவியது. கோவைக் கம்பன் கருத்திருமன் கம்பருடைய காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் பன்னிரண்டாவது நூற்றாண்டு என்றும் இரு வேறு கருத்துகள் நாட்டில் நிலவி வந்தன (ப.21) என்று தம் கம்பர்கவியும் கருத்தும் நூலில் குறிப்பிடுகின்றார்.

1. கம்பருடைய காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்று குறிப்பிடுகிறார் செல்வக்கேசவராய முதலியார். ஒட்டக்கூத்தருடைய மாணாக்கனாக இருந்தவர் இரண்டாம் குலோத்துங்கன் எனப்படும் குமார குலோத்துங்கன். அவனுடைய ஆட்சிக்காலம் கி.பி. 1132 முதல் 1162 வரை.

2. கம்பர் சோழனிடம் மனவேறுபாடு கொண்டு ஆந்திரதேசத்தில் ஓரங்கல் நாட்டின் அரசன் பிரதாபருத்திரனை அடைந்து வாழ்ந்திருந்ததைத் தமிழ் நாவலர் சரிதை வெண்பா எடுத்துரைக்கும். இந்தப் பிரதாபருத்திரனின் ஆட்சிக்காலம் கி.பி. 1162-க்குச் சிறிது முன்னே தொடங்கி 1197-க்குப் பின்னே சிறிது காலம் வரை.

3. ஒட்டக்கூத்தர் சடையப்ப வள்ளலின் தந்தையாகிய சங்கர முதலியாரிடத்து உதவித்தொழில் புரிந்திருந்த காலத்தில் காங்கேயன் என்ற வள்ளல் உதவினார். அவர்மீது நன்றி பாராட்டி நாலாயிரங் கோவை என்ற நூலை எழுதியுள்ளார் ஒட்டக்கூத்தர். மேலும் விக்கிரம சோழனுலாவில், சோழனோடு புடைசூழச் சென்றவர்களில் சடையப்ப முதலியாராகிய 'திரிகர்த்தனை' ஒருவராகச் சேர்த்துப் பாடியிருப்பது ஆகிய மூன்று காரணங்களைக் கொண்டு, கம்பர் பன்னிரண்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் பெருஞ் சிறப்புற்றிருந்தார் என்பதை நிறுவுகிறார்.

கம்பருடைய காலம்பற்றிய கருத்திற்கு அரணாகக் கம்ப இராமாயணத் தனியன் ஒன்றின் வாயிலாக அரங்கேற்ற காலத்தை ரா. ராகவ ஐயங்கார் கி.பி. 1185 எனக் குறிப்பிடுவதைச் சுட்டுகிறார். மேலும் பெரியவாச்சான் பிள்ளையின் பெரிய திருமொழிப் பாசுர வியாக்யானத்தில் கம்பராமாயண - பாலகாண்ட -ஆற்றுப்படலத்தின் பத்தாவது விருத்தத்தின் "ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்து" என்ற பாடலடியை எடுத்துக் காட்டி, இவருடைய பிறப்பு கி.பி. 1128; ஆதலின் கம்பர் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்று காலத்தை வரையறை செய்துள்ளார்.

கம்பர் கற்றிருந்த நூல்கள்

கம்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராதலால், அதுவரை வழங்கி வந்த நூல்கள் பலவற்றைக் கற்றுத் தெளிந்தவர். கல்வியிற் பெரியன் கம்பன் என்பது தமிழில் வழங்கும் மூதுரை.

பெரும் புலவர்கள் தாங்கள் பயின்ற நூல்களின் சாரத்தையும் தங்கள் ஆசிரியப் பரம்பரையின் கோட்பாடுகளையும் தங்கள் காலப்போக்கின் இயல்பையும் தழுவித் தாங்கள் நூல் படைப்பது இயல்பானது என்று குறிப்பிடும் செல்வக்கேசவராய முதலியார் மேலோட்டமாகத் திறந்து பார்த்தளவில் கண்ணெதிர்ப் பட்டதாகப் பல்வேறு சான்றுகளைக் காட்டுகிறார். சீவக சிந்தாமணியில்,

வெள்ளிவெண்
கோனி ரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானி ரைத்தது மணந்து சொரிந்தவே

என்று பாடுகின்றார் சிந்தாமணியார்.

புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்

என்றார் கம்பர்.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது

என்ற குறட் கருத்தை,

உதவாம லொருவன் செய்த உதவிக்குக் கைம்மா றாக
மதயானை அனைய மைந்த மற்றுமுண்டாக வற்றோ

என்ற கிட்கிந்தைப் படலச் செய்யுளில் பொதிந்து வைத்தார் என்று ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

சிதைவகல் காதற் றாயை தந்தையை குருவை தெய்வப்
பதவியந் தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றல் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ

என்றது

ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்

பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பாடிற்றே

என்ற புறப்பாட்டைத் தழுவியது என்று ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

கவந்தன் படலத்தில் "ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ" என்றது நம்மாழ்வாருடைய பதினைந்தாம் திருவாய்மொழியில் பத்தாவது பாசுரமாகும் என்பதை எடுத்துக் காட்டி ஒப்புமையைச் சுட்டுகின்றார். சீவகசிந்தாமணி, திருக்குறள், புறப்பாட்டு, திருவாய்மொழி ஆகிய நூல்களோடு ஒப்பிட்டுக் காட்டும் (ப. 32-38) செல்வக்கேசவராய முதலியார் கம்பருடைய விருத்தங்களின் ஓசைத்திறம் சூளாமணி விருத்தங்களின் ஓசைத்திறத்தை ஒத்திருப்பது உய்த்துணர்வார்க்குப் புலப்படும் என்று ஒப்பிட்டுக் காட்டுகிறார். மேலும் கம்பர் சூளாமணியை நன்கு பயின்றிருத்தல் கூடும் என்று தம் கருத்தைப் புலப்படுத்துகிறார் (ப. 14).

கம்பரின் கவிச்சுவை

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமாயணக் காப்பியம் முழுமையையும் உணர்ச்சி மயமாகப் படைத்தளித்துள்ளார். உணர்வுக்கு விருந்தூட்டுவது மட்டுமல்லாமல் சொற்சுவை பொருட்சுவை உடையதாக அமைத்துள்ளார். இதனைக் குறிப்பிடும் பொழுது செல்வக்கேசவராய முதலியார், "இவரிடத்தில் தன்மைநவிற்சியும் உண்டு; உயர்வு நவிற்சியும் உண்டு. இவர் கவியில் இலக்கண அமைதியும் உண்டு ; அழகும் ஆழமும் உண்டு. இவருடைய கவிகள் வெண்சொல்லும் புதைபொருளும் உடையனவாய் அத்துணை வல்லாரையும் முதலில் மயக்கிப் பொருள் வெளிப்பட்டவிடத்துப் பேரானந்தமுறச் செய்யும் இயல்பின" என்று எடுத்துரைக்கிறார். இத்தகைய சிறப்பினை உடையவராகக் கம்பரைக் குறிப்பிட்டாலும் நடுநிலைமையோடு அவர்தம் கவிதைகளில் தாம் கண்ட குறையை, "முற்காலத்துக் கவிகட்கும் பிற்காலத்துக் கவிகட்கும் இடையே நின்றவராதலால், முன்னோர்களுடைய சிறப்பும் உடையவர். பின்னோர்களுடைய குறைபாட்டில் ஒரு கூறும் உடையவர்" (ப.42) என்று சான்றுகளோடு உரைக்கிறார்.

கம்பர், சான்றோருடைய கவிதைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் கோதாவரி நதியை வர்ணிக்கின்ற இடத்தில்,

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிஅ ளாவிச்
சவிஉறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச்
சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா் வரியினை வீரர் கண்டார்

என்னும் பாட்டில் அறுதியிடுகின்றார். அத்தகைய உயர்ந்த எண்ணங்களையே சிந்திக்கும் தன்மையுடைய கவிச்சக்கரவர்த்தியின் காப்பியத்தில் பிறர் சுட்டும் குறையினையும் அதற்கான காரணத்தையும் ஆராய்ந்து உரைக்கிறார். "இம்மாண் கதைக்கோ ரிறையாய் இராமன் மானிட உருவங்கொண்ட முழுமுதற் பொருளென்றும், தசகண்டனான இராவணனைச் சங்கரித்து ராஷஸ குலத்தைக் கருவறுக்கும் பொருட்டே அம் முழுமுதற்பொருள் திருவவதரித் ததென்றும் கருத்தில் கொண்டவராதலால், கம்பர் சில இடங்களில் பிரபஞ்ச நாடகத்தின் எல்லையைக் கடந்து போவாராயினர். மானுட ஸம்பந்தமுடைய ஸந்தர்ப்பங்களில் இராமன் மனிதனாகவே நடித்தலான், கம்பர் அன்ன ஸந்தர்ப்பங்களில் இராமரைப் பிரபஞ்ச நாடகத் துட்படுத்தியே பிராக்ருத விரோதமின்றிப் பாடுவர். நிருதர் எதிர்ப்பட்டவிடத்து, இராமரை நிலங்கடந்த நெடுமுடி யண்ணலாகக் காட்டலால், அன்னவிடங்களில் கம்பரும் அப்ராக்கருதமாகவே பாடுவர். இவ்வபூத கற்பனைகளுக்காகக் கம்பரை வெறுப்பதாயின் வான்மீகரையும் வெறுப்பவராவோம்" (ப.43). மேலும் "பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ" எனக் கம்பர் அக்காலத்தே தமக்குப் பத்திரமான பாதுகாப்பை அமைத்துக் கொண்டனர் என்று குறிப்பிடுகிறார்.

கம்பர் அடைகளையும் உவமைகளையும் ஒன்றின் மேலொன்றாக அடுக்கிக் கொண்டு போதலால், கருத்து மறைபட்டுக் கதையும் இடையீடுபட்டு மறந்து போகின்றது என ஓர் இங்க்லீஷ் ஆசிரியர் குறை கூறுகின்றார் என்பதை எடுத்துக்கூறி, அதற்கான காரணத்தை ஆராய்ந்து, கல்வியும் விரிவும் கற்பனா சக்தியும் உடையவராகையால் சொல்லும் பொருளும், பருந்தும் நிழலும் போல் பிணைந்து செல்கின்றன. அதனால் அவருடைய கவியானது தட்டுத் தடையின்றிக் கதித்துச் செல்கின்றது என்கிறார். காரண காரியங்களை ஆராய்ந்து முடிவு கூறும் திறம் செல்வக்கேசவராய முதலியாரிடம் இயல்பாக அமைந்துள்ளது என்பதற்கு இவை தக்க சான்றாக அமைகின்றன.

கம்பராமாயணம் கற்பதில் பலநூல் கற்ற வல்லவர்களுக்கும் இடர்ப்பாடுகள் தரக்கூடிய கம்பசூத்திரப் பாடல்கள் உள்ளன. கம்பசூத்திரம் எனப்படுபவை இலக்கணத்தோடு பொருந்தாத முடிவுகளும் அகராதி கொண்டு அறிய இயலாத பொருள் பயன்பாடும் பெற்றுப் படிப்போரைத் திகைக்க வைக்கக் கூடியவை என்பார். "இவ்வாறு, கம்பர் வேண்டுமென்றே பலவிடங்களில் அமைத்ததாகத் தோன்றுதல் இல்லை. தாம் பாடுதலுற்ற விஷயத்தில் மாத்திரமே சிந்தனை வைத்து அசுவதாட்டியாக விரைந்து அன்றன்று அறுநூறும் எழுநூறுமாக விருத்தங்களைப் பாடிச் செல்கையில் சிற்சில ஸந்தர்ப்பங்களில் இப்படிப்பட்ட முடிவுகளும் ப்ரயோகங்களும் தாமே அமைவனவாயின" (ப.46) என்று கூறுகிறார். இத்தகைய கம்பசூத்திரத்திற்குச் சான்றாகப் பம்பைப் பொய்கைப் படலம் நாற்பத்தொன்றாவது பாடலாகிய,

> மண்டுயின் றனநிலைய மலைதுயின் றனமறுவில்
> பண்டுயின் றனவிரவு பணிதுயின் றனபகரும்
> விண்டுயின் றனகழுதும் விழிதுயின் றனபழுதில்
> கண்டுயின் றிலநெடிய கடறுயின் றனகளிறு

என்பதில் 'பழுதில்கண் துயின்றில நெடிய கடல் துயின்றன களிறு' என்னும் இறுதியடிக்குப் பொருள் கொள்வதில் மயக்கம் உண்டாகின்றது என்பதை எடுத்துக்கூறி விளக்குகிறார். கடல்துயின்றிடு களிறு என்று பாடம் கொண்டால் பொருள் வெளிப்படை. திருப்பாற்கடலில் துயிலும் (களிறாகிய) பெருமான் கண்கள் துயின்றில (பிராட்டியைப் பிரிதலான்) என்பதாம். களிறுகளாகிய இராமஇலட்சுமணர் என்பதும் பொருந்தும் என்கிறார்.

கம்பர் உவமைகள்

கவிஞர்கள் தங்கள் கருத்துகளைப் படிப்போர் எளிதில் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் உவமைகளைக் கையாளுகின்றனர். கம்பர் தம் காவியத்தில் நூற்றுக்கணக்கான உவமைகளைக் கையாண்டுள்ளார். அவை கம்பீரமுடையவை யாகவும் மிகப் பொருந்தினவையாகவும் விளங்குகின்றன எனக் கூறிச் சான்றுகளை எடுத்துக் காட்டுகிறார் செல்வக்கேசவராய முதலியார்.

சான்றாக, சித்ரகூடப் பருவதத்தின் மீது சீதைக்குப் பலவகைக் காட்சிகளை விளக்கிச் சொல்கையில்,

அளிக்கும் நாயகன் மாயைபுக் கடங்கினன் எனினும்
களிப்பில் இந்தியத் துயோகியைக் கரக்கிலன் அதுபோல்
ஒளித்து நின்றுள ராயினும் உருத்தெரி கின்ற
பளிக்க றைச்சில பரிமுக மாக்களைப் பாராய்

என ராமன் உரைப்பதைக் காட்டுகின்றார்.

சிற்சில இடங்களில் உருவகங்களை வெகு நயமாக அமைப்பர் கம்பர். மந்திராலோசனை மண்டபம் நோக்கிச் செல்கின்ற இராமனை மாளிகையில் இருந்து பெண்கள் காணுவதைப் பல்வேறு சான்றுகளுள் ஒன்றாக,

நீளெ முத்தொடர் வாயிலின் குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்தினோ டரமியத் தலத்தினு மலர்ந்த
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்

எனக் காட்டுகின்றார்.

காவியப் பாத்திரங்களின் மனநிலைக்கு ஏற்றவாறு பாடல்களைப் படைத்தல் காவியத்தின் பொருட்சுவையை உயர்த்தும் உத்திகளில் ஒன்றாகும். காளிதாசன், சேக்ஸ்பியர் போன்ற நாடகக் கவிகளைப் போலக் கம்பரும் பாத்திரங்களின் இயல்பை நுனித்தறிந்தவர் என்பது அவர்தம் பாடல்கள் வாயிலாகப் புலனாகின்றது என்பதை எடுத்துக் காட்டுகளுடன் செல்வக்கேசவராய முதலியார் விளக்குகின்றார்.

சூர்ப்பநகை கூறிய உவமை முதலியவற்றின் உதவிகொண்டு இராவணன் சீதையின் அழகில் மயங்குகின்றான். மூன்று பாடல்கள் மூலமாக இராவணன் கண்ட உருவெளித் தோற்றத்தை விளக்குகிறார் கம்பர். மூன்றாவது பாடலில், "மெல்ல மெல்ல, மடமங்கையராய் என் மனத்தவர் ஆயினாரே" என்று இராவணன் உரைக்கும் உரையை நோக்கும் பொழுது, சூர்ப்பநகையின் உரையைக் கொண்டு இராவணன் கருத்தில் அமைத்துக் கொண்ட உருவமே இங்குக் கூறப்படும் சீதையின் தோற்றம் என்பது புலப்படும். இங்ஙனம் தான் கண்ட உருவம் சீதையோ அன்றோ என ஐயுற்றவன் சூர்ப்பநகையிடத்துக் கேட்க, இராவணன் கேட்கின்ற நோக்கத்தை அறியாது, தன்னையும் மறந்து,

செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயி னோடும்
சந்தார்தடந் தோளொடும் தாழ்தடங் கைகளோடும்
அந்தார்அக லத்தொடும் அஞ்சனக் குன்ற மென்ன
வந்தான்இவ னாகும்அவ் வல்வில் இராமன் என்றாள்

தான் நேரில் கண்ட இராமனின் உருவத்தைக் கண் முன்னே படைத்துக் காட்டுகிறாள் என்பதை ஒரு சான்றாக எடுத்தோதுகிறார்.

இரட்டுறமொழிதல்

கம்பர் ஓரிரு இடத்தில் இரட்டுற மொழிவதாகச் சுட்டும் செல்வக்கேசவராய முதலியார், சீதையின் அழகை இராவணனிடம் வருணித்தவுடனே, சூர்ப்பநகை அவனை நோக்கி உரைத்ததாக அமையும் மூன்று செய்யுள்களையும் விளக்குகிறார்.

இந்திரன் சசியைப் பெற்றான்; இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான்; தாரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான்; சீதையைப் பெற்றாய் நீயும்
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கிலை உனக்கே ஐயா

என்ற பாடலின் இறுதியடி, "முடிவாகப் பார்த்தால் அவர்க்கெல்லாம் நன்மை இல்லை, உனக்கே நன்மை உண்டு; அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்பாலை அடைந்து பெறும் இன்பம் இன்பமன்று; நீ இவளை எய்தியடையும் இன்பமே இன்பம்" என்றும், "அவர்க்கே நன்மை (உண்டு), உனக்கு (நன்மை) இல்லை" என்றும் இரண்டுவிதமாகப் பொருள்படுகின்றது என்பதை அழகுற எடுத்துக் காட்டுகின்றார்.

கவித்திறமை

கம்பர் ஏற்ற இடங்களில் உரைக்கின்ற கருத்து உள்ளத்தைவிட்டு அகலாமல் ஊன்றி வேர் கொள்ளுமாறு மிகவும் சிறப்பாக உரைப்பார் என்று எடுத்துக்கூறிப் பல்வேறு சான்றுகளில் ஒன்றாக ஒப்பனை அழகைக் காட்டிலும் சீதைக்கு இயற்கை அழகு மிகுதி என்பதை,

உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக் கழகு செய்தார்

என்று பாடியதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

பாவகம்

ஒரு காப்பியம் முற்றிலும் கவியின் கருத்தால் அமைவது காப்பியப் பண்புகளில் ஒன்றாகும். காப்பியம் கவியின் கற்பனையால் சிறக்கின்றது. கவி தானே அவ்வுணர்வுகளை வெளிப்படுத்துவதன் வாயிலாகவும் கதை மாந்தர்களுடைய உள்ளக் கருத்துகளாலும் உரையாடல்களாலும் விளங்கும். இப்பாவகப் பண்பை

சான்றாதாரங்களுடன் விளக்குகின்றார் செல்வக்கேசவராய முதலியார்.

தந்தையின் வாக்கை உயிரென மதிக்கும் இராமன். முடிதரிக்க இசைந்தது தந்தையின் வாக்கினால். "பரதன் அரசாள்க; நீ வனவாசம் செல்க" என்று தசரதன் ஏவலாகக் கைகேயி கூறிய போதும் தந்தையின் கட்டளையை மீறாதவனாக விளங்குகின்றான் இராமன். கைகேயியின் உரையைக் கேட்குமுன் கொண்டிருந்த முகப்பொலிவு அவள் உரைத்த பின்னரும் மாறுபடவில்லை.

இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்புஅவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா

என இதனைக் காட்டுவார் கம்பர். மனம், மொழி, மெய் ஆகிய மூன்றிலும் எவ்வித வேறுபாடும் தோன்றாது விளங்கினான் என்பதோடு அரசுப்பொறுப்பின் அருமையை நன்குணர்ந்தவன் இராமன். ஆகவே கைகேயியின் சூழ்ச்சியால் அரசு இழப்பதை இழிவாகக் கருதாது நலமாகவே ஏற்றுக் கொண்டான் என்கிறார்.

சூழ்நிலைக்கேற்ற சந்தம்

கம்பராமாயணப் பாடல்களில் அமைந்துள்ள சந்தங்களைப் பற்றிச் செல்வக்கேசவராய முதலியார், "அவர் நடையானது ஸந்தர்ப்பத்திற்கேற்ற வாறாகக் கம்பீரமும் இன்னோசையும் மிடுக்கும் தளர்ச்சியும் கொண்டிருப்பது. ஸந்தோஷ செய்தி உரைக்குமிடத்தில், சந்தத்திற் கேற்பக் கூத்தாடவுங் கூடும். வியஸனமான செய்தி உரைக்குமிடத்தில், படிக்கின்றவன் பாட்டைப் பரபரப்பாகப் படிக்கப் புகுந்தாலும், அப்பாடல்கள் பரபரப்பாக நாவிலே உழல்வதில்லை. கதாநாயகன் அழுகின்ற இடத்தில் கதைப் படிக்கின்றவனும் அழுவான். அவன் களிக்கின்ற இடத்தில் இவனும் களிப்பெய்துவான். இது கவிவல்லோர்க்கு மாத்திரமே கைவந்த மர்மம்; எல்லோர்க்கும் இது செய்ய இயலாது" (ப.73-74) என்று எடுத்தோதுகிறார்.

கம்பரும் வால்மீகியும்

கம்பராமாயணம், வால்மீகி இராமாயணம் கற்றவர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டும் தம்முடைய கருத்தாகிய 'கம்பராமாயணமே சிறந்தது' என்ற கருத்தைக் கூறுகின்றார் செல்வக்கேசவராய முதலியார். வடமொழிப் பயிற்சி இல்லாதவர்களுக்கும் வால்மீகி இராமாயணத்தின் நேரான ஆங்கில

மொழிபெயர்ப்பை எதிரில் வைத்துக் கொண்டு ஒத்திட்டுப் பார்த்தால் கம்பர் கவியில் சிறந்தவர் என்பதும், கதையளவில் மட்டும் வால்மீகி இராமாயணத்தைத் தழுவியவர் என்பதும் புலப்படும் (ப.75) என்கிறார்.

கம்பராமாயணம் வால்மீகி இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது என்பதால் இதில் சிறப்பேதும் இல்லை என்ற கருத்து சிலரிடையே நிலவுகிறது. இரண்டையும் படைத்தவர்கள் இதற்கு விளக்கம் கூறத்தக்கவர்கள் என்பது செல்வக்கேசவராய முதலியாரின் கருத்தாகும். அதற்கு ஆதரவாகக் கால்ட்வெல், பௌவர் போன்றோரின் கருத்துகளை முன்வைக்கிறார். 'கால்ட்வெல் என்னும் அத்யக்ஷர் ஹோமருடைய இலியட்டுக்கும் போப்பினுடைய இலியட்டுக்கும் என்ன பேதமோ, அதே பேதம் வால்மீகி ராமாயணத்துக்கும் கம்பராமாயணத்துக்கும் உண்டு என செப்பியிருக்கிறார். பௌவர் என்னும் அத்யக்ஷர், "நாம் வால்மீகி ராமாயணத்தையும் படித்திருக்கிறோம். வால்மீகி முனிவர், விரிவாகக் கூறுகின்றவர்; கம்பர், சில இடங்களில் சுருங்கக் கூறுகின்றவர். இன்பந் தருவனவான சொற்போக்குகளும் அலங்காரமான கற்பனைகளும் ஆங்காங்கு விசேஷமாயிருக்கின்றன. ஆயினும், வால்மீகியை வியந்து கூறுவதோ கம்பரையே உவந்து கூறுவதோ எனத் துணிதல் கூடாமல் இடர்ப்பட்டோம் என்றெழுதியிருக்கிறார்" (ப.74-75) என்கிறார். மேலும் கம்பராமாயணத்தை வாசித்த வடநூல் வல்லவர்களாகிய அந்தணர் சிலர், கம்பர் சில இடங்களில் வால்மீகியைக் காட்டிலும் விஞ்சியிருப்பதாகக் கூறி, சித்ரகூட வர்ணனை வாலிவதை முதலிய இடங்களில் அதிசயம் அடைகின்றனர் என்று எடுத்துரைத்துச் சான்றுகளைத் தருகின்றார்.

முனிவராக வந்த இராவணன் சீதையை ஒரு கையால் கூந்தலையும் ஒரு கையால் தொடைகளையும் பிடித்தெடுத்துத் தேரில் வைத்துக் கொண்டு போனான் என்றது வால்மீகி ராமாயணம். கற்புடையாரை அவர் விருப்பின்றித் தீண்டினால் உடல் வெடிப்பதாக என்று இராவணன் பெற்றுள்ள சாபமொன்றை அடியிட்டுக் கொண்டு, கம்பர், இராவணன் நிலத்தைக் கீண்டு சீதையைப் பன்னசாலையோடு தேரில் எடுத்து வைத்துக் கொண்டு போனான் என்று கதையைத் திரித்துக் கொண்டார் என்பது அவரது சான்றாதாரங்களுள் ஒன்று.

கம்பருடைய கவிப்போக்கு

கம்பர், மொழி நுட்பங்களையும், சொல்லாற்றலையும் பொருளாற்றலையும் நன்குணர்ந்தவராதலின், கவிபாடாது இருக்கையில்

கருத்தை மட்டும் எண்ணியிருப்பார். சொற்கள் அதற்கியையத் தாமே வந்து இயையும். இதற்குச் சான்றாக, மன்னரும் பிறரும், "சேதுபந்தனம் வரையில் பாடி விட்டீரா? அப்படியானால் அந்தப் படலத்தில் ஒரு கவியைச் சொல்லிக்காணீர்" என்ற உடனே,

> **குமுத னிட்ட குலவரை கூத்தரில்**
> **திமித மிட்டுத் திரியுந் திரைக்கடல்**
> **துமித மூர்புக வானவர் துள்ளினார்**
> **அமுத மின்னு மெழுமெனு மாசையால்**

என்று அப்பொழுதே பாடினார் (ப.80) என்ற நிகழ்வைச் சுட்டிக் காட்டுகின்றார்.

கம்பர் இயற்றிய ஏனை நூல்கள்

கம்பநாடர் இராமாயணம் எழுதியதோடன்றி, சடகோபரந்தாதி, சரசுவதி அந்தாதி, இலக்குமி அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம், காஞ்சிப் பிள்ளைத்தமிழ், சோழக்குறவஞ்சி, இராமாயண வசனம், ஓர் அகராதி முதலியவற்றை எழுதியதாகக் கூறுவர் என்ற கருத்தைக் கூறும் செல்வக்கேசவராய முதலியார், கம்பநாடருடைய கவித்திறமெல்லாம் இராமாயணத்தில் முற்றும் ஏறிநின்றது. அத்திறம் கட்புலனாகின்ற மற்ற நூல் சடகோபரந்தாதி ஒன்றே. சரசுவதி அந்தாதியைச் சிறுவயதில் பாடினார் போலும் (ப. 81) என்றும் இலக்குமி அந்தாதி என்பதொன்று இவர் பாடினதாகக் கூறுகின்றார். இதில் கம்பர் வாக்கு ஓரடியளவாகத் தானும் இலதென்றே காண்கிறது என்று இலக்குமி அந்தாதியின் 'தாயகமேயெவ் வுலகுக்கும் யார்க்கும் தயாநிதியாம்' (பாடல் எண் 15); சரசுவதி அந்தாதியின் 'நாயக மான மலரக மாவது ஞானவின்ப' (பாடல் எண் 15) ஆகிய இரு பாடல்களையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

ஏரெழுபது, கம்பர் பேரும் புகழும் எய்திய பின்னர்ப் பாடியதாகத் தெரிகிறது. செம்பொற் சிலையெழுபது வெகுவாய ஏரெழுபதின் போக்கே போக்காக அமைந்து கிடப்பினும் அதனை இயற்றினார் கம்பரென்றே துணிந்து சொல்வதற்கான ஆதாரம் இலது. காஞ்சிப்புராணம், காஞ்சிப் பிள்ளைத்தமிழ், சோழக் குறவஞ்சி, திருக்கை வழக்கம் என்னும் நூல்களும் கம்பர் இயற்றினாரெனச் சிலர் கூறுகின்றனர். இவற்றில் திருக்கை வழக்கம் தவிர மற்றவை அச்சிற் காணாமையால் எவர்க்கும் கிடைத்தலரிதாக உள்ளன. அச்சிடப்பட்ட திருக்கை வழக்கமும் நூலுக்கு நூல் மாறுபட்டுக் காணப்படுவதால், கம்பர் பாடிய அடிகள் இன்னின்னவையே எனத் துணிந்து சொல்ல இயலவில்லை. கம்பர்

ஓரகராதியும் இராமாயண வசனமும் எழுதினாரெனச் சிலர் கூறுகின்றனர்.

கம்பரின் குணச்சிறப்பு

ஒரு கவிஞரின் நூலைக் கொண்டு அவர் எத்தன்மையை உடையவர் என்பது பெறப்படும். அவ்வாறு அறிந்து கொள்ளாதவன், கவிஞரை நேரில் காணினும் இன்னதன்மை உடையவர் என்பதை அறிந்து கொள்ள இயலாதவன் என்ற ஆங்கில ஆசிரியர் கூற்றைச் சுட்டிக் காட்டி, இராமாயணத்தால் கம்பர் எத்தன்மை உடையவர் என்பதை ஆய்ந்து, அவரது கல்வி கேள்விகளின் அருமையைப் பாராட்டுகிறார்.

கணக்காயர் கல்வி கற்பிக்கும் முறையை எடுத்தோதியவர்; பெண் கல்வியின் நன்மையை அக்காலத்திலேயே எடுத்துரைத்தவர்; வறுமையின் கொடுமையைக் கண்டவர்; வறுமையில் செம்மையைக் கண்டவர்; "மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றோ" எனப் பெண்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்தவர்; செய்ந்நன்றியறிதல் உடையவர், கள்ளுண்டலைக் கடிந்து சினந்தவர் என்று இராமாயணத்தின் வழித் தான் கண்ட கம்பரின் குண இயல்புகளை நம் கண்முன்னே படம்பிடித்துக் காட்டுகிறார்.

கம்பர் சமயம்

கம்பர் சைவரா வைணவரா என்ற வினாவினை எழுப்பிக் "கம்பர் சைவரோ வைணவரோ என்பதைத் துணிகின்றதில் இருதலைக் கொள்ளியிடை எறும்பேபோல இடர்ப்பட வேண்டுவதாயிருக்கிறது" என்று கூறும் செல்வக்கேசவராய முதலியார் அதற்கான காரணங்களை எடுத்துரைக்கிறார். 1. கம்பர் பிள்ளையின் பெயர் அம்பிகாபதி. 2. ஏரெழுபதில் விநாயக வணக்கம் வந்துள்ளது. 3. இராமாயணத்தில் சிவபெருமானைக் குறிக்கின்ற தொடர்கள் சிறப்பாக அமைந்துள்ளன. 4. கம்பராமாயணம் பாடுமுன்னர்ச் சைவராய் இருந்தவர் பின் வைணவரானார் எனச் சில தமிழ்ப் புலவர் கூறிவருகின்றனர்.

> **அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுவுரைக்கும் அறிவிலோர்க்குப்**
> **பரகதிசென் றடைவரிய பரிசேபோல் புகலரிய பண்பிற்றாமால்**
> **சுரநதியின் அயலதுவான் தொடுகுடுமிச் சுடர்த்தொகைய தொழுதோர்க்கெல்லாம்**
> **வரனதிகம் தருந்தகைய தருந்ததியா நெடுமலையை வணங்கியப்பால்**

என்ற பாட்டைக் காட்டிக் கம்பரை வேறு கூறுவாருமுளர் என்று எடுத்தோதுகிறார்.

1. செல்வக்கேசவராய முதலியார் கம்பர் வைணவர் என்று இலக்கியச் சான்றுகளைத் தருவதோடு, ஸ்ரீரங்கத்திலே கம்பர் கட்டுவித்த மண்டபத்தில் சக்கரவர்த்திக்குரிய தோற்றப் பொலிவுடன் கம்பரைப் போலக் கற்சிலை அமைந்திருப்பது,

2. "கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே" என்று இராமாயணத்தை அரங்கேற்றியது கூறுவதோடு அவ்விடத்தில் கவிச்சக்கரவர்த்தி என்று பட்டம் தரப்பட்டிருப்பது,

3. இவருடைய சமாதி நாட்டரசன் கோட்டையில் வைணவ முறைப்படி அமைந்திருப்பது ஆகிய காரணங்களால் வைணவர் என்பது உறுதியாகின்றது என்று நிலைநாட்டுகிறார்.

நூலின் பின்னிணைப்புப் பகுதியில், கம்பராமாயணம் மொழிபெயர்ப்பான வழிநூல், காண்டம் முதலியவற்றின் தொகை, நாளொன்றுக்கு எழுநூறு கவி வீதம் பாடியது; இராமாயணம் பாடிய இடமும் அரங்கேறிய இடமும், கம்பர் கவிச்சக்கரவர்த்தி என்ற பட்டப்பெயர் பெற்றது, கம்பருடைய கவிநயம், திருக்குறளின்பால் கம்பர் பாராட்டிய கௌரவம், கம்பர் மரணகாலத்தில் பாடியது, கம்பர் இறந்தது கேட்டுச் சோழன் அவையிலுள்ள புலவர் பாடிய கையறுநிலை முதலான செய்திகளுக்கேற்ற பாடல்கள் அமைந்துள்ளன. மேலும் 'விநோதரச மஞ்சரி'யில் வெளிவந்துள்ள கம்பன் போனவழி கண்டு களித்த செய்தி, மாடம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார் 1861ஆம் வருடம் அச்சிட்ட பாலகாண்ட உரையின் அவையடக்கத்தில் வரும் செய்தி, மேற்கண்ட பாலகாண்ட உரைச் சிறப்புப்பாயிரம் அஷ்டாவதானம் வீரராகவ முதலியார் இராமாயணப் போர் ஒப்படி செய்தது, கம்பர் சடகோபரந்தாதி பாடியதும் பாடிய காரணமும், செந்தமிழ்ப் பத்திரிகையினின்றும் எடுத்த கம்பர் சோழன்பால் சிறப்பெய்தியது, வாணியன்தாதன் வசையுரைத்தது, இராமகாதையில் கம்பர் பாடிய பாகம், காண்டம், படலம் முதலியவற்றின் தொகையில் வேறுபாடு, கம்பருடைய தந்தை, கம்பர் சோழனுடன் கோபித்துக் கொண்டு மதுரைக்குப் போனது, கம்பர் சோழனிடம் இரண்டாம் முறை கோபித்துப் பிரதாபருத்திரனிடம் போனது முதலான செய்திகளை அமைத்துள்ளார்.

தி. செல்வக்கேசவராய முதலியாரின் 'கம்ப நாடர்', கம்பர், கம்பராமாயண ஆய்வுகளுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. கல்லூரி மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்நூலை அனைவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் அமைத்துக் கம்பரைப் பற்றிய செய்திகளையும், கம்பருடைய சிந்தனைகளையும் ஒருங்கு திரட்டி வழங்கியுள்ளார்.

பதிப்புத்திறன்

ஆ. தசரதன்

> இவருடைய தமிழ்நடை பொருட்செறிவுடையது, பழமொழிகள் நிறைந்தது. இவரெழுதிய தமிழ், தமிழ்வியாசம் என்னும் நூல்களிலே இவருடைய தமிழ்ப்பற்றைக் காணலாம். ஆசாரக் கோவை, பழமொழி, அறநெறிச்சாரம், முதுமொழிக்காஞ்சி முதலிய பழந்தமிழ் நூல்களை நன்முறையிலே பதிப்பித்துள்ளார். தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வழிகாட்டிய பெரியார்களில் இவரும் ஒருவர்

எனக் *கலைக்களஞ்சியம்* (தொகுதி 5, பக். 186) திருமணம் செல்வக் கேசவராய முதலியாரை மதிப்பிட்டுள்ளது. இதில் 'பதிப்பு'ப் பற்றிய மதிப்பீட்டை மட்டும் மனத்தில் கொண்டு இவருடைய பதிப்புத் திறனை இந்தக் கட்டுரை ஆய்கிறது. இந்த ஆய்வுக்கு இவர் பதிப்பித்த ஆசாரக்கோவை (1893), அறநெறிச்சாரம் (1905, 1212) *பழமொழி நானூறு* (1917), *முதுமொழிக்காஞ்சி* (1919) எனும் நான்கு நூல்களையும் எடுத்துக்கொள்ளலாம். *குசேலோபாக்கியானம், அரிச்சந்திர புராணம்* எனும் இரு நூல்களில், முக்கியமான சில பகுதிகளைத் தழுவியும், தேவையற்ற சில பகுதிகளை விலக்கியும், இடையிடையே உரை கூறியும், மாணவர்கள் படித்தறியுமாறு சுருக்கப் பதிப்புகளாக இவர் பதிப்பித்திருப்பதால் அவை இங்கே எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. ஆயினும் அவை பற்றிச் சில கருத்துகளைக் கூறுவது இன்றியமையாதது.

நாட்டுப்புறப்பாடல்களில் ஈடுபாடு

செல்வக்கேசவராயர் தமிழ்க் கல்வியில் தலைசிறந்தவராகத் திகழ்ந்தவர். அதற்கு ஈடாக ஆங்கிலப் புலமையும் பெற்றவர்.

> **கங்கைகுலந் தனில்வந்தோன் கலைபயிலு மாணவருள்**
> **கனிந்த மேலோன்**

பொங்குமாங்கி லேயபா டையினுமிகப் பயிலுவோன்
பொலியு மந்தத்
துங்கமிகு பாடைநடை துகளிலாத் தமிழ்நடைமுற்
றொருங்கு தேர்வோன்
புங்கமுறு கவிவல்ல செல்வக்கே சவராய
புலமை யோனே

எனச் சோடசாவதானம் தி.சு. சுப்பராய செட்டியார் *குசேலன் சரித்திரம்* எனும் நூலுக்குப் பாராட்டுரை பாடியுள்ளார். இதிலிருந்து செல்வக்கேசவராயர் தமிழும் ஆங்கிலமும் ஒருங்கே தேர்ந்தவர் எனத் தெரிகிறது. இவர் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் பழந்தமிழ்ப் பனுவல்களைப் பலரும் பதிப்பித்துக் கொண்டிருந்தனர். இந்தத் தூண்டுதலும் இவருக்கு இருந்திருக்கலாம். மேலும், இராயல் ஆசியாடிக் சொசைட்டியின் உறுப்பினரான சார்லஸ் இ. கவர் (Charles E. Gover) என்பவர் தென்னிந்திய நாட்டுப்புறப்பாடல்கள் (Folk Songs of Southern India 1871) என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியைச் செல்வக்கேசவராயர் தம்முடைய எல்லாப் பதிப்பு நூல்களிலும் கீழ்க்காணுமாறு எடுத்தாண்டிருக்கிறார்.

There is a great mass of noble writing ready to hand in Tamil and Telugu, folk literature, especially in the former. To raise these books in public estimation, to exhibit the true products of the Dravidian mind, would be a task worthy of the ripest scholar and the most enlightened government. I would especially draw attention to the Eighteen Books that are said to have received the sanction of the Madura College, and are among the oldest specimens of Dravidian literature. Any student of Dravidian writings would be able to add a score of equally valuable books. If these were carefully edited, they would form a body of Dravidian classics of the highest value.

இதன் மூலமும் இவருக்குப் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் எனும் அவா ஏற்பட்டிருக்கலாம். சார்லஸ் இ. கவரின் ஆசையை ஆறுமுகநாவலர், தாமோதரம் பிள்ளை, சாமிநாதையர் போன்றோர் நிறைவேற்றி உள்ளதாக இவர் குறிப்பிடுகிறார். ஆயினும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஆறு நூல்களே பதிப்பாகி யுள்ளதாகவும், இரண்டு அல்லது மூன்று நூல்கள் வெளியிடப்பட உள்ளன என்றும் தம் முதல்பதிப்பான *ஆசாரக்கோவையின்* பதிப்புக் குறிப்பில் குறிப்பிடுவதிலிருந்து, அந்த ஆங்கிலேயர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றை நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்புகளாகக் கருதுவதாகக் கருதி,

அவற்றை மட்டும் பதிப்பித்து வெளியிடும் இவருடைய நோக்கம் அறியப்படுகின்றது. இதற்கேற்ப இவர் பதிப்பித்துள்ள பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், *அறநெறிச்சாரமும்*, குசேலர் கதைப்பாடலும், அரிச்சந்திர புராணக் கதைப்பாடலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய அறிமுகம்

செல்வக்கேசவராயர்க்கு முன்பே பலரும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை அறிமுகப் படுத்தியுள்ளனர். ஆயினும் அந்நூல்களின் இயல்புகளை ஒவ்வொரு பதிப்பு நூலிலும் இவர் ஒழுங்குபடக் கூறியிருப்பதும், அவை பற்றிய முற்பதிப்புகள், ஓலைச் சுவடிப்பிரதிகள் மற்றும் அவற்றின் சிறப்பியல்புகள் போன்றவற்றைக் கூறுவதும் அவருடைய ஈடுபாட்டை வெளிப்படுத்துகின்றதாகத் தெரிகிறது. *முதுமொழிக்காஞ்சி* எனும் தம் இறுதிப்பதிப்பு நூலில் அவர், "வனப்பியறானே..." என்ற *தொல்காப்பியம்* பொருளதிகாரச் செய்யுளியல் 236ஆம் நூற்பாவை எடுத்தாண்டு அதற்கான உரையை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

> **சிலவாக என்பது எண்ணுச் சுருங்குதல். மெல்லியவாய்ச் சிலவாய சொற்கள், எழுத்தினான் அகன்று காட்டாது சிலவெழுத்தினான் வருவது. அடி நிமிராதென்றது ஐந்தடியின் ஏறா தென்றவாறு. தாய பனுவலோ டென்றது-இலக்கணஞ் சொல்ல எடுத்துக்கொண்ட அறம் பொருள் இன்பமென்னும் மூன்று மன்றியும் வேறு இடையிடைதாய்ச் செல்வது என்றவாறு. அஃதாவது *பதினெண்கீழ்க்கணக்கு* எனவுணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோ செய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப்பயின்று வருமாறும், கார்நாற்பது களவழிநாற்பது முதலாயின வந்தவாறும் கண்டு கொள்க.**

இதிலிருந்து பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பயின்று வந்துள்ள அடிவரையறையையும் பொருள் வரையறையையும் ஒருங்கே அறிந்து கொள்ள ஏதுவாகின்றது. ஆயினும், இவர் பதிப்பித்துள்ள பழந்தமிழ் நூல்களில் பொருளுக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பாடல்களை முன் பின் அமைத்துப் பதிப்பித்திருக்கின்றார். இது இக்கட்டுரையின் பிற்பகுதியில் நிறுவப்படும். மேற்காட்டிய உரைக்கு *பன்னிரு பாட்டியலிலிருந்து* ஒரு நூற்பாவை எடுத்தாண்டு தாம் கருதிய கொள்கைக்கு மேலும் வலுவூட்டுகின்றார். அதுவருமாறு:

> **அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி**
> **அறம்பொரு ளின்பம் அடுக்கிஅவ்வகைத்**
> **திறம்படவருவது கீழ்க்கணக் காகும்**

புறத்திரட்டுத் தொகுதியிலிருந்தும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய குறிப்புகளை எடுத்துக் காட்டியுள்ளார்.

அச்சுப் பதிப்பும் வெளியீடும்

கி.பி. 1836ஆம் ஆண்டில் அச்சுக்கூடத் தடை நீக்கச் சட்டம் அமலாகியது. அதன்பின்னர் அந்நியர்களையன்றி, நம்மவரும் அச்சுக்கூடங்களையும் பதிப்புக் கூடங்களையும் தோற்றுவித்தனர். சிறந்த அச்சகங்கள் வரிசையில் சென்னையில் எஸ்.பி.சி.கே. அச்சுக்கூடம் விளங்கியதாக மா.சு. சம்பந்தம் *அச்சுக்கலை வரலாறு* எனும் தம் நூலில் (பக்.223) குறிப்பிடுகின்றார். அவ்வகையில் செல்வக்கேசவராயரின் அனைத்துப் பழந்தமிழ்ப் பதிப்பு நூல்களும் வேப்பேரி எஸ்பிசிகே. அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன. நூல்களில் அச்சுத்திறன் இதிலிருந்து தெரியவருகிறது. மேலும், அச்சடிப்பாளரே புத்தகப் பதிப்பாளராகவும், வெளியீட்டாளராகவும் விற்பனையாளராகவும் அக்காலத்தில் இருந்து வந்தனர். ஆனால் இவருடைய பதிப்புகள் அனைத்தும் சொந்தப் பதிப்புகளாகவே தெரிகின்றன. அதற்கு ஆதாரமாக

> **பண்டைத் தமிழ்ப் பனுவல்களைப் பதிப்பிப்பதென்றால் கையிலுள்ள பொருளைக் கொண்டுபோய் நட்டாற்றில் வலிய எறிந்துவிட்டு வெறுங்கையை வீசிக்கொண்டு வீடுபோய்ச் சேர்வதே முடிவான பொருள் என்பதுணர்ந்து எச்சரிக்கை யாயிருப்பார்க்கு இன்ன லொன்றுமில்லை. அம்முடிவான பொருளை அநுபவசித்தமாக அறியப் பெறாதவர்கள் இன்னுஞ் சின்னாள் பழகியே அதனை அறிதல் வேண்டும்**

எனும் இவருடைய *ஆசாரக்கோவையின்* பதிப்புரையில் (பக். 5-6) உள்ள குறிப்பைக் காட்டலாம். ஆயினும் இவர் முதற்பதிப்போடு சோர்ந்து விடவில்லை. அடுத்தடுத்து, 1905இல் *அறநெறிச்சாரத்தின்* முதல் பதிப்பையும், 1912இல் அதன் இரண்டாம் பதிப்பையும், 1917இல் *பழமொழி நானூற்றின்* பரந்த பதிப்பையும், 1919இல் *முதுமொழிக் காஞ்சி* எனும் முடிவான பதிப்பையும், இடையிடையே வேறுபல தமிழ் நூல்களை எழுதியும், அச்சிட்டும், வெளியிட்டும் உள்ளார். இதற்குப் பெரிதும் இணக்கமாக வ.உ.சிதம்பரம் பிள்ளை, ஆ. சிங்காரவேலு முதலியார், சுப்பராய செட்டியார் போன்ற தமிழறிஞர்களும், வேறுசில சீன நண்பர்களும் இருந்தனர் எனத் தெரியவருகின்றது. இவர்கள் அனைவரும் அச்சடிப்பிலும், பதிப்பிலும், வெளியீட்டிலும் நாட்டம் கொண்டிருந்தனர்.

செல்வக்கேசவராயரின் பதிப்புகள்

இவருடைய காலக்கட்டத்தில் தமிழ்நூல்களின் மூலத்தை மட்டும் சுவடியிலிருந்து பதிப்பிக்கும் வழக்கமும் இருந்தது. “மூலம் மட்டும் உள்ள பதிப்பு சாதாரண மாணவனுக்குச் சிறிய பயனளிப்புத் தருமாதலால், பதவுரை, கருத்துரையுடன் தேவையான இடத்தில் குறிப்புகள் சேர்த்ததாக” இவர் கூறுகின்றார் (*பழமொழி நானூறு* - முன்னுரை). நூலின் கருத்தை யாவரும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டு மென்பதே இவர் நோக்கமாக இருந்துள்ளது. இதனை *ஆசாரக்கோவையின்* பதிப்புரையில் கீழ்வருமாறு தெரிவிக்கின்றார் (பக். 4-5).

> **ஆயினும் பண்டைப் பெரியோர் உரைத்த உரையாதலால் விசுவாமித்திர சிருட்டியாதொன்றுஞ் செய்யவில்லை. இப்பிண்ட வுரையை ஒருவாறாகக் கண்ணழிவு செய்து பதிப்பிப்பது நன்றெனச் சில நண்பர்கள் வற்புறுத்தினர். வேறு சிலர் இவ்வுரை இந்நூற்குரியவராகிய இளைஞர்க்குப் பயனாகாது. கருத்துரையாயினும் அடியில் எழுதுதல் வேண்டும் என்று கூறினார்கள். இவ்விருதிறக் கூற்றையும் உச்சி மேற்கொண்டு கண்ணழிவுங் கருத்துரையுமாக அச்சிடுவித்தேன்**

என்கிறார். தமிழ் மூல நூல்களை மட்டும் பதிப்பித்து வெளியிடும் போக்கிலிருந்து மாறுபட்டு மாணவர்களுக்குப் பயனாகிற வகையில் பழைய உரையுடன், பதவுரை, அரும்பதஅகராதி, கருத்துரை, மேற்கோள் காட்டுதல், பாடபேதம் அறிதல், இலக்கணக் குறிப்புத் தருதல், வரலாற்றுக் குறிப்புச் சேர்த்தல் போன்றவற்றோடு பொருளடிப்படையில் பாகுபாடு செய்தலையும் இவர் பெரிதாகக் கருதியுள்ளதாகத் தெரிகிறது.

மேற்சுட்டிய கருத்துகளிலிருந்து மாணவர்க்குப் பயனளிக்கும் பதிப்பு நோக்கமும், தமிழறிஞர் கருதுவதற்கேற்ற கருத்துக் கோர்வையும், இவற்றுக்கு மேலாகப் பிறரிடமிருந்து பதிப்பால் வேறுபட்டு நிற்க வேண்டுமென்ற பொருட்பாகுபாட்டுப் பதிப்புணர்வும் இவர்க்கு இருந்தன என்பது தெளிவாகிறது. மேலும், இவர் எழுதிய இலக்கண, இலக்கிய ஆராய்ச்சி, தழுவல் அல்லது மொழிபெயர்ப்புக் கதைகள் மற்றும் உண்மை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த கதைகள் போன்றவை இவருடைய வணிக நோக்கத்தையும், தமிழ்ப்பற்றையும், அக்காலக்கட்டத்தின் கட்டாயமான வெளியீட்டு நோக்கத்தையும் அறிந்துகொள்ள உதவுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு இவருடைய பங்களிப்பு இருந்தாலும், ஈடு இணையற்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிலவற்றை இவர் பதிப்பித்து

வெளியிட்டதிலிருந்து இவருடைய பதிப்புத் திறனை அறிவது தேவை.

ஆசாரக்கோவை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகமும், புறமும் சாராத, நாட்டுப்புறப் பாடல்களின் திரட்டைப் போன்ற நூல் *ஆசாரக்கோவை*. இதைக் கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார் என்பவர் செய்துள்ளார். கயத்தூர் "வண்கயத்தூர்" எனவும் கருதப்பட்டுள்ளது. நூலாசிரியர் மற்றும் அவருடைய ஊர் பற்றி இறுதியில் விளக்கலாம். அதற்கு முன்பாகச் செல்வக்கேசவராயர் *ஆசாரக்கோவையைப்* பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நோக்கத்தை ஆராயலாம்.

> **ஆசாரக்கோவை முதன்முறை அச்சாகி ஏறக்குறைய ஐம்பதாண்டுகளாகின்றமையால் பிரதிகாண்பது அருமை யாயிற்று. ஆகவே பிரதி கிடைப்பது எளிதாயின் இந்நூல் பயன்படாமற் போகாது என நினைத்து இதனை இப்போது அச்சிடுவேனாயினேன்.**

எனப் பதிப்புரையில் (பக். 4) அவர் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து *ஆசாரக்கோவையை* ஏறத்தாழ 1850 ஆம் ஆண்டளவில் மூலத்தையும் அதற்கான பழைய உரையையும் அச்சிட்டிருப்பர் போலும். அச்சிட்டு வெளியிட்டவர் பெயரை அறியமுடியவில்லை. ஆயினும் முதன் முறையாக *ஆசாரக்கோவையைப்* பழைய வுரையுடன் பதிப்பித்தவர் அதன் உரை நச்சினார்க்கினியருடையது எனக் கருதியுள்ளார். *ஆசாரக்கோவையைப்* பதிப்பித்த செல்வக்கேசவரோ அப்பழையவுரை நச்சினார்க்கினியருடையதன்று என மறுத்து அதைப் 'பிண்ட உரை' என்று கண்ணழிவு செய்து பதிப்பித்ததாகவும் கூறுகின்றார். பழந்தமிழ் நூல்களைப் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கம் இவரிடையே இருந்தமை கீழ்வரும் பகுதியிலிருந்து வெளிப்படுகின்றது.

> **இந்நூல் கூறும் பற்பல ஆசாரங்களின் சம்பிரதாயங்களை இக்காலத்தறிவது கூடாமையால் கருத்துரையில் பிழைப்பட்ட இடங்களை ஆன்றோர் பிழை பொறுத்துக் கோடல் வேண்டும். அடியேனைப் பழிப்பதில் பயனின்று. பாக்களையேனும் இழவாமல் பாதுகாத்தல் வேண்டும் என்பதொன்றுமே இந்நூலை அச்சிட்டநோக்கம்**

என்கிறார். *ஆசாரக்கோவையின்* நூறு பாடல்களும் பழைய பொழிப்புரையுடனும், செல்வக்கேசவராயரின் பதவுரையுடனும் மற்றும் குறிப்புரையுடனும் பதிப்பாகியுள்ளன. தற்சிறப்புப் பாயிரப்

பாடல் ஒன்றும் இப்பதிப்பில் அமைந்துள்ளது. இப்பாடல் போன்ற தற்சிறப்புப் பாடல்களைப் பதினெண்கீழ்க்கணக்குகளில் நூலாசிரியர்களே பாடியிருக்கக் கூடும் என்பது இவர் கருத்து. அதற்குச் சான்றாக இவர் பதிப்பித்த *பழமொழி நானூற்றின்* பதிப்புரையிலிருந்து ஒரு பக்தியை எடுத்துக் காட்டலாம்.

> **"சம்பந்தர் சடகோபர் முதலாயினோரும் திவாகரரும் பதினெண் கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகங் கூறுவது காண்க" எனப் பிரயோகவிவேக முடையார் கூறுதலால் இந்தப் பாயிரம் முன்றுறை யரையரே கூறியதுபோலும்.**

இதிலிருந்து *ஆசாரக்கோவையின்* தற்சிறப்புப்பாயிரப் பாடலை அதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியாரே பாடியிருப்பார் என்பது இவர் கருத்தாகலாம். முதலில் நூலின் பாடலை அமைத்து, அதன் கீழ்ப் பழைய உரையை அமைத்து, அடுத்ததாகத் தம் விளக்கங்களைச் சுருக்கமாக இவர் அமைத்துள்ளார்.

சார்லஸ் இ. கவர் என்பவரின் குறிப்பைத் தம் ஆங்கில முன்னுரையில் அமைத்த செல்வக்கேசவராய முதலியார் பண்டு தொட்டே தமிழகத்தில் வழங்கி வந்த ஆசாரங்களை நாட்டார் வழக்காற்றியலாகக் கருதியே பெருவாயின் முள்ளியார் அவற்றுக்குப் புது வடிவம் கொடுத்துள்ளார் என நம்பியிருக்கலாம். அவ்வாறாயின், *திருக்குறள், நாலடியார்* போன்ற பல கீழ்க்கணக்கு நூல்கள் பழந்தமிழர் வரலாறு மற்றும் பண்பாடுகளைப் பறைசாற்றுவன என்பது திண்ணம். ஆனால் *அபிதான சிந்தாமணி* ஆசிரியரோ *ஆசாரக்கோவையைப்* பற்றி (பக். 120),

> **இருடிகள் சொல்லிய ஆசாரங்களைக் கோத்துரைக்கும் பலவகை வெண்பாக்கள் தற்சிறப்புப் பாயிரமுட்பட நூற்றொன்றுடையது**

எனக் கூறுவதில், பழந்தமிழரின் வரலாறும் பண்பாடும் பழக்கவழக்கங்களும் அமையாமல், முனிவர்கள் மட்டுமே கண்டுணர்ந்து கூறியதாகக் கொள்ள இடமளிக்கிறது. பெருவாயின் முள்ளியாருக்கு முன்பாகவே ஏதேனும் இருடிகள் இவ் ஆசாரங்கள் பலவற்றைப் பாக்களாகப் பழக்கத்தில் விட்டிருக்கவேண்டும் என்பது சிங்காரவேலு முதலியாரின் கருத்தாகலாம். இருடிகளிடையே மட்டும் ஆசாரங்கள் புழங்காதன்றோ! ஆசாரமிலிகளாக *அபிதான சிந்தாமணி* ஆசிரியர் *ஆசாரக்கோவையிலிருந்து* எடுத்தாள்வன: 1. அறியாத தேசத்தார், 2. தரித்திரர், 3. மூத்தோர், 4. சிறுவர், 5. உயிரிழந்தோர், 6. பயமற்றார், 7. உண்பார், 8. அரசர் தொழில் தலைக்கொண்டார், 9. மணாளன் எனும் ஒன்பதின்மரே. ஆசாரமிலிகளையும் ஆசாரமுள்ளவர்களையும் இவ்வரையறைக்குள்

அடக்கி விடமுடியாது. சங்க இலக்கியங்களில் நூறு பாடல்களைப் பெற்று அமைந்த *பதிற்றுப்பத்து* அனைத்துச் சேர அரசர்களின் வரலாற்றையும் அடக்கவில்லை. அதுபோலவே நூறுபாடல்களைக் கொண்ட வரையறைக்குள் பாடப்பெற்ற நூலாகவே *ஆசாரக்கோவையைக்* கொள்ள வேண்டும். ஆசாரங்கள் பல அமைந்துள்ளமை வேறுபல நூல்களாலும் தெரியவருகின்றது. *கபிலை கதை* எனும் *சோழன்பசுக் கதைப்பாடலிலும், சித்திரபுத்திர நாயனார் கதைப்பாடலிலும்* ஆசாரங்கள் பலவற்றை அதனதன் ஆசிரியர்கள் அடுக்கிச் செல்கின்றனர். *ஆசாரக்கோவையில்* கூறப்பெறுவன நீதிகள் எனப் பிறர் கருதினர்.

> **ஏனைத் தமிழ்நூல்களெல்லாம் ஆசாரத்தை ஒழுக்கமெனப் பொதுப்படவே கூறிப்போந்தன. இஃதொன்றுமே அதனைச் சிறப்பு வகையாற் கூறுவது. இந்நூலில், உண்ணல், உடுத்தல் உறங்கல் – மலசலங் கழித்தல் – நீராடுதல் – வாய்பூசுதல் முதலிய நித்ய கடன்களைக் கழிக்குமாறும், ஐங்குரவர்பால் சேர்ந்து ஒழுகுமாறும், இல்லொழுக்கினைச் செவ்வனே நடத்துமாறும், மன்னரைச் சேர்ந்தொழுகுமாறும் இல்வாழ்க்கைச் சித்திபெற்றுச் சிறப்பெய்துமாறும் பத்தழகுடனே பண்புறக் கூறப்பட்டிருக்கின்றன**

எனப் பதிப்புரையில் செல்வக்கேசவர் கூறுவதிலிருந்து நீதிநூல் பாடல்களாக இவற்றைக் கருதாமல் மக்களிடையே நிலவிவரும் சமூகப்பண்பாட்டுக் கூறுகளாகவும், பண்டைத் தமிழரசர் தொடர்புடைய தாகவும், அவற்றில் பெரும்பான்மை இக்காலத்தும் இருப்பனவாகவும் இவர் கருதியுள்ளார்.

இதன் காரணமாகவே இவர் தமிழர் ஆசாரம்-ஆரியர் ஆசாரம் எனப் பிரித்தறிந்துள்ளமை தெரிகிறது. *ஆசாரக்கோவை*யில் இவ்விருதிறத்தாரின் ஆசாரங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை இதனால் அறியலாம்.

> **சரிதமுகத்தான் ஆயிரம்யாண்டு முன்னர்த் தமிழ்நாட்டின் ஒழுக்கம் எத்தன்மைத் தாயிருந்தது என்பதறிதற்கும் ஆரியர்களுடைய ஆசாரம் அக்காலத்தில் தமிழ்நாட்டில் எத்துணை இடம்பெற்றது என்பதறிதற்கும் இந்நூல் ஒருவாறு இடங்கொடுக்கின்றது.**

என்கிறார். செல்வக்கேசவராயர்க்கு முன் *பழமொழி நானூற்றின்* சில பாக்கள் வாக்கர் (Walker) என்பாரின் *நீதிமொழித் திரட்டில்* பதிப்பாகியுள்ளன என்பது முர்டாக்கின் Catalogue of Tamil Printed Books என்பதிலிருந்து தெரிகிறது. பலர் *ஆசாரக்கோவையைப்*

பதிப்பித்திருந்தாலும், முன்னோடியான முழுமைப் பதிப்பாகச் செல்வக் கேசவராயரின் பதிப்பையே கொள்ள முடியும். மணிவாசகர் சங்கத்தார் 1916இல் மு.மு. வீர. வீரப்பச்செட்டியாரின் பொருளுதவியால் இலவசப் பதிப்பாக மூலநூலை மட்டும் பதிப்பித்துள்ளனர். அண்மையில் 1975இல் தருமபுர ஆதீனத்தார் அடிக்குறிப்புரையுடனும் பதிப்பித்துள்ளனர்.

ஆசாரக்கோவையின் தற்சிறப்புப் பாடலை இனி ஆராயலாம். ஏனைய பாடல்கள் எல்லாம் மூன்றடி முதல் ஐந்தடிகளில் இருக்க, தற்சிறப்புப்பாயிரத்தில் ஆறடிகள் காட்டப்பெற்றுள்ளன. இப்பாடலைச் செல்வக்கேசவராயர் பதிப்பித்ததிலிருந்து சீர்திருத்தி அமைக்கலாம்.

ஆரெயின் மூன்று மழித்தா னடியேத்தி
யாரிடத்துந் தானறிந்த மாத்தி ரையா
னாசாரம் யாருமறிவ தறமாக மற்றவற்றை
யாசாரக் கோவை யெனத் தொகுத்தான் றீராத்
திருவாயி லாய திறல்வண் கயத்தூர்ப்
பெருவாயின் முள்ளி யென்பான்

இப்பாடல் பின்னால் எழுதிச் சேர்த்தது என்பதை இதன்வடிவத்தால் அறியலாம். மூன்றடி முதலாக ஐந்தடி வரை *ஆசாரக்கோவையின்* பாடல்கள் அமைந்திருக்க ஆறடிகளில், அதுவும் மூன்று கண்ணிகளில் இத் தற்சிறப்புப் பாடல் உள்ளது. இன்னும் சில கண்ணிகள் இருப்பதற்கு இடமளிப்பதாகவும் தெரிகிறது. நூலாசிரியர் பாடிய பாடலாகத் தற்சிறப்புப்பாயிரப் பாடல் அமையவில்லை எனலாம். இந்நூலாசிரியர் சைவர் எனக் கொள்ளத்தக்க சான்றுகள் அமைந்துள்ளன. வண்கயத்தூர் எனும் ஊர் 'கயத்தூர்' எனும் மற்றொரு ஊரிலிருந்து வேறுபட்டதாகத் தெரிகிறது. அவர் கடல்சார்ந்த ஊரினராய் இருந்திருத்தல் கூடும். பெருவாயின் முள்ளி (யார்) என்பதில் உள்ள முற்பெயரை இவரின் தந்தை பெயர் பெருவாயினன் என *அபிதான சிந்தாமணி* கூறுகின்றது. "முள்ளி (*யார்*) எனும் பெயர் இயற்பெயரா, காரணப் பெயரா எனத் தெரிய வில்லை. முள்ளி நாடு என நாடு ஒன்று அறியப் பெறுகிறது. இது இன்றைய சிவகாசியைச் சேர்ந்த பகுதி. வண்கயத்தூரின் பெரிய வாயிலைச் சேர்ந்த முள்ளியராக இவர் இருந்திருக்கலாம். அல்லது பெரியவாயினை உடையவராகவும் இவர் இருந்திருக்கலாம். இந்நூலின் ஆசிரியர் களப்பிரரை மிகவும் தாழ்வானவராகக் கருதி எழுதியுள்ள குறிப்பை இப்பாடல்களில் காணலாம். களப்பிரரால் விலக்கப்பட்ட அரசகுடியினரே அக்களப்பிரரைத் தாழ்வாகக் கருதுவர். அந்நிலையில் 'பெருவாயின்

முள்ளியார் அரசகுலத்தவரில் வந்தவராகலாம். களப்பிரர் காலத்தொடக்கத்தில் (கி.பி. 4ஆம் நூற்றாண்டு) வாழ்ந்தவராகவும் கருதலாம். அவ்வாறெனில் பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்றான *ஆசாரக்கோவை* கி.பி. 4ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ, 5ஆம் நூற்றாண்டின் முதலிலோ பாடப்பெற்று, அதற்குப் பிற்காலத்தில், களப்பிரர் பாண்டியன் கடுங்கோனால் விலக்கப்பட்ட காலக்கட்டத்தில் (கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில்) கீழ்க்கணக்குள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம். மேல்கணக்கு நூல்கள் பத்தும் எட்டும் பண்டைத் தமிழர் மற்றும் தமிழரசரின் பண்பாடு, வரலாறு, இலக்கியம் போன்றவற்றைப் பேசுவதுபோல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் அவ்வாறே பேசுகின்றன எனலாம்.

ஆசாரக்கோவையின் பாடலுக்கு இதுவரையிலும் பொருள் விளக்கம் கண்டிருப்போர் அந்நூல் சங்ககாலத்துக்கு முற்பட்ட மற்றும் சிறிது பிற்பட்ட காலக் கட்டத்தைப் பதிவு செய்துள்ளது எனும் உண்மை புலப்படாமலே பொருள் விளக்கம் கண்டு வந்துள்ளனர். செல்வக்கேசவராயரும் இதற்கு விதிவிலக்கன்று. சான்றாக

ஈன்றாள் மகள் உடன்பிறந்தாள் ஆயினும்
சான்றோர் தனித்தா உறையற்க ஐம்புலனும்
தாங்கற் கரிதாக லான்

என்ற பாடலுக்குப் பிற எல்லோரும் 'அறிஞர் தாய், மகள், உடன்பிறந்தாள் ஆகியோருடன் தனித்து உறைதல் கூடாது' என்றே பொருள் கண்டுள்ளனர். செல்வக்கேசவராயரும் இவ்வாறே கண்டுள்ளார். ஆனால், இதற்கு விளக்கம் அளிக்கும் மயிலை சீனி. வேங்கடசாமியோ 'அறிஞர்' எனக் கொள்வது *ஆசாரக்கோவை* யாரின் ஆசிரியர் கருத்து அன்று என்றும், அங்கே சான்றோர் எனும் வீரரையே கூறினார் என்றும் 'சான்றோன்' எனும் தம் ஆய்வுக் கட்டுரையில் (பக்.355) குறிப்பிட்டுள்ளார். வண்கயத்தூர் பெருவாயின் முள்ளியாரின் கருத்தைக் கருதியே பொருளுரைக்க வேண்டுமே அல்லது தம் விருப்பப்படி யாரும் பொருள் கொள்ளல் கூடாது. இது பதினெண் கீழ்க்கணக்கின் பிற நூல்களுக்கும் பொருந்தும்.

முடிவாக, *ஆசாரக்கோவையின்* பாடல்களை அதன் காலந்தொட்டு அண்மைக்காலத்தில் எழுதப்பெற்ற தமிழ்க் கதைப்பாடல்களுடன் ஒப்பிட்டும், அன்றையகாலப் பண்பாடு மற்றும் வரலாற்றுடன் இயைத்தும் பதிப்பிக்கும் பதிப்பே சிறந்த பதிப்பாகலாம்.

பழமொழி நானூறு

பழந்தமிழ்ப் பாடல்களின் தொகுப்பு நூல்களாக 400 பாடல்களில் அமைந்த *புறநானூறு*, *அகநானூறு* என்பவை போன்று பதினெண்கீழ்க்கணக்குள் ஒன்றான *பழமொழி நானூறும்*, 400 வெண்பாக்களில் அமைந்துள்ளது. பண்டைத் தமிழரிடையே புழக்கத்தில் இருந்த பழமொழிகளின் அடிப்படையில் பாடப்பெற்ற பாடல்களே இவை. வாக்கர் என்பாரின் *நீதிமொழித் திரட்டு* எனும் நூலில் முதன் முதலாக இவற்றுள் சில இடம்பெற்றன. அதன்பின்பு 1874இல் சுப்பராய செட்டியார் 31 பொருள் தலைப்புகளில், தலைப்புகளுக்குப் பத்துப்பாடல்கள் வீதம் குறைப்பதிப்பாகப் *பழமொழி நானூற்றைப்* பதிப்பித்தார். 1904இல் திருச்சி ஆறுமுகம் நயினாரால் சுவடிப்பதிப்பாக இந்நூல் மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டது. ஆனால் சிறந்த பதிப்பாகச் செல்வக்கேசவரால் 1917இல் பதிப்பிக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இப்பதிப்பிற்கு இவர் தம்முடைய தந்தையாரிடமிருந்த சுவடிப்பிரதியைப் பயன்படுத்தி யுள்ளார்.

ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பெற்ற இந்நூல், ஒவ்வொரு பகுதிகளிலும் மொத்தம் 35 உட்பகுப்புகள் பெற்று அமைந்துள்ளது. சுவடியில் எழுத்துகள் இல்லாத இடங்களில் புள்ளிகள் இட்டு அச்சிட்டதாக இவர் கூறுகின்றார். இப்பதிப்புக்கு எஸ். அனந்தவரத விநாயகம் பிள்ளை, ஆ. சிங்காரவேலு முதலியார், த. கனகசுந்தரம் பிள்ளை ஆகியோரின் சுவடிப்பிரதிகள் பெரிதும் உதவினதாகவும் வ. உ. சிதம்பரம்பிள்ளை அச்சாகும் தறுவாயில் உதவியாக இருந்ததையும் இவர் சுட்டியுள்ளார்.

பண்டைத் தமிழரின் பண்பாட்டையும் வரலாற்றையும் வெளிப்படுத்தும் பழமொழிகளை நீதிப்பாடல்களாகக் கருதி வந்திருந்த நிலையில், செல்வக்கேசவராயர் அவற்றை நாட்டுப்புறப்பாடல்களாகக் கருதியே *பழமொழி நானூற்றைப்* பதிப்பித்திருக்க வேண்டும். இதற்கேற்ப, இப்பாடல்களில் அமைந்துள்ள வரலாறு மற்றும் புராணக் கதைக் குறிப்புகளில் இருபத்து மூன்றை இவர் இனங் கண்டுள்ளார். "*பழமொழி நானூற்றில்* புராண இதிகாசங்களிலிருந்தும் பழைய தமிழிலக்கியங்களிலிருந்தும் எடுத்துக்காட்டிய விஷயங்கள்" எனக் கீழ்க் காணுமாறு இவர் பட்டியல் இட்டுள்ளார். அவற்றை நாம் இரு பிரிவுகளில் அடக்கலாம்.

பழமொழிநானூறு

வரலாற்றுக் குறிப்புகள்

1. கரிகாலன் நரைமுடித்து முறை செய்தது.
2. கரிகாலனைக் கழுமலத்திலிருந்து வந்த களிறு கொண்டு போய் அரசிற்குரிமை செய்தது.
3. கரிகாலன் சுடப்பட்டுயிருய்ந்ததும் மாமனான இரும்பிடத்தலையா ருதவியால் செங்கோல் செலுத்தியதும்.
4. தூங்கெயிலெறிந்த செம்பியன்.
5. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பாலைக் கௌதமனார்க்கு வீடளித்தது.
6. பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தது.
7. பாரி மடமகள் பாணனுக்குப் பொன்னைச் சோறாக நல்கியது.
8. புகார்ப்பூமி குறிகாண்டல்.
9. பொற்கைப் பாண்டியன் (கைகுறைந்தான் தென்னவன்)
10. மநுநீதிச்சோழன் கன்றூர்ந்த புதல்வனைத் தேரால் ஊர்ந்தது.

புராண, இதிகாசக் குறிப்புகள்

1. அரக்குமாளிகையிலிருந்து பாண்டவர் தப்பியது.
2. உமையாளைச் சிவன் ஒரு கூறாக்கியது.
3. கௌரவர் பாண்டியர் சூதாடி வேறுபட்டது.
4. கருடனால் தேவர் அமிழ்து கோட்பட்டது.
5. தருமன் பொய்யுரைத்தது.
6. திங்களும் பாம்பினால் தீங்குறுதல்.
7. திரிவிக்கிரமன்.
8. நப்பின்னை மாயவனை மயக்குறுத்தியது.
9. பலராமன்.
10. மதுகைடவர் மாயனைக் கொல்லுதல் தவிர்ந்தது.
11. மாபலி வாமனனுக்கு நீர்வார்த்து உலகம் இழந்தது.
12. விபீஷணன் இராமனைத் துணைகொண்டு இலங்கைக்கு அரசனானது.

சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தர் தொடர்பாகவும் பாரி, பேகன் போன்ற வள்ளல்களான வேள்கள் பற்றியும் *பழமொழி நானூறு* குறிப்பிடுவதை அதன் பதிப்பாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழக வரலாற்றில் வேந்தர், வேளிர் என்போர்க்குப் பின் 'அரையர்' என அழைக்கப்பட்ட அரசகுலத்தவரில் ஒருவரானவரும் முன்றுறை எனும் ஊரைச் சார்ந்தவருமான அரையர் ஒருவரால் பாடப்பெற்ற இந்தநூல், அவர்க்கு முன்பிருந்த வேந்தர் மற்றும் வேளிர்களின் வரலாற்றைப் பதிவு செய்து வைத்துள்ளது என அறிந்துகொள்ள முடிகிறது.

'சோழன்' எனும் ஒரு குலம் இருந்ததாகப் *பழமொழி நானூறு* கூறுகின்றது. வேளிர் ஆண்ட ஊர்கள் 'அரையம்' என அழைக்கப்பட்டுள்ளன. அவர்களில் ஒருவரான இந்த நூலாசிரியரைச் சமணர் எனவும் பாண்டிய நாட்டினர் எனவும் கருதி வந்துள்ளனர். வேளிர்கள் களப்பிரர், சமணர், பௌத்தர் என்போர்க்கு முன்பே தமிழகத்தில் ஆட்சியிலிருந்தவர்கள். அத்தகு வேள் அரையர்களில் வந்தவரான முன்றுறை அரையரைச் சமணர் என அடையாளம் கண்டிருப்பது தவறாகத் தெரிகிறது.

பழமொழி நானூற்றின் தற்சிறப்புப் பாயிரப் பாடலே 'சமணர்' என இந் நூலாசிரியரைக் கருத வைத்துள்ளது. பொதுவாகச் சுவடியைப் பெயர்த்து எழுதுவோர் தாம் சார்ந்த சமயத்தைப் போற்றிப் பாடல்கள் எழுதுவது மரபு. இந் நூலுக்குத் தற்சிறப்புப் பாடல் எழுதிய சுவடிப் பெயர்ப்பாளர் அருகக் கடவுளை வணங்கித் தொடங்கியிருப்பதால் பழமொழி நானூற்றைப் பாடியவர் சமணர் என்றே முடிவு கூறிவிட்டனர். அவ்வெண்பா வருமாறு:

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும் கொண்டினிதா
முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்
இன்றுரை வெண்பா இவை.

செல்வக்கேசவராயரும் பிற்காலத்துப் *பிரயோகவிவேகம்* மற்றும் அதுகூறும் ஏழாம் நூற்றாண்டு, எட்டாம் நூற்றாண்டினரான சம்பந்தரையும் சடகோபரையும் எடுத்துக்காட்டிப் *பழமொழி நானூற்றின்* பாயிரம் அதன் ஆசிரியர் பாடியதே என முடிவுக்கு வந்துள்ளார்.

அரிதவித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்காண்மா ஞாலத்
துரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியத னாவி பெரிது

எனும் கடவுள் வணக்க வெண்பா இதுவரைப் பல பிரதிகளில் உரையளவாகவே காணப்பட்டிருந்தது. அதை *நன்னூலின்* பழைய உரைகாரர் கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்கு மேற்கோளாகக் காட்டியிருப்பதைப் பதிப்பாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். இதிகாச-புராணங்களிலிருந்து இராமன், கண்ணன், கருடன், அமரர், சிவன், உமை, திங்கள், பாம்பு, திருவிக்கிரமன், பலராமன், நப்பின்னை, மாயவன், மதுகைடவர், வாமனன், விபீஷணன் போன்றவரைக் கூறும் *பழமொழி நானூறு* சமண நூல் என்றும்,

அதைச் சமணரான அரசகுலத்தவர் பாடினார் என்றும் கூறிவருவது முற்றிலும் உண்மைக்கு மாறுபாடாக உள்ளது. நூலில் எல்லாப்பாடல்களும் இருக்கக் கடவுள் வணக்கப்பாடல் மட்டும் தவறிப்போய் *தன்னூல்* பழைய உரையில் கண்டெடுப்பது இருவகையான இடர்ப்பாடுகளைக் காட்டுகிறது: ஒன்று, உரியமுதற்பாடல் நீக்கப்பட்டது; இரண்டாவது, சமணச்சாயல் பூசப்பட்டது. இதுபோன்ற பல இடர்களைப் பழந்தமிழ் நூல்கள் சந்தித்துள்ளன என இனிக் கண்டறியக் கூடும்.

சங்ககால வேந்தர், வேளிர் மற்றும் வரலாற்றுப் பண்பாட்டுச் சான்றுகள் மறைந்து வருகின்ற காலக்கட்டத்தில் பாடப்பெற்ற இந்நூல் வேளிர் குடியைச் சான்றோர் எனும் வீரர்குடியாக எடுத்தியம்புகின்றது. சமணரும் களப்பிரரும் பௌத்தரும் தமிழகத்தில் வந்து குடியேறித் தழைப்பதற்கு முன்பே எழுதப்பெற்ற நூலாக இதைக் கருதலாம்.

விடுபட்ட பழமொழிப் பாடல் ஒன்று செல்வக் கேசவராயரால் கண்டறியப்பட்டுள்ளது. வேறெந்தப் பிரதியிலும் இப்பாடல் காணப்படவில்லை என்றும், தம் பதிப்பிலேயே இது சேர்க்கப்பட்டுள்ளது என்றும் இவர் கூறுகின்றார். அப்பாடல் வருமாறு:

> அறியாமை யோடிளமை யாவதா மாங்கீக
> செறியப் படுவதாஞ் செல்வம் சிறிய
> பிறைபெற்ற வாணுதலாய் தானேயா டும்பேய்
> பறைபெற்றா லாடதோ பாய்ந்து.

பழமொழிகள் பாடல்கள் தோறும் இறுதி அடியாகப் பயின்று வந்துள்ளன. அவற்றுக்கென ஒரு வரலாற்று விளக்கத்தை ஏனை அடிகள் பெற்றிருக்கின்றன. அப்படியான பழமொழிகள் நானூற்றையும் செல்வக்கேசவராயர் முதலில் ஆங்கிலத்திலும் தமிழிலும் தலைப்புகளாகவும் சுருக்கத் தொடரிலும் அமைத்துள்ளார். அதன்பின் பொருளடிப் படையில், *நாலடியாரில்* உள்ள அமைப்பைப் பின்பற்றிப் பதிப்பித்துள்ளார். ஒவ்வொரு அமைப்பிலும் உட்தலைப்புகள் இடம்பெற்று அவற்றுள் அடங்குவதான பழமொழிப் பாடல்களை அமைத்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இவற்றை,

1. பொருளடிப்படைப் பாகுபாடு
2. உட்தலைப்பு
3. பாடல்

4. பழைய பொழிப்புரை

5. பதிப்பாசிரியரின் பதவுரை

6. பதிப்பாசிரியரின் கருத்துரை மற்றும்

7. தமிழிலும்

8. ஆங்கிலத்திலும் அப்பழமொழிகளை அமைத்தல்

எனப் பாகுபாடு செய்யலாம்.

ஆங்கிலத்தில் பழமொழிகள் மொழிபெயர்க்கப்பட்டும், ஆங்கில மொழியிலேயே இவற்றுக்கு இணையானவை இருந்தால் அவை அப்படியே எடுத்தாளப்பட்டும் கொடுக்கப் பெற்றுள்ளன. பொருளடிப்படைப் பாகுபாடு என்பதால் பாடல்கள் வெவ்வேறிடங்களில் கிடப்பனவற்றை ஓரிடத்தில் கொண்டுவரப் பெற்றுள்ள அமைப்பைப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, கல்வி எனும் பெருந்தலைப்பின் கீழ் இளமையில் கற்றல் (60), மேன்மேற் கற்றல் (332), ஞானநூல் கற்றல் (333), கல்வியின் சிறப்பு (55), கேள்வியின் சிறப்பு (61), குலவித்தை கல்லாமல் வருதல் (21) இவ்வாறாகப் பதிப்பு அமைந்துள்ளது. இறுதியில் அரும்பத அகராதி செய்யுள் எண்பெற்று அமைக்கப் பெற்றுள்ளது. செய்யுள் முதற்குறிப்பகராதியும் இடம் பெற்றுள்ளது. செல்வக்கேசவராயரின் பதிப்புகளில் *பழமொழி நானூறு* மட்டுமே செம்பதிப்பாக அமைந்துள்ளது.

'இளமையில் கற்றல்' எனும் உட்தலைப்பில் முதற்பாடலாக இடம்பெறுவது உண்மையில் 60ஆம் பாடலே. அதுவருமாறு

ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்று மெனவும் புணருமோ? ஆற்றுச்
சுரம்போக்கி உலகு கொண்டார் இல்லையே இல்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்.

இப்பாடலுக்குரிய பழைய பொழிப்புரை, புதிய பதவுரை, கருத்துரைக்குப்பின், பதிப்பாசிரியர் 'மரம் போக்கிக் கூலிகொண்டார்' எனும் பழமொழிக்குத் தமிழில் வழங்கும் இணையான பழமொழிகளை எடுத்தாண்டுள்ளார்.

சுங்கம் மாறினால் சுண்ணாம்பும் கிடையாது

ஓடம்விட்டு இறக்கினால் ஓடக்காரனுக்கு ஒரு சொட்டு

'சென்றவிடமெல்லாம் சிறப்பே கல்வி' என்ற ஈற்றடிப் பழமொழிக்கு (பாடல் 55) ஆங்கிலத்தில்

He who has an art has everywhere a part.
An Artist lives everywhere

என அமைக்கின்றார். *திருக்குறள்* போன்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றிலிருந்தும், முற்கால, பிற்கால நூல்களில் அமைந்துள்ள இணையான கருத்துகளையும் எடுத்தாண்டுள்ள கருத்துரைப் பகுதி ஆய்வு மாணவர்க்கு அரிய பெட்டகமாகும். எடுத்தாளும் பிற்கால நூல்களில் சமண மற்றும் சைவ நூற்கருத்துகள் இங்கே அமைக்கப் பெற்றுள்ளன. பாடல் அடிகளும் கொடுக்கப் பெற்றுள்ளன.

பழமொழிகளைப் பற்றிப் பண்டை உரையாசிரியர்கள் தம் உரைகளில் கூறியிருப்பதும் சான்று காட்டப்பெற்றுள்ளது. சான்றாக 21 ஆம் பழமொழிப் பாடலின் பழமொழியான 'குலவித்தை கற்றுப்பாதி கல்லாமல் பாதி' என்பதற்குப் *பொருநராற்றுப் படையின்* 187-188 ஆம் அடிகளுக்கு நச்சினார்க்கினியர் உரைகண்ட பகுதி எடுத்தாளப்பெற்றுள்ளது.

> **. . . என்றது வழக்கு மாறுபட்டு வந்தோர்க்கு**
> **அவ்வழக்கு வீடறுப்பன் என்றவாறு உரை**
> **முடிவுகாணான் என்னும் பழமொழி கூறினார்**

என்கிறார். மேலும் 'பாம்பறியும் பாம்பின்கால்' எனும் 5ஆம் பாடலின் ஈற்றடிக்குத் தமிழில் விளக்கமாக,

> **பாவலர் அருமை நாவலர் அறிவார்; வித்துவான்**
> **அருமையை வித்துவான்அறிவான்; விறகு**
> **தல்லயன் அறிவானோ**

என்கிறார். 243 ஆம் பாடலில் அமையும் 'நிறைகுடம் நீர்தளும்பலில்' என்ற பழமொழிக்குக் 'குறைகுடம் கூத்தாடும்' எனக் கூறிவிட்டு,

> Empty vessels give the greatest sound;
> Deep rivers move in silence; shallow brooks are noisy

எனும் இணையான ஆங்கிலப் பழமொழிகளைச் செல்வக்கேசவராயர் எடுத்தாண்டுள்ளார்.

பழந்தமிழ்ச் சுவடிப்பதிப்புகளில் பாராட்டத்தக்கதாக அமைந்துள்ள *பழமொழி நானூற்றின்* பதிப்பில் பாடபேதங்கள் காட்டியிருப்பது மேலும் இப்பதிப்புக்குப் பெருமை சேர்க்கின்றது. இவ்வாறான ஒன்பது விடுபட்ட பாடபேதங்கள் இவரால் கண்டறியப்பட்டுள்ளன. வாக்கர் என்பவரும், சுப்பராய செட்டியாரும், ஆறுமுக நயினாரும் செல்வக்கேசவராயரின் *பழமொழி நானூற்றின்* பதிப்புக்கு முன்னோடிகளாக

அமைந்திருந்தாலும், அன்னோருடைய பணிகள் எவ்வகையிலும் ஒரு செம்பதிப்பாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழில் ஏராளமான பழமொழிகள் பயின்று கொண்டிருக்கின்றன. பெர்சிவல் பாதிரியார் 3000க்கு மேலான தமிழ்ப் பழமொழிகளைத் திரட்டி அவற்றுக்கு ஆங்கில மொழியாக்கமும் செய்துள்ளார். அவர்க்குப் பின் பலர் பழமொழிகளைத் திரட்டியுள்ளனர். இப் பழமொழிகள் வட்டாரத்திற்கு வட்டாரம் வட்டாரமொழியால் வேறுபடவும் செய்கின்றன. கருத்து ஒன்றாகவோ சிறிதுமாறுபாடுடையதாகவோ இருக்கும். குறிப்பிட்ட பழமொழியின் மொழி அமைப்பு மற்றும் கருத்து வேறுபாடு என்பவற்றை வைத்தே அவை தமிழகத்தின் எப்பகுதியைச் சார்ந்தவை என இக்காலத்தில் அறிந்து கொள்ள முடியும். அவ்வாறாயின் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவராகக் கருதப்பெறும் முன்றுறை அரையனார் தம் பகுதியில் புழங்கி வந்திருந்த நானூறு பழமொழிகளைத் திரட்டி அவற்றுக்குப் பாடலால் விளக்கம் அளித்திருப்பதாகக் கருதலாம்.

முதுமொழிக்காஞ்சி

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான *முதுமொழிக் காஞ்சியை* நீதி நூலாகவே பலரும் கண்டுவந்திருக்கின்றனர். இந்நூலைச் செய்தவர் மதுரைக் கூடலூர் கிழார். பண்டைத் தமிழரிடையே நிலவியிருந்த முதுமொழிக் காஞ்சித்துறை சார்ந்த கருத்துகளின் அடிப்படையில் இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதனைச் செல்வக் கேசவராயர் 1919ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். இதுவும் நூறுபாடல்களைப் பெற்றுள்ளது. துறையொன்றுக்குப் பத்துப்பத்துப் பாக்களைக் கொண்டது. 1. சிறந்த பத்து 2. அறிவுப்பத்து 3. பழியாப்பத்து 4. துவ்வாப்பத்து 5. அல்லபத்து 6. இல்லைப்பத்து 7. பொய்ப்பத்து 8. எளியபத்து 9. நல்கூர்ந்த பத்து 10. தண்டாப்பத்து என்பன அவை. இப்பதிப்பு நூலில், கூடலூர் கிழார் பற்றிய குறிப்புகள், காஞ்சியின் இலக்கணம், *முதுமொழிக்காஞ்சிப்* பதிப்பில் பாடல்கள் வைப்புமுறை என விரிவாகச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

பழந்தமிழ்ப் பாடல்களின் பதிப்புகளில் மூன்றாவதாக அமையும் *முதுமொழிக்காஞ்சியில்* செல்வக்கேசவராயர் ஏனைய பதிப்புகளில் அமைந்த சார்லஸ் இ. கவரின் ஆங்கிலப் பகுதியையும் எடுத்தாளுகின்றார். இதனால் *முதுமொழிக்காஞ்சியின்* பாடல்களும் நாட்டுப்புறப்பாடல்கள் போன்று அமைந்துள்ளதைக் கூடலூர் கிழார் தொகுத்துப் புதிதாக நூல் செய்தார் எனச் செல்வக்கேசவர் கருதியிருப்பதாக அறிந்து கொள்ளலாம். முதுமொழி என்பதும் பண்டைக் காலந் தொட்டே பழகிவந்துள்ள மொழியாகிய வழக்கு.

அவ்வ காஞ்சித் துறையாகக் கையாளப் பட்டிருக்கின்றன. *தொல்காப்பியம்* பொருளதிகாரம், புறத்திணையியல் காஞ்சித் திணையில் காஞ்சியின் இலக்கணம் கையாளப் பட்டுள்ளது. அது முதுமொழிகளால் காஞ்சியை விளக்குவதாகிறது. அது நிலையாத உலகின் இயற்கையைக் கூறும் நெறியைக் கூறுகின்றது. இதனை *இலக்கண விளக்கம்* (619)

> ஏதமில் அறமுதல் இயல்பிவை யென்னும்
> மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி

எனக் கூறுகிறது. *திவாகரம்*, ஒலிபற்றிய பெயர்த்தொகுதியில் (126)

> கழிந்தோர் ஏனை ஒழிந்தோர்க்குக் காட்டிய
> முறைமை யாகும்முது மொழிக்காஞ்சி

என்கிறது. இவ்வடிப்படையில் பழமொழிகள் போன்றும் பண்டை ஆசாரங்கள் போன்றும் *முதுமொழிக்காஞ்சியின்* பாடல்கள் பாடப்பெற்றுள்ளன என அறியலாம். பழந்தமிழரின் பண்பாடும் வரலாறும் புதிதாக வந்த களப்பிரர் காலத்தில் அழிந்தொழிய விருந்த கட்டத்தில் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற காரணத்தால் பாண்டிய நாட்டு மதுரைக் கூடலூர் கிழார் அவற்றைப் பத்துப் பத்துப் பாடல்களாக, *திருக்குறளைப்* போன்று, பத்து அதிகாரங்களில் பாடியிருக்கிறார். *ஐங்குறுநூற்றின்* ஒவ்வொரு நூறும் பத்துப்பத்துப் பாடல்களாகவும் ‘பத்து’ எனும் பெயர்பெற்றும் தொகுக்கப் பெற்றுள்ளது போலவும், *பதிற்றுப்பத்தின் பாக்கள்* பத்துப்பத்தாக அமைந்திருப்பது போலவும் பாடப்பெற்ற *முதுமொழிக்காஞ்சி* அப்பழந்தமிழ் நூல்கள் போலவே அமைக்கப்பட்டுள்ளதிலிருந்து இந்நூல் சங்ககாலப் பாரம்பரியத்தில் சற்றுப் பிற்காலத்தில் பாடப்பெற்றதாக அறிந்து கொள்ளலாம். பொருளும் இன்பமுமாகிய சங்க இலக்கியக் கோட்பாட்டிலிருந்து அறமும் பொருளும் இன்பமுமான சற்றுப் பிற்காலக் கோட்பாட்டில் பாடப்பெற்ற நூலாக இதைக் கருதலாம். *திருக்குறளில்* அறமும் பொருளும் அதிகப் பாடல்களைப் பெற்று இன்பம் மட்டும் குறைவாகப் பாடல்கள் பெற்றிருப்பது போல் *முதுமொழிக்காஞ்சியிலும்* இன்பப் பாடல்கள் மிகச் சில தாம். அவையும் இன்பச் சுவையை விளக்குவன அல்ல என்கிறார் செல்வக்கேசவராயர்.

> இன்பப் பகுதிக்குரிய முதுமொழிகள் மிகச்சில. அவையும் இன்பச் சுவையை விளக்குவனவல்ல. கார்நாற்பதும், ஐந்திணையும், முப்பாலும், (இன்னிலையும்) ஒழிந்த ஏனைக் கீழ்க்கணக்கெல்லாம் அறம் பொருளின்பங்களை இங்ஙனம் உரைப்பனவே. திருக்குறளிற் கூறிய சில பொருள்களை அம்மொழிகளையே பின்பற்றிக் கூறுதலின் இந்நூல் திருக்குறளுக்குப்பின் இயற்றியதென்பது துணிதலாகும்

எனத் தம் பதிப்புரையில் கூறியுள்ளார். பொருளும் இன்பமும் உரைப்பன சங்ககாலத்துப் பாடல்கள் எனக் கருதினால், இன்பப் பாடல்கள் குறைந்தும் அறப்பாடல்கள் மிகுந்தும் பாடப்பெற்ற சூழல் சங்ககாலத்துக்குப் பிற்பட்டதாகும். இக் காலக்கட்டத்தில் பாடப்பெற்ற நூலாக இம் *முதுமொழிக் காஞ்சியைக்* கருதுகின்றார். இன்பப் பாடல்கள் அறவே ஏற்படாத காலக்கட்டம் களப்பிரர் காலமாகும். இன்பப் பாடல்கள் குறைந்து பாடப்பெற்ற இந்நூலைப் போன்றவை எழுந்த காலக்கட்டம் சங்ககாலத்துக்கும் களப்பிரர் காலத்துக்கும் இடைப்பட்ட காலமாதல் வேண்டும்.

பதிற்றுப்பத்தின் 65ஆம் பாடலில் 'காஞ்சி சான்ற வயவர் பெரும'' எனச் சேரலாதன் செல்வக்கடுங்கோ வாழியாதன் அழைக்கப்படுகின்றான். இத்தொடர்க்கு அந்நூலின் பழையவுரை ''நிலையாமை எப்பொழுதும் உள்ளத்திற் கொண்டிருந்த வீரரென்றவாறு" எனப் பொருளுரைத்துள்ளது. இந்நூலின் 90ஆம் பாடலில் ''விரவுமொழிக்கட்டூர் வயவர்வேந்தே' என இளஞ்சேரலிரும்பொறை அழைக்கப் படுகின்றான். 'விரவுமொழிக் கட்டூர்' என்பதை *அகநானூறும்* (212:14) கையாளுகிறது. பல்வேறு பாடைகளைப் பேசும் வீரர்கள் நிறைந்த பாசறையை இச்சேரன் வைத்திருந்தான் என்பது இதன் பொருளாகின்றது. *முல்லைப் பாட்டின்* 43 ஆம் அடியான 'வேறுபல் பெரும்படை நாப்பண்' என்ற அடிக்கு நச்சினார்க்கினியர் "பாடை வேறுபட்ட பலவாகிய பெரிய படைக்கு நடுவே" எனப் பொருளுரைக்கின்றார். வீரர்கள் அனைவரும் நிலையாமையை எப்போதும் மனதில் கொண்டிருந்தே வினையாற்றுவர் என்பது இவற்றால் விளங்கும். அவ்வாறான வீரர்கள் பற்றிய விளக்கமாக *முதுமொழிக்காஞ்சி* பாடப்பெற்றிருக்கலாம். ஆனால், இவற்றைக் காலத்தால் பிற்பட்ட *இலக்கண விளக்கமும் திவாகரமும்* பிறழ்ந்து பொருள் கண்டிருக்கின்றன. அவையே பிற்காலப் பதிப்பாளர்களுக்கு வேதவாக்காக அமைந்துவிட்டன. முதுமொழிக் காஞ்சியாகிய நிலையாமையை மூதுரையாகக் கேட்டுவந்த பலவகைப் பாடைகளைப் பேசும் வீரர்கள் பற்றிய நூலாதலால் இம் *முதுமொழிக்காஞ்சி* இளஞ்சேரல் இரும்பொறையின் காலத்துக்குச் சற்றுப் பிந்திய காலத்தில் பாடப்பெற்றிருக்கலாம். போரே அறவே இல்லாத பிற்கால நூலாக இருக்க முடியாது.

மதுரைக் கூடலூர் கிழாரைப் புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரோடு இணைத்துப் பார்க்கும் ஒருகுறிப்பும் செல்வக் கேசவராயரின் பதிப்பு நூலில் உள்ளது. ஆனால் இருவரும் வேறுவேறு என்பதைக் கீழ்வரும் அபிதான சிந்தாமணிப் பகுதியிலிருந்து காணலாம் (பக். 1174).

இவர் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையாரின் வேண்டுகோளின்படி ஐங்குறுநூறு தொகுத்தவர். இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். மலைநாட்டினதாகிய கூடலூரிற் பிறந்த வேளாளர். இவர்க்குக் கூடலூர் என்பது இயற்பெயர். மேற்கூறிய அரசரால் ஆதரிக்கப்பட்டவர். அவரிறந்தபின் மிகவருந்திப் புலம்பியவர். சேர நாட்டினதாகிய மாந்தையெனும் நகரம் இவராற் பாடப்பெற்றது. முதுமொழிக் காஞ்சி யியற்றிய கூடலூர் கிழார் இவரின் வேறாயினவர். இவர் காலத்துப் புலவர்கள் குறுங்கோழியூர் கிழார், பொருந்திவிளங்கீரனார்; புலத்துறைமுற்றிய என்பது இவர்க்கு அடைமொழி.

செல்வக்கேசவராயரின் நண்பரான சிங்காரவேலு முதலியார் *முதுமொழிக்காஞ்சி* பாடிய (மதுரைக்) கூடலூர் கிழாரைத் தொண்டை நாட்டினர் எனக் கூறவில்லை. மாறாக, மதுரைக் கூடலூர் கிழார் என்றே கூறுகின்றார் (பக்.1329). மேலும், அவரும் *ஐங்குறுநூற்றைத்* தொகுத்தவராகக் கருதப்பெறும் புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரும் வெவ்வேறானவர் என்கிறார். பின்னவர் சங்க காலத்தினர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இவரை வேளாளர் என இனங்கண்டு *அபிதான சிந்தாமணியின்* ஆசிரியர் கூறுவது எதன் அடிப்படையில் என்பதை வேறு இடத்தில் மறுக்கலாம். இவர் *ஐங்குறுநூற்றைத்* தொகுத்ததாகக் கூறுவர். இவர் பாடியதாகப் *புறநானூற்றில்* ஒரு பாடலும், *குறுந்தொகையில்* மூன்று பாடல்களும் உள்ளதாகவும் குறிக்கப் பெறுவதால் இவருண்டய காலம் களப்பிரர்க்கும் முற்காலத்ததாகவே இருக்கும் என நம்பலாம். அதனால் அக்காலக்கட்டத்து வேறொருவரை வேறுபடுத்துவதற்காகவே மதுரையைச் சார்ந்தவராக *முதுமொழிக் காஞ்சி* ஆசிரியரைக் கருதி 'மதுரை' எனும் அடைமொழி சேர்த்தனர். கூடலூர் கிழாரைத் தொண்டைமண்டலத்துக் காரராகப் படிக்காசுப் புலவர் பாடியிருக்கும் ஒருபாடலைச் செல்வக்கேசவர் எடுத்தாண்டிருக் கிறார். தொண்டை மண்டலத்தாரான இவர்க்குப் படிக்காசுப் புலவர் பாட்டு ஏற்புடைத்ததாக அமைந்துள்ளதாலே இவ்வாறு எடுத்தாண்டிருக்கலாம். அப்பாடல் வருமாறு:

ஊரார் மலிபுலியூர்கோட்ட நற்குன்றத் தூரிலுள்ள
தீராவளமலி பாக்கிழவோன் புகழ்சேக்கிழவோன் காராளன்
கூடற்கிழவோன் முதுமொழிக் காஞ்சி சொற்ற வாரார்
புரிசைக்கிழவோனும் வாழ்தொண்டை மண்டலமே

படிக்காசுப்புலவர் பாட்டிலும் *முதுமொழிக்காஞ்சியைப்* பாடியவர் கூடற்கிழவோன் என்றேதான் உள்ளது. இப்பாடலில், சேக்கிழாரையே காராளன் என்று படிக்காசுப் புலவர் கூறியிருக்க வேண்டும்.

ஏனெனில் கூடற்கிழவோனாகிய *முதுமொழிக் காஞ்சியின்* நூலாசிரியர் "காராளர்" என்று அறியத் தக்க குறிப்புகள் எவையும் இதற்கு முன் கண்டறியப்பட வில்லை. ஆனால் கூடற்கிழவோன் *முதுமொழிக்காஞ்சி* சொற்றவராவார் என மேற்சுட்டிய பாடலில் கூறியிருப்பது, இந்நூலாசிரியரை ஏனைய இடங்களில் 'மதுரைக் கூடலூர்கிழார்' என்று கூறும் கூற்றுக்கு முரணாக அமைகிறது. சங்க காலத்தவரான மதுரையூராரைத் தொண்டை மண்டலத்தாராக இனங்காணுவது வேளிரை வேளாளராக இனங்காணும் கோட்பாட்டினர்க்கு இயைந்து போவதாகக் கருதலாம்.

முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் பற்றிய மேற்கூறிய முரண்பட்ட கருத்துகள் ஒருபுறமிருக்க, இந்நூல் பதிப்பில் செல்வக்கேசவராயர் மேற்கொண்ட சிறப்பியல்புகளைச் சற்றே ஆராயலாம். இந்நூற் பாடல்கள் குறள் தாழிசையில் அமைந்துள்ளதாகக் குறிக்கும் பதிப்பாசிரியர்,

1. பொருள் தலைப்பு
2. பாடல்
3. பழைய பொழிப்புரை
4. பதவுரை
5. பொருள் விளக்கம்
6. மேற்கோள் காட்டுதல்
7. இலக்கணக்குறிப்பு
8. பாடபேதம் காணுதல்

போன்ற உத்திகளைக் கையாண்டுள்ளார். இதற்கு முன்பாகப் பதிப்பித்த *பழமொழி நானூற்றின்* பதிப்பைப் போலவே *முதுமொழிக்காஞ்சியின்* பதிப்பும் அமைந்துள்ளது. ஆனால், இந்நூல் இதற்கு முன்பும் பதிப்பாகியுள்ளதா இல்லையா எனும் விவரக் குறிப்பு எங்கும் காணப்பெறவில்லை. இதிலிருந்து செல்வக்கேசவராயரின் பதிப்பே சிறந்த பதிப்பாக அமைந்துள்ளது எனலாம். இவருடைய குறிப்புரை ஆய்வாளர்க்கு அரிய பெட்டகமாகும். இதுவரை இவர் பதிப்பித்த பழந்தமிழ் நூல்களில் கூறாத, நூல் இலக்கணத்தை இப்பதிப்பு நூலில் விரிவாக ஆராய்வது, தாம் மேற்கொண்ட பதிப்பு மிகச் செம்மையாக இருக்க வேண்டும் என்பதாலேயே. முதுமொழிக்காஞ்சியின் பிற்காலப் பதிப்புகள் பெரும்பாலும், மூலமாக மட்டும் அமைந்து, குறிப்புரையாகச் சிறுபான்மையும் அமைந்துள்ளன.

அறநெறிச்சாரம்

சில சுவடிப் பிரதிகளின் துணையால் செம்பதிப்பாக *அறநெறிச்சாரம்* 1905இலும், 1912இலும் செல்வக்கேசவராயரால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதன் மறுபதிப்புகள் தெரிந்தில. *அறநெறிச்சாரத்தின்* தாள்ச்சுவடிப் பிரதி ஒன்று திருமயிலைச் சண்முகக் கவிராயரிடம் ஓலையிலிருந்து படியெடுக்கப் பட்டிருந்தது. அதைத் தம் பதிப்பிற்கு முதலில் எடுத்துக்கொண்டார். ஆ.சிங்காரவேலு முதலியாரிடமிருந்த பிரதியுடனும் இந்நூல் ஒப்பிடப்பட்டது. காஞ்சிபுரத்துச் சமணர் சிலருடைய பிரதிகளும் பாண்டித்துரை யாரிடம் தாம் அளித்திருந்த பிரதியும் உடனடி யாகப் பயன்படுத்தக் கிடைக்காத காரணத்தால், செம்பதிப்பாகப் பதிப்பிப்பதில் முதலில் இடர்ப்பாடுகள் இருந்ததாக இவர் 1905ஆம் ஆண்டில் வெளியிட்ட பதிப்பில் குறிப்பிட்டுள்ளார். இக்குறைபாட்டை 1912ஆம் ஆண்டு நிவர்த்தி செய்ததாகத் தெரிகிறது. சுதர்சனம் நயினாரின் சுவடிப் பிரதி இதற்குப் பயன்பட்டதாகக் குறிப்பிடும் செல்வக்கேசவராயர், *அறநெறிச் சாரப்* பதிப்பிற்கு *அருங்கலச்செப்பு* எனும் சமணநூல் மிகவும் பயன்பட்டது என்கிறார். இரண்டாம் பதிப்பின் முன்னுரையில்,

> இந்நூலினை நாலடியார் போல் பாகுபாடு செய்து அச்சிட எண்ணியிருந்தேன். சிலபாக்கள் என்பாகுபாட்டில் அடங்கவில்லை. இங்ஙனமிருக்கையில் வேறுகாரிய மாக அருங்கலச்செப்பு என்னும் சைனநூலைப் பார்வை யிடுகையில் அந்நூலின் பாகுபாடு அறநெறிச் சாரத்துக் கடுத்ததென்று கண்டேன். அந்த நோக்கத் துடன் மீண்டும் இந்நூலைப் பரிசோதிக்கையில், "காட்சி யொழுக்கொடு ஞானந் தலைநின்று" என்னும் பத்தாவது பாவே இந்நூலின் உட்கோளாமெனக் கொண்டு, அதன்படியே பாகுபாடு செய்து விட்டேன். இங்ஙனம் பாகுபாடு செய்கையில், பாக்கள் முன்னது பின்னும் பின்னது முன்னுமாக இடம் பெயர்தலால், ஏட்டுப் பிரதியின்படி அவ்வப்பாவிற் குரிய எண்ணை அதனதன் பக்கல் காட்டியிருக்கிறேன்

என்கிறார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான *பழமொழி நானூறு* மற்றும் *முதுமொழிக்காஞ்சிக்கு* முன்பாகவே 1905ஆம் ஆண்டில் *அறநெறிச்சாரத்தைச்* செல்வக்கேசவராயர் பதிப்பித்திருந்தாலும், அவை ஒருசார்பு உடைய என்ற காரணத்தால் *ஆசாரக்கோவையை* அடுத்து வைக்கப்பட்டன. *அறநெறிச்சாரத்தின்* திரட்டுப் பாடல்கள் *நீதிமொழித்திரட்டு* எனும் தொகுப்பு நூலில், வாக்கர் என்பவரால் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

> They are said to have come to the banks of the river, when the verses from which the Naladiyar was collected, were thrown into the Vaikai at Madura

முர்டாக்கின் முற்சுட்டிய நூலில் *அறநெறிச்சாரத்தின்* பிரதிகள் கிடைத்த விவரம் இவ்வாறு எழுதப்பெற்றுள்ளது. தொடக்கக்கால நூல் அறிமுகங்களில் அவைபற்றிய கதைகள் கட்டுக்கதைகளாகத் திரட்டப்பெற்று எழுதப்பெற்றுவிட்டதால், பிற்கால ஆய்வாளர்களும் கண்மூடித்தனமாக அவற்றை நம்பிவிடுகின்றனர். இதனால் உண்மை வெளிப்படாமலே இருந்து விடுகிறது. *அறநெறிச்சாரதைப்* பற்றி *அபிதான சிந்தாமணி* ஆசிரியர் (பக்.108)

> **தமிழ் நீதிநூல்களிலொன்று. முனைப் பாடியா ராலியற்றப்பட்டது. சைந நூலாகத் தெரிகிறது**

என ஐயுற்றிருக்கிறார். ஆனால் செல்வக்கேசவராயரோ அஃது சமண நூலே என முடிவுக்கு வந்து பதிப்பித்துள்ளார். நூலின் சுவடிப் பிரதிகள் சைனர்களிடம் கிடைத்ததும், அறநூல்களில் பல சமணச் சாயலில் உள்ளதும் இதற்குக் காரணங்களாகலாம்.

இந்நூலின் பதிப்புக் குறிப்பில், ‘உரைப்பவன்’ என்ற பாடலின் கீழ்,

> **இச்செய்யுள் ஜீவஸம்போதனை என்னும் ஜைநநூலில் அநித்தியமென்னு முதலதிகாரத்தில் (29-வது செய்யுள்) இவ்விதமாகவே அமைந்திருக்கிறது**

என எடுத்துக்கூறும் செல்வக்கேசவராயர், இதன் பொருள் அதிலுள்ளது போலுள்ளது எனவும் கூறுகின்றார். *அருங்கலச்செப்பு* எனும் சமண நூலே *அறநெறிச்சாரப்* பதிப்பிற்கு ஏற்ற துணையாக இவர்க்கு அமைந்தது என்பதைப் பல இடத்தில் இவர் வெளிப்படுத்துவதைக் காணலாம். பாயிரத்தின் 10ஆம் பாடலில், ‘நூலின் உட்கோள்’ என்ற தலைப்பில் பகர அடைப்புக்குள்,

> **[நற்காட்சி நன்ஞான நல்லொழுக்கமாம் மூன்றுந் தொக்கவறச் சொற்பொருள்” என்பது அருங்கலச் செப்பு. “மன்னுயிர்க்குப் பரத்திரயங்கள் பணித்த பிரான்” என்புழி பரத்திரயம் மேலான ரத்நத்ரயம். அவை ஸம்யக்தர்சனம் ஸம்யக்ஜஞானம் ஸம்யச் சாரித்ரம் என்பன என வுரைத்திருக்கிறார்]**

என எடுத்தாள்வதில் பிறமொழிச் சொற்கள் பயின்று வருதல் தவிர்க்க முடியாததால் செல்வக்கேசவர் அவ்வாறே எடுத்தாண்டிருப்பது காணத்தக்கது.

பகர அடைப்புகள் பதிப்புக்குறிப்புகள், அரும்பதவுரை, பாடவேறுபாடு, குறிப்புரை என்பன அமைக்கப்பட்டுள்ளன. பல நீதி நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுவது சிறப்பாக உள்ளது. பொருள் அடிப்படையில் முன்னுக்குப் பின் இருக்கும் பாடல்களைப் பிரித்தெடுத்து அமைத்திருப்பதைக் காணமுடிகிறது. சான்றாக, அறம் என்ற தலைப்பில், 176ஆம் பாடல் முதலாவதாகவும், பின்பு 159, 147, 84 எனும் பாடல்கள் வருவதாகவும் அமைக்கப் பெற்றுள்ளது. *அறநெறிச்சாரத்தின்* பதிப்பாலும் பொருட்பாகுபாடே செல்வக்கேசவராயரால் கருதப்பட்டது என அறியலாம்.

> Nevertheless, the present publication cannot be said to be a accurate as there are about half a dozen stanzas, and evenmore, still puzzling and defying my attempts to decipher them

என இவர் தம்முடைய 1905 ஆண்டுப் பதிப்பின் ஆங்கில முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதை 1912ஆம் ஆண்டு திருத்தம் செய்ததாகவும் தெரியவில்லை. ஆனால் இவருடைய மறுபதிப்பு வேறுசில ஏட்டுப் பிரதிகளுடன் ஒப்பிடப்பட்டிருப்பது மட்டுமே அறியக் கூடுவதாக உள்ளது. முன்பும், *ஆசாரக்கோவையின்* பதிப்பில் ஆன்றோர் பிழை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்ட இவர், *அறநெறிச்சாரத்தின் முதற்பதிப்பிலும்,* அவ்வாறு தம் நிலையைச் சுட்டியிருப்பதைக் காணலாம். அவர் சார்ந்த காலக்கட்டத்தில் மூலநூல் மட்டும் பதிப்பித்தோரையும், சிறந்த பதிப்பு நூல்களை வெளியிட்டவர்களையும் நாம் இனங்கண்டு கொள்ள இயலும். அவ்வகையில் இவர் இடைப்பட்டவராகவே கருதப்படுகின்றார்.

செல்வக்கேசவராயரின் வேறு சில பதிப்புகள்

மொழிபெயர்ப்பு, தழுவல், உண்மை மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கதைகளாக எழுதி நூல்கள் வெளியிட்ட செல்வக்கேசவராயர், குசேலர் கதையையும், அரிச்சந்திரன் கதையையும் பதிப்பித்திருப்பதில் வியப்பொன்றும் இல்லை. ஆயினும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாடல்களை இழுத்துப் போட்டுப் பதிப்பாக்கியிருப்பதிலிருந்து, மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்ட நிலையில் செல்வக்கேசவராயரால் நூலாக்கம் பெற்றிருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் இவற்றை நாம் அதிகமாகக் கருதத்தேவையில்லை.

குசேலோபாக்கியானம் வல்லூர் தேவராஜ பிள்ளையால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதை மீனாட்சிசுந்தரம் பிள்ளை பரிசோதித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பெற்றுள்ளது. *அரிச்சந்திர புராணம்* உரையுடன் வேங்கடாசல முதலியாரால் 1869 இலும், அருணாசல முதலியாரால் 1875 இலும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அதன் பின்னரும் பலர் அதைப் பதிப்பித்துள்ளனர். இவற்றால் நூல்களைப் பதிப்பிக்கும் எண்ணம் மேலோங்கி இருந்த காலக்கட்டத்தில் செல்வக்கேசவராயரும் இருந்ததால் இவ்விருநூல்களையும் குறைப்பதிப்பாகப் பதிப்பித்துள்ளார் என்றே கருத இடமளிக்கிறது.

உரைநடைத்திறன்

பு. பாலாஜி

தமிழ் இலக்கிய உலகம் செம்மையும் சீர்மையும் பெற்றுத்திகழ முத்தாய்ப்பாய்த் திகழ்பவர்கள் அவ்வக்காலத் தமிழறிஞர்கள். இவர்கள் தத்தம் கால இலக்கியச் சூழலுக்கேற்பத் தமிழ்த்தொண்டு புரிவதில் பெரும்பங்கு வகிக்கின்றனர் எனலாம். முற்காலத் தமிழ்க் கூறுகளைத் தற்காலத்தில் எடுத்தியம்புவதால் தமிழ் வளர்ச்சி செம்மை பெறுவதற்கு வாய்ப்பமைகிறது. தமிழறிஞர் தி.செல்வக்கேசவராய முதலியார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் தொண்டு செய்து சிறந்தவருள் ஒருவராகத் திகழ்கிறார். இவரின் இருபதிற்கும் மேற்பட்ட நூல்களில் பதினான்கு நூல்களில் அமைந்திருக்கும் உரைநடைத்திறனை காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

உரைநடை விளக்கம்

உரைநடை என்பது இலக்கிய மரபு கெடாத நல்ல நடையில் ஆழ்ந்த கருத்தோடு செய்யுள் சந்தச் சேர்க்கை இன்றி நல்ல ஓசை நயம் உடையதாகி ஒளிவுமறை இன்றி உள்ளதை உள்ளபடி உரைஇட்டுக் காட்டும் வகையிலே நேரிய முறையில் கருத்துக்கும் காரணத்துக்கும் பொருத்தமானதாக (ஒன்றனைப் பற்றியோ ஒருவனைப் பற்றியோ) விளக்கி உரைப்பதாகும்" [1] என்பர்.

செல்வக்கேசவராயரின் தமிழ்க் கொடைகள்

தனிமனித வரலாறாகிய அக்பர், இராபின்சன் குரூசோ, மகாகோவிந்த ரானடே என்பனவும், இலக்கியமாகிய கண்ணகி சரித்திரம், கலிங்கத்துப்பரணி என்பனவும் இலக்கியம் சார்ந்தனவாகிய, திருவள்ளுவர், கம்பநாடார் என்பனவும்

---

1. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி ஐந்து ப. 142.

இலக்கணமாகிய பஞ்சலட்சணமும் பொதுப்பொருள் கட்டுரைகளாகத் தமிழ், தமிழ்வியாசங்கள் என்பனவும் உரைநடை உருவாக்கத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன.

மூலத்தை மறுபதிப்பாக்கியதாக வியாசமஞ்சரி எனும் உரைநடை நூலும், அறநெறிச்சாரம் எனும் இலக்கிய நூலும் அமைகின்றன. பழமொழி நானூறு, ஆசாரக்கோவை, முதுமொழிக் காஞ்சி என்பவை மறுபதிப்புடன் உரையும் எழுதப்பெற்றவை. அரிச்சந்திர புராணம், குசேலோபாக்கியானம் எனுமிவை உரைநடையில் உருவாக்கம் பெற்றவை. இவருடைய இப்படைப்புகளை உரைநடையில் உருவாக்கப் பெற்றவை ஆய்வுப் பதிப்பும் உரையுமாய் அமைந்தவை என இரு பிரிவாக அடக்கலாம்.

மேற்குறித்த நூல்களில் இத்தமிழறிஞரின் உரைநடைத் திறனை விளக்க உரைநடை, வருணனை உரைநடை, எளிய நடை, ஆற்றொழுக்குநடை, இலக்கிய நடை, மேற்கோள் நடை, முறை வைப்பு நடை, துல்லிய நடை, பாடபேத நடை, இலக்கண நடை, பழமொழி நடை என்பனவாகக் காண முடிகிறது. "இவருடைய காலத்திலே இப்பொழுதைப் போல் எண்ணற்ற உரைநடை நூல்கள் இல்லை. சில உரைநடை நூல்களே இருந்தன. அந்நூல்களின் நடைகளும் முன்னேற்றம் அற்றவைகளாக இருந்தன. காலந்தோறும் உரைநடை வளர்ச்சி பெற்று வந்துதான். இன்றைய நிலையை அடைந்துள்ளது. இவர் உரைநடை வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற தொண்டு புரிய வேண்டும் என்று எண்ணினார். புலவர்களாய் அந்நாளில் விளங்கியவர்கள் சரமாரியாகச் செய்யுள் மழை பொழிந்தார்கள் அல்லாமல் உரைநடை மாரிபெய்யவில்லை. பெய்யும் ஆற்றலையும் அவர்கள் பெற்றிருக்க வில்லை".[1] முதலில் செல்வக்கேசவராயர் 'அக்பர்' என்னும் உரைநடை நூல் ஒன்றை எழுதினார். அறிஞரும் வரவேற்று ஏற்றம் அளித்தமை காணமுடிகிறது. இதனால் இவர் படைப்புகளைத் தமிழுலகம் வரவேற்றது எனலாம்.

உரைநடை எழுத்து, சொல், தொடர், நடை, பொருண்மை என்பன காலங்காலமாக மாற்றம் பெற்றுக்கொண்டு இருப்பது. எனவே உரைநடை பல பரிமாணங்களில் பரிணமித்து வகைப்படுகின்றது. "விளக்க முடியாத எந்தப் பொருளையும் எளிமையாகவும் தெளிவாகவும் உணர்வதற்கு உரைநடை பெரிதும் பயன்படுகிறது.. உரைநடையும் காலப்போக்கில் நடையமைப்பில்

1. த. இராமசாமிப்புலவர், சு.அ. தமிழ்ப் புலவர் வரிசை-பகுதி-3, ப.26.

மாறுபட்டு வருகிறது. இறையனார் களவியல் உரைநடை, சிலப்பதிகார உரைநடை முதலான பழைய உரைநடைகளிலிருந்து இன்று வரைக்கும் மலர்ந்துள்ளது. உரைகளில் நடைப்போக்கை எண்ணிப் பார்த்தால் ஒவ்வொருகால வரையறையிலும் ஒருவிதமான நடையமைப்பு தோன்றியிருந்ததை-இருப்பதை உணர முடியும் என்பர்.[1] இவ்வகையில் இவ் அறிஞரின் உரைநடை தமிழுக்குச் சிறந்த பங்காற்றுகிறது. மாணாக்கர் தேவையறிந்து உரைநடையில் வேகமும் விவேகமும் கொண்டு செயல்பட்டிருப்பது படைப்புகள் வழித் தெரியலாகிறது.

உரைநடையின் போக்கு

உரைநடையின் போக்குப் பற்றிச் செல்வக்கேசவராயர் கூறுகையில் "நடையில் செவ்விக்குரிய அம்சங்களை இங்க்லீஷில் ஆராய்ச்சி செய்து சில ஆசிரியர்கள் சாஸ்திர ரீதியாக விளக்கியிருக்கின்றனர். இங்க்லீஷ் பயிற்சி இல்லாதவர்க்கும் இங்க்லீஷில் அவ்வாசிரியர் கூறியிருப்பதைத் தமிழில் ஏற்ற பெற்றி அமைத்துக் கொள்ள இயலாதவர்க்கும், உதவியாக இங்க்லீஷ் ஆசிரியர்கள் கூறிய சில கூறுகளையும் தமிழாசிரியர் கூறியிருக்கும் சில கூறுகளையும் இயையும் அளவாக இணைத்து நடையின் செவ்வியை விளக்குவது நன்மையே. தமிழில் வசன நடையின் அம்சங்களை ஆராயப் புகுவது, புது முயற்சியாதலால் சில கூறுகளை மயங்கியுரைப்பது கூடும்; சில கூறுகள் குறைகூறலாக இருப்பதும் கூடும். ஆராய்ச்சி சிறத்தலாகும் போது இவையெல்லாம் திருத்தம் எய்தும்" (தமிழ் வியாசங்கள், ப.80) எனும் கருத்து காலத்தால் நிகழ்கிறது என்பது ஏற்புடைத்து. "தான் கூறப் புகுந்த விஷயங்களுக்கேற்றபடி ஒருவனுடைய நடை, ஒரு நூலில் ஒருவிதமாயும், வேறொன்றில் வேறொரு விதமாகவும் இருக்கும். ஒரே நூலில்தானும் ஒருவருடைய நடை அவ்வச் சந்தர்ப்பத்தில் அமைதலான இரசத்துக் கேற்ற விதமாகவும் மாறிவரும்" (தமிழ் வியாசங்கள், ப.89) என்பார். இதனடிப்படையில் இவரின் படைப்புகள் அமைந்திருக்கின்றன எனலாம். இவர்தம் உரைநடை வகைகளை இனிநோக்குவோம்.

1. விளக்க நடை

விளக்கநடை, பாடல் விளக்க நடை, சொல்பொருள்விளக்க நடை, இலக்கண விளக்க நடை என முப்பிரிவாய் அமைகின்றது.

1. சுந்தரமூர்த்தி. இ., நடையியல் அறிமுகம், ப.50.

அ. பாடல் விளக்க நடை

பழமொழி நானூற்றில் 314 ஆவது பாடலான தாரேற்ற நீண்மார்பில்... எனத் தொடங்கும் பாடல் கருத்து வருமாறு:-

"தம்முடைய வீரத்தன்மையை அரசன் தம்மைக் குறித்து நோக்கவில்லை என்றிடாமல் வீரர் அவருடைய பகைவரை வெல்வதற்குப் போர் செய்ய ஒருப்படுதல் வேண்டும். பலர் உறையும் ஊரில் இருப்பவர், இடாதவரை அறியாமல் தவசிகள் பொதுவாகப் பிக்ஷா பாத்திரத்தை ஏந்திச் சென்றாலும் 'நம்மை நோக்கிப் பிக்ஷை கேட்க வில்லையே' என்றிராமல் புண்ணியத்தைப் பெரிதாக நினைத்து இடுவர். போரில் பகைவரோடு பொரவல்லாரையும் அல்லாரையும் அரசன் பொதுவாக நோக்கினாலும் பொரவல்ல வீரர் 'நம்மைக் கருதி அரசன் நோக்கவில்லையே', பொதுவாகத் தானே நோக்கினான் என்றிராமல் பகைவரை வெல்வதைப் பெரிதாக நினைத்துப் போர் செய்யப் புகுவர். ஓடு ஊரின் மேலதாவது போல் வெற்றி சேனையின் மேலது. இடுவர் இடுவதனால் ஓடு நிரம்புவது போல், பொருவார் பொருவதனால் வெற்றி உண்டாகும்" (பழமொழி நானூறு, ப.284) எனும் கருத்து விளக்கமான நடையில் அமைந்திருக்கிறது.

ஆ. சொல்பொருள் விளக்க நடை

சொல்லுக்குக் காரணகாரிய நோக்கில் சமுதாயப் பயன்பாட்டு பொருள் சொல்லும் விதமாகச் சொல்-பொருள்-விளக்கச் சிந்தனையுடன் நடை அமைகிறது. "கல்வி-வித்தை-சாஸ்திரம்: கல்வி என்பது கற்றல் அறிவு வித்தை எனப் பொருள்படும். கல்வி என்பது கற்றல் என்கிற பொருளில் தொழிற் பெயரும், அறிவு வித்தை என்கிற பொருளில் தொழிலாகு பெயரும் ஆகும். கல்வி என்பதில் கல் என்பது பகுதி. கல்லுதலாவது கிண்டல். கிண்டலாவது தோண்டுதல். சப்தார்த்தத்தின் படி, கற்றலாவது யாதொரு விஷயத்தையும் தோண்டி ஆராய்தல் என்பதாம். அங்ஙனம் ஆராய்ந்தறியப்பட்டது கல்வி வித்தை என்பது. வித்யா என்கிற வடசொல் அது அறி தெரி எனப் பொருள்படும். வித் என்பதன் அடியாகத் தோன்றியது. விஷயங்களை ஆய்ந்தறியும் ஞானமே, கல்வி யென்றும் அழகு வித்தையென்றும் வழங்கப் பெறும். அதனாலன்றோ, கலைகளையும் கைத்தொழில்களையும் கல்வியென்றும் வித்தை யென்றும் வழங்குகிறோம். அழகு மாதுரியம் இராக விகற்பம் எனப்பொருள் படுவதான வனிதம் என்கிற

வார்த்தையை, வித்தை என்பதோடு புணர்த்தி ஓவியம் சிற்பம் கவிதை முதலியவற்றை, லலித வித்தை என வழங்குவது பொருந்தும். வமிச பாரம்பரியமாய் அனுசரிக்கப்பட்ட ஜீவனோபாயம் குலவித்தை எனப்படும். மனிதன் அறியலானவற்றையெல்லாம் வடமொழிவாணர் அறுபத்து நான்கு கலைகளாக வகுத்திருந்தனர். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித்தையே. அந்தந்த வித்தையின் இலக்ஷணங்களைச் சூட்சுமித்தறிவிப்பது சாஸ்திரம் (Tamil essays pg.5-6)

இ. இலக்கண விளக்க நடை

இலக்கணத்தை விளக்க அமையும் நடைதனை இப்படிக் குறிப்பிடலாம். 'வசன நடை போற்றுதற்குரியது. இக்காலத்தில் வாக்கியங்களின் முடிபிலக்கணத்தை அறிவது ஒருதலை. இது பழைய இலக்கணங்களில் ஒருசீராக உரைத்திருப்பதில்லை. நன்னூலில் பல விடங்களில் உரைத்துள்ள சூத்திரங்களை ஓரிடமாகச் சேர்த்து வகைப்படுத்திக் கொள்ளின் வாக்கிய லக்ஷணம் ஏறக்குறைய ஒழுங்காகும். இது செய்வதும் இவ்விலக்கணச் சுருக்கத்தின் ஒருபுடைநோக்கம். எழுத்தும் சொல்லும் உணர்ந்து செய்யுளிலக்கணம் அணிஇலக்கணம் அறிவது முறை. சூத்திரங்காட்டி இடர்ப்படுத்தாமல் இவைகள் வசனமாகவே விளக்கப்பட்டியிருக்கின்றன. இவையெல்லாம் அறிவது பொருளின் பொருட்டாதலால், அது இறுதியில் ஒருவாறு மிகச் சுருக்கமாகச் சேர்ந்திருக்கிறது" (பஞ்சலட்சணம்-முன்னுரை).

எ-.கா. : ஆர்கலி - நிறைந்த ஓசை -நிறைந்த ஓசையை உடையது. கடல்: வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. சிறந்தன்று - உடன்பாட்டு இறந்தகால வினைமுற்று. ஆசாரம் - விலக்கியன ஒழித்து விதித்தன செய்தல் : சீலம் (முதுமொழிக் காஞ்சி - கடவுள் வாழ்த்து). பஞ்சலட்சணம் எனும் நூல் முழுவதும் இலக்கணம் தெளிவு படுத்த வந்த உரைநடை கொண்டது. பாடல்களுக்கும் இலக்கண குறிப்புகள் - விளக்கம் அமைகிறது.

2. வருணனை நடை

கண்ட காட்சியைக் கண்டபடி வெளிப்படுத்தும் நடை வருணனை நடையாக அமைகிறது. எ.கா. "இரண்டு மூன்றிடங்களில் பெரிய பெரிய கூண்டுகள் கட்டி, அவைகளில் புறாக்களும் கிளிகளும் மயில்களும் சிறிதும் பெரிதுமான பலவிதமான பக்ஷிகளும் விட்டிருக்கும். ஓரிடத்தில் சுற்றிலும் இரும்புக்

கம்பிகளால் வேலியிட்டு உள்ளே மான் கூட்டங்கள் விட்டிருக்கும். ஊரிடத்தில் ஒரு நீர்நிலையில் முதலைவிட்டிருக்கும். ஓரிடத்தில் யானை கட்டியிருக்கும்" (அபிநவக் கதைகள், ப.62). இங்கு அஃறிணை உயிரினக் காட்சி வருணிக்கப்பட்டுள்ளது.

3. எளிய நடை

எவருக்கும் புரியும்படி மிக எளிய சொற்களால் அமைக்கப்பட்ட நடையை எளிய நடையாகச் சுட்டலாம். எளிமை பொருளிலும் அமைகிறது.

எ.கா.1. "ராபின்சனும் வெள்ளியும் சோம்பலாக இராமல் தச்சு வேலை செய்து ஜீவனம் பண்ணலானார்கள்.கூடிய வரையில் வாரத்தில் ஒருநாள் தீவில் செய்த படி செய்து வந்தனர். ஒத்தாசை வேண்டியவர்களுக்குத் தங்களாலான ஒத்தாசையைச் செய்யப் பின்வாங்காமல், ஆரோக்கியத்துடனே மனவமைதியாய் அவ்விருவரும் நெடுங்காலம் ஜீவித்திருந்தனர்" (ராபின்சன் குரூசோ ப97).

எ-கா. 2: "வழக்கம் போல சேபியிலே கையைப் போட்டுக் கொண்டு தெரு வழியிலே ஒருநாள் போய்க்கொண்டிருக்கையில் ராபின்ஸன் ஒரு பழைய சிநேகிதனை எதிரில் கண்டான். அவனுடைய தகப்பன் ஒரு கப்பலுக்குத் தலைவன்: சில சிநேகிதரைப் பார்க்கும் பொருட்டு ப்ளைமத் என்னும் துறைமுகப்பட்டினத்திலிருந்து அங்கே வந்திருந்தான்" (அபிநவக் கதைகள், ப.2) இவ்வெளிய நடையில் புரிதல் மிகத் தெளிவாய் அமைந்துள்ளது.

ஆற்றொழுக்கு நடை

இயல்பாகத் தடையின்றிக் கருத்துப் போகும் போக்கை ஆற்றொழுக்கு நடையெனலாம். "அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி வெட்பு நோயும் குருவும் தொடர, கொற்கையில் இருந்த வெற்றிச் செழியன், நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது.

அதுகேட்டு கொங்கிளக்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைத் தொழில் என்றும் மாறாதாயிற்று. அதுகேட்ட கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்ட முற்றுறுத்தாங்கு "அரந்தை

கெடுத்து வரந்தரும் இவள்" என ஆடித் திங்கள் அகவையின் ஆங்கோர்பாடி விழாக்கோள் பன்முறை எடுக்க, மழை வீற்றிருந்து வளம் பலபெருகி விளையா விளையுள் நாடாயிற்று".

அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி சோழியகத்து எத்திறத்தானும் வரந்தரும் இவள் ஓர் பத்தினிக் கடவுள் ஆகும் என நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து நித்தல் விழவணி நிகழ்வித்தான்" (கண்ணகி சரித்திரம், பக்.59-60).

5. இலக்கிய நடை

இலக்கிய உணர்வை விளைவிக்கும் அளவிற்கு இலக்கியப்பாங்கு உடையதாக அமைவது இலக்கிய நடை எனலாம்.

எ.கா. 1 : "கம்பரது கல்வியும் காட்சியுமே காசினிமுற்றும் மேம்படுத்துப் புகழ்ந்து பாராட்டுதலைக் கண்கூடாகக் கண்டு அரசர்க் கொத்த வரிசை பல வளித்துக் கவிச்சக்கரவர்த்திப் பட்டந்தந்து அவ்வரிசைக்குத் தக நாடொன்று நல்கி, தான் நல்கிய அந்நாட்டிற்கும் கம்பனாடு எனப்பெயர் வழங்குவித்து, இவரைப் பெரிதும் உயர்த்தினான்.

எ.கா.2: காஞ்சித் திருநகரின் தென்குடதிசையிலே செய்த சித்திர மண்டபத்தின் நித்திலப் பந்தரில் வெண்குடை நிழற்ற வெண்சாமரை வீச, விசயலக்ஷ்மி விலாசத்தானே, தேவியர் சமேதகச் சிங்காதனத்தின் மீதேறி, நாடகம் வல்லவர் நாடகம் நடிக்க, பாடல் வல்லவர் பாடல் பாட, நிருத்தம் வல்லவர் நிருத்தஞ் செய்ய, சூதருமாகதரும் புகழ, மாதர் மங்கலம்பாட வீணையும் யாழும் குழலும் தண்ணுமையும் வல்லவர்கள் பல்வேறு விதமாக அவ்வாச்சியங்களை வாசியாநிற்க

தானமும் செலவும் பிழையா வகை
தான் வகுத்தன தன்னெதிர் பாடியே
காளமுங் களிறும் பெறும் பாணர்தம்
கல்வியிற் பிழை கண்டனன் கேட்கவே

இவனை வந்தடி தொழுமரசர் தங்கட்குப் பணிமாறும் குடைகளையும் சாமரங்களையும் தாங்களே இவனுக்குப் பணிமாற, வண்டை நகர் மன்னனாகிய கருணாகரத் தொண்டைமான் முதலான மந்திரப் பாராசகர்கள் சூழ்ந்து நிற்ப சயதுங்கன் திருவோலக்கம் கொண்டிருந்தான்" (கலிங்கத்துப் பரணி, ப.45). இந்நடையில் இலக்கியச் செய்திகளுடன் இலக்கிய நடையும் அமைவது குறிப்பிடத்தக்கது.

6. மேற்கோள் நடை

உரைநடை போகும் போக்கில் தெளிவிற்காக இலக்கண இலக்கிய மேற்கோள்கள் காட்டப்படுகின்றன.

அ. இலக்கண மேற்கோள்நடை: இலக்கணம் மேற்கோளாகக் காட்டப் படின் அது இலக்கண மேற்கோள் நடை எனலாம்.

எ.கா. "புலமை மிக்கவர்கள் யாதொரு கதையை உள்ளிட்டோ அல்லது யாதோர் அகப்புறப் பொருட் முறையை உள்ளிட்டோ தாங்கள் வழங்குதலான மொழியில் அமைக்கும் பாடலே செய்யுள் என்பதாகும். இது செய்யுளியலில் தொல்காப்பியர்

எழுத்து முதலா வீண்டிய வடியில்
குறித்தபொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்

என உரைத்ததனால் உணர்தலாகும். பிரகிருதியில் (பிரமனுடைய) சிவ சிருஷ்டியைப் போன்றது கவிகளின் கவிதா சிருஷ்டி என்னும் கருத்தை உள்ளிட்டு, நன்னூலில்

பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லால் பொருட்கிட னாக உணர்வினில்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்

எனவிளக்கினார் பவணந்தி முனிவர்" (தமிழ் வியாசங்கள், ப92)

ஆ. இலக்கிய மேற்கோள் : இலக்கிய உரை எழுதுகையில் ஒத்த கருத்துடைய பிற இலக்கியங்களைக் காட்டுவது இலக்கிய மேற்கோளாக இங்கு அமைகிறது. மதுரைக்காஞ்சி கடவுள் வாழ்த்தில்,

ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை

என்பதற்குப் பதவுரை கூறுமிடத்து, 'கடல் சூழ்ந்த உலகத்தில் மனிதர் எல்லார்க்கும் கதா சாரமுடையவராதலால் நூல்களைக் கற்றலைக் காட்டிலும் ஒழுக்கம் சிறந்ததாம்.

ஓதலின்றே வேதியர்க்கொழுக்கம் – ஔவையார்

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கம் குன்றக் கெடும் – திருக்குறள்

என மேற்கோள் குறிப்பிடப்படுகிறது.

7. முறை வைப்பு நடை

"நட்பு அரசின் அங்கவியலிற் சேர்ந்ததாயினும்" குடிகளுக்கு இன்றியமையாச் சிறப்பிற்றாதலின் போலும், இதனைக் குடியியலுக்கு முன்னே வைத்தது". பின்னுண்டாகும் இன்பம் காம வின்பம் போன்றது. உதுக்காண் எனக் காட்டலாவதொன்றன்று சின்னீரதான காமவின்பம் போலே நண்பினாலாய வின்பம் தேய்வதன்று. அந்நட்பு பெரியோரிடத்துப் பெறுவதொன்றாகு மிடத்து ''நிறைநீரநீரவர் கேண்மை'' கற்றறிந்த பெரியோர் களுக்குள்ளே - உண்டாகி நாட்கு நாள் வளர்வதான நட்பின்பத்தை,

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடையாளர் தொடர்பு

என உவமை முகத்தான் விளக்கிய திறம் மிகவும் வியக்கப் பெறுவதே. இத்திறம் இவ்விருதிறத்தையும் சுவைத்தவர்கட்கே கண்கூடாகும். இன்னோரன்ன இன்பந் தருவதாயினும்,

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்றிடித்தற் பொருட்டு

உற்றதுரைத்த பின்னன்று, நட்பினர் ஒருவர்க்கொருவர் செய்யும் உதவி

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

(திருவள்ளுவர், ப.37) எனக் கருத்துத் தொடர்கிறது. இங்கு முறை வைப்பு நடை அதிகாரத்திற்கும் குறளுக்கும் எடுத்தியம்பப் படுகிறது.

8. துல்லிய நடை

வரலாற்றுச் செய்திகள் துல்லியமாக அமைகின்றன. எ.கா.: தமிழருடைய பழைய சாத்திரங்களும் தென்னாட்டு மூவேந்தர்களுடைய வரலாறும் இன்னும் எவர்களாலும் அவிழ்க்க முடியாத முடிகளாகவே இருக்கின்றன. இம் முடிகளைச் சிக்கற அவிழ்க்கத் துணிவது கல்லில் நார் உரிப்பதேயாகும். புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் முற்பட்ட மூவேந்தர்கள் சரித்திரத்தை இனி எந்த ஆதரவுகளைக் கொண்டு என்னென்னவாறு வரையறுப்போம்? அசோக மகாராசன் காலம் முதல் சிலாசாசனங்கள் அங்கங்கே தலைகாட்டத் தொடங்கின. பழமையான தமிழிலக்கியங்களில் இறந்து போயின போக, எஞ்சி

நின்றனவற்றில் சிற்சில இலக்கியங்கள் மாத்திரமே சிற்சில அரசருடைய தலைகால் தெரியவும் தமிழர்களுடைய மரபை அறியவும் வாயிலாயிராநின்றன. யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களும் மஹாமஹோபாத்தியாயர் உ.வே.சாமி நாதையரவர்களும் இவைகளில் சிலவற்றை அச்சிட்டவளவில், இந்திய சரித்திர வாசிரியர்களும் சில சாதன விற்பனர்களும் ஊக்கங் கொண்டு பல சரித்திரக் கூறுகளை நுனித்தறியவும் முன்னே ஐய நிகழ்ச்சியா யிருந்தவைகளைத் துணிந்து கொள்ளவும் வழியுண்டாயிற்று. சில புறநாட்டிலக்கியங்களும் சிலாசாசனங்களும் தமிழ்நாட்டில் பிற்காலச் சரித்திரத்தை ஒரோவோர் கூறு அறிதற்கு ஆதரவாயிருக்கின்றன. இங்ஙனம் அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும் சிலாசாசனங்களைக் கொண்ட தமிழ்நாட்டில் சென்ற இரண்டாயிரம் வருஷகாலத்தில் நிகழ்ந்த சரித்திரத்தை இப்போது பல புலவர்கள் ஒருவாறு தொகுத்து வருகின்றனர். இங்ஙனம் தொகுப்பதற்கு ஏதுவான இலக்கியங்களில் கலிங்கத்துப்பரணி என்கின்ற பிரபந்தமும் ஒன்றாதலால் அதனைக் கூறலுள்ளோம்" (கலிங்கத்துப் பரணி உரைநடை பக்.1-2) இங்குச் சரித்திரங்கள சரித்திர ஆசிரியர்கள் பற்றிய துல்லியமான பார்வை நோக்கப்படுகிறது.

9. பாடபேத நடை

பதிப்புகளைப் பற்றிக் கருத்துக் கூறும் பொழுது நூலின் பாடபேதம் பற்றிய செய்திகளும் இடம்பெற பாடபேத நடையாக அமைகின்றது.

எ.கா.-1 வழங்கும் பழையவுரையில் இரண்டோரிடத்தில் உள்ள குறிப்புகளால் இதற்கு மேற்பட்ட ஓர் உரையும் உண்டு என அறியலாம். உரையாசிரியர் காலத்தே பாடபேதம் காண்பது உண்டு, என்னும் செய்தி விளங்கும். புறத்திரட்டைத் தழுவியுள்ள பழமொழி வெண்பாக்களில் பாடபேதங்கள் பலவாக உள்ளன. (பழமொழி நானூறு, முன்னுரை)

எ.கா.-2 திருமயிலை சண்முகக் கவிராயவர்களிடம் இருந்த பழைய ஏட்டுப் பிரதியைப் பார்த்து ஏழுவருடங்களுக்கு முன்னர் எழுதுவித்த என்பிரதி அச்சிடுதற்கு ஆகாத நிலையில் இருந்ததனால் சென்னை, துரைத்தனத்தார் கையெழுத்துப் பிரதிகளில் உள்ள பாக்கள் ஐய நிகழ்ச்சிக்கே இடமாக இருந்தமையால், ஊக்கம் இடையீடு படுகையில் சென்னை கோவிந்த நாயகர் பாடசாலைத்

தமிழாசிரியர் ஸ்ரீ.ஆ. சிங்காரவேலு முதலியாரவர்கள் தம்மிடத்திருந்த ஒரு சைனருடைய பிரதியை உதவினர். இடையீடுபட்ட ஊக்கத்தை இவ்வுதவி மீண்டும் எழச்செய்தது. இது காலத்தால் செய்த உதவியாதலின், முதலியாரவர்கட்கு நான் மிகவும் கடமைப் பட்டவனாகிறேன். இந்தப் பிரதி பலவழுக்களையும் ஐயங்களையும் களைவதற்கு ஆதாரமாக இருந்தது. இருந்தும் சில பாக்கள் பொருள் இதுவோ அதுவோ எதுவோ எனத் துணியலாகாமல் இருந்தன. அப்பாக்களையும் அறியாமையால் விடுபட்ட வழுக்களையும் பிரதியுடையவர்கள் கண்டு பிடித்து வெளியிடுதல் வேண்டும்" . . . . (அறநெறிச்சாரம், முன்னுரை)

எ.கா.–3: அந்நோக்கத்துடன் மீண்டும் இந்நூல் பரிசோதிக்கையில் "காட்சி யொழுக்கொடு ஞானந்தலை நின்று" என்னும் பத்தாவது பாவே இந்நூலின் உட்கோளாமெனக் கொண்டு, அதன்படியே பாகுபாடு செய்துவிட்டேன். இங்ஙனம் பாகுபாடு செய்கையில் பாக்கள் முன்னது பின்னும், பின்னது முன்னுமாக இடம் பெயர்தலால்,ஏட்டுப் பிரதியின்படி அவ்வப்பாவிற்குரிய எண்ணை அதனதன் பக்கத்தில் காட்டியிருக்கிறேன். பிரதியுள்ளவர்கள் இந்த ஆதரவைக் கொண்டு எளிதில் ஒத்திட்டுக் கொள்ளலாம். வேறு பிரதிகளும் உரையும் (உரை சில சைனர்களிடம் இருப்பதாகக் கேள்வி) கிடைத்தவரையில் இந்தப் பாகுபாட்டினை முடிந்த தொன்றாகக் கொள்ளல் சாலாது (அறிநெறிச் சாரம், முன்னுரை).

10. இலக்கண நடை

உரை எழுதும் பொழுதும், விளக்கம் எழுதும் பொழுதும் இலக்கணம் சுட்டிப் போகும் பாங்கை இலக்கண நடை எனலாம்.

அ. இலக்கணம் கூறல்

எ.கா. 1: எடுத்துரைக்கும் பொருள்கள் பழமொழிகளுக்கு எடுத்துக் காட்டுகளாகின்றன. சில பழமொழிகள் உவமானங்களாகின்றன. சிற்சில பழமொழிகள் ஒப்புடைக் கூட்டத்தில் அடங்கி விடுகின்றன.

திருக்குறள் நாலடியார் முதலியவற்றிலும் காணப்படாமல் ஆசிரியர் அநுபவசித்தமாக நுனித்தறிந்த அநேக அரிய விஷயங்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு வெண்பாவும் முதலிரண்டடியில் ஆசிரியர் கூறவிரும்பும் பொருளும் நான்காமடியில் ஒரு பழமொழியும் மூன்றாமடியில் பெரும்பாலும் ஆடூஉ முன்னிலையும் சிறுபான்மை மகடூஉ முன்னிலையுமாகக்

கொண்டு நடைபெறுகின்றது. ஆடூஉமுன்னிலையில் அநேகம் அக்காலத்துப் பாண்டியனை நோக்கின போலும். ஆகவே அவை உபகார ஸ்மிருதியாக இருக்கலாம். உள்ளுறை உவமம் கொள்ளத்தக்க முன்னிலைகளும் சில உண்டு. அதனால் அவைகளை நின்று பயனின்மை என்னும் குணத்தால் பாற்படுத்தல் ஆகாது. இவை நீங்கலாக வீணான அடைமொழித் தொடர்கள் எங்கும் புலப்படவில்லை. சுருங்கச் சொல்லுதலும் ஆழமுடைத்தலுமான அழகுகள் இந்நூலுள் மிக்குள்ளன (பழமொழி நானூறு, ப.5).

ஆ. சந்த நடை : மோனை இலக்கணம் அமைந்த நடை சில பகுதிகளில் உள்ளன. "அற்றைத் திங்கள் கோவலனும் மாதவியும் மறையவர்க்கும் மற்றவர்க்கும் சுவர்னதானம் செய்தனர். அப்பொழுது ஞான நன்னெறிக்கு நல்வரம்பாகிய மறையவனொருவன் தானும் சுவர்னதானம் பெறுமாறு வழியே வந்து கொண்டிருந்தான். மூப்பால் முதுகு வளைந்து தளர்ச்சியால் தண்டூன்றி மெல்லென வருகையில், பாகனுக்கு வயப்படாது வேகமாக ஓடி வந்த ஒரு மத யானை அம் மறையவனை வெம்மையாற் கைக்கொண்டது. அது கண்ட கோவலன் அந்த யானையைத் தெழித்து, அம்மறையவனை நீக்கி அதன் கையினிடம் தான் புகுந்தான். அவ்வளவிலே யானை அவனைக் கையால் வளைக்க; அதன் கையினின்றும் நீங்கிக் கோவலன் அதன் கோட்டிலே அடங்கி அது பற்றுகோடாக ஏறி அதன் பிடரிடத்திருந்து அதன் மதத்தை அடக்கினான். மறையவனும் கோவலனை வாழ்த்தித் தானம் பெற்றுத் தான் செல்வழிச் சென்றான்" (கண்ணகி சரித்திரம், ப.6).

இ. எதிர்மறைநடை : வாயிலாயிரா நின்றன (கலிங்கத்துப்பரணி, முன்னுரை), தண்ணுமை வல்லவர்கள் பல்வேறு விதமாக அவ்வாச்சியங்களை வாசியா நிற்க (கலிங்கத்துப்பரணி, ப.45) எனச் சில இடங்களில் எதிர்மறைச் சொல்நடை எதிர்மறையற்ற பொருண்மையில் கையாளப்படுகின்றது.

11. பழமொழி நடை

பல இடங்களில் கருத்தினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தற் பொருட்டுப் பழமொழிகளைக் கையாளும் நடை அமைகிறது. ஆங்காங்கு உள்ள பழமொழிகளை மட்டும் எடுத்துக்காட்டும் வாய்ப்பு தமிழ் வியாசங்கள் எனும் நூலில் அமைகிறது. செய்வன திருந்தச்செய் (ப.4), நல்லினத்திலும் நட்பு வலிது, உற்ற சினேகிதன் உயிருக்கு அமிர்தம், மனக்கவலை

பலக்குறைவு (39) பொருள்தனைப் போற்றிவாழ் (27), ஆபத்தும் சருக்கும் யாருக்கும் உண்டு (26), கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா? கணக்கன் கணக்கறிவான் தன் கணக்கைத் தான் அறியான் (41) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும், கட்டோடு போனால் கனத்தோடு வரலாம் (29), பிள்ளையார் பிடிக்கப் போகக் குரங்காய் முடிந்தது (28), நாய் பெற்ற தெங்கம் பழம் (27), கடனில்லாத சோறு கால்வயிறு போதும், கைவிட்டவனும் கடன்வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான் (24) அழகுக்கிட்டால் ஆபத்துக்குதவும் (25), உப்பில்லாவிட்டால் தெரியுமே உப்பின் அருமை (23), கையில் உண்டானால் காத்திருப்பர் ஆயிரம்பேர் (20), திரைக் கடலோடியும் திரவியந்தேடு (21), உத்தியோகம் புருஷலக்ஷணம் (19) தோட்டி போல் உழைத்துத் துரைபோல் சாப்பிடவேண்டும் (19), போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து (33), நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் (3), தமக்கு மருத்துவம் தாம் (4)

இவ்வாறு வரும் பழமொழிகள் ஆற்றொழுக்காய்வரும் கருத்திற்கு அரண் சேர்க்கவும் விரைவாகப் புரிய வைக்கவும் ஆசிரியருக்கு உதவி அவர் நடைக்கு அணி செய்கின்றன.

பத்தியமைப்பு

ஒரு பொருண்மையதாக அமையும் பத்திகளும் மிகச் சிறப்பாக அமைகின்றன.

எ.கா.: "போர் புரியும் அலைச்சல் இல்லாமல் அமைதியாக இருக்கிற காலத்தில் சாகன் என்கிற ஆட்டம் ஆடுவதில் அவருக்கு அதிக விருப்பம் உண்டு. இந்த ஆட்டத்தை இருட்டான இரவிலும் ஆடுதற்குரிய வழியைத் தேடி அநுசரித்து வந்தார். இந்த ஆட்டத்தை அவர்காலத்தில் மிகவும் திறமாய் ஆடக் கூடியவர் அவர் ஒருவரே" (அக்பர், ப.41) இங்கு அக்பருக்கு ஆடும்கலை தெரிவது கூறப்பட்டுள்ளது.

பயன்படுத்தும் சொற்கள்

அன்றைய சமுதாயப் பயன்பாட்டுப் புதுமை நோக்கி அமைந்த உரைநடையில் சிறப்பாகத் தமிழ்ச்சொற்கள் அமைந்துள்ளன. சிறுபான்மை வடமொழிச் சொற்களும், ஆங்கிலச் சொற்கள் அருகியும் காணப்படுகின்றன.

உதயமாயிற்று, ஞாபகம், மதியூகி, அப்பாற்பட்டு, ஞானவான்கள், அவாவுகின்றவர், இன்னோரன்ன, இற்றைஞான்று,

புகல்வது, புரல்கின்ற (திருவள்ளுவர்-நூலில் பரவியிருப்பவை) ஒத்தாசை (ராபின்சன் குரூசோ) அவிழ்க்க, என்னென, ஒரோவோர், ஏதுவான, விற்பனர்கள் (கலிங்கத்துப்பரணி) ஒருபுடை (பஞ்சலட்சணம்) ஒருப்படுதல் (பழமொழி நானூறு, ப.314) எனும் சொற்களை ஆசிரியர் மிகுதியாகக் கையாண்டுள்ளார். இவை இக்கால உரைநடை வழக்கில் அருகியன என்பது குறிப்பிடத்தக்கது.

பிறமொழிச் சொற்கள்

அப்பியாசங்கள், அர்த்தம், அமிசங்கள், சந்தேசம், சுகாதாரம், அருவருப்பு, சகசம், சாஸ்திரம் (தமிழ் வியாசங்கள்) அனுகரணம், ஆக்ஷேபனை, உபதேசம், அநுபவசித்தம், உபகாரஸ்ம்ருதி, பிரயோகித்தல், பிரதி, புராதனம், ஆதாரம், ஆரம்பம், சாதனம், விஷயங்கள், இதிகாசம், புராணம் (பழமொழி நானூறு, பதிப்புரை) பிரதிட்டு, அர்ச்சக விக்ரகம், ஸ்வரூஸ்துதி, ஆஜானுபாகுவாய், திடகாத்திரம், ஜபமாளிகை, பிரபௌத்திரம், வமிசாவளி, புரோகிதம், உத்தியோகம், தேயம், சரீர ஸௌக்யம், மனுஷ ஜன்மம், காரியங்கள், நஷ்டம், பரிகாரம், அநுஸரித்தல் (அக்பர்). ஜலம், ஸேபி, ஜீவனம், ஆரோக்கியம், ஜீவித்தல், சிநேகிதன் (ராபின்சன் குரூசோ) பரிஷை (வியாச மஞ்சரி, முன்னுரை) போன்ற சொற்கள் அமைகின்றன.

மேலும் செஞ்சொற்கள், ஆக்கச் சொற்கள், குறிப்புச் சொற்கள் எனப் பொருளடிப்படையிலும் பிரித்து நோக்க வாய்ப்புள்ளது. தமிழ் வியாசங்கள் எனும் நூலில் வசனம், வசனநடை பற்றிய இவரது விரிவான விளக்கம் அக்கால உரைநடை போக்கை உணர்த்துவதாக உள்ளது.

நிறைவுரை

அறிஞர் தம் தமிழ்க் கொடையால் உரைநடை வளர்ச்சி சீர்மை பெற்றது எனில் மிகையாகாது. பல்வேறு காலப் பலவகை நூல்களுக்கு உரைநடை எழுதப் பெற்றமையால் பல உரைநடை வகைகள் அறிஞரின் பங்களிப்பாய் அமைகின்றன. தனிமனித வரலாறு, இலக்கியம், இலக்கணம் எனுமிப் பொருண்மைகளை உரைநடையில் மீட்டுருவாக்கித் தந்தமையால் உரைநடை வளர்ச்சிக்குப் பல பரிமாணம் இவரால் கிடைத்தது எனலாம்.

இக்கட்டுரையில் விளக்க நடையில் பாடல்விளக்கம், சொல்லுக்குப் பொருள் அடிப்படையிலான காரண காரிய விளக்கம்,

இலக்கண விளக்கம் என மூவகை அமைகின்றன. இலக்கியத்திற்கு என அமைந்த உரைநடையில் இலக்கிய நடை செவ்வனே திகழ்கிறது. அத்துடன் ஆற்றொழுக்கு நடை, பாட பேதநடை, முறைவைப்பு நடை, மேற்கோள் நடை என்பன அமைகின்றன. மேலும் சந்தம், உள்ளிட்ட இலக்கணக் கூறுகளையுடைய இலக்கண நடை இலக்கியத்திலும் இலக்கணத்திலும் இடம்பெறுகின்றது.

தனிமனித வரலாற்றுக்கு எளிய நடை பயன்படுத்தப் பட்டுள்ளது. கதைகளுக்கு வருணனை நடை சிறக்கிறது. கட்டுரைகள் அடங்கிய நூலுக்குப் பழமொழி நடை அணி செய்கிறது.

அனைத்து நூல்களிலும் பத்தியமைப்புச் சீர்மை பெறுகிறது. சொற்களைப் பயன்படுத்திய பாங்கில் எளிய நல்ல தமிழ்ச்சொற்கள் அக்காலத்துப் புதுமை என்ற நிலையில் அதிகமாக ஆளப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் தேவைகருதிச் சிற்சில இடங்களில் காணக்கிடைக்கின்றன.

நூலின் நுவல் பொருள் தன்மைக்கேற்ப உரைநடையில் சொல்லும் பொருளும் சிறக்கின்றன. அனைத்தையும் ஒருங்கிணைத்து நோக்குகையில் இத் தமிழறிஞரின் உரைநடைத் தமிழ்க்கொடை அளப்பரியது.

முதன்மை நூல்கள்

அ. உரைநடை நூல்கள்

1. அக்பர், செல்வக்கேசவராய முதலியார், தி., திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1981.

2. அபிநவக்கதைகள், செல்வக்கேசவராய முதலியார், தி.எஸ்.பி. சி.கே. பிரஸ், வேப்பேரி, சென்னை, 1921.

3. கண்ணகி சரித்திரம், செல்வக்கேசவராய முதலியார், பி.என். அச்சுக்கூடம், சென்னை, 1915, 1947.

4. கம்பநாடர், செல்வக்கேசவராய முதலியார், தி.எஸ்.பி.கே பிரஸ், வேப்பேரி, சென்னை, 1917, 1926.

5. கலிங்கத்துப்பரணி உரைநடை, செல்வக்கேசவராய முதலியார், கி.க.அ. சங்கத்தார், அச்சுக்கூடம், வேப்பேரி, சென்னை, 1915.

6. தமிழ் வியாசங்கள் (கட்டுரை), செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1915.

7. திருவள்ளுவர், செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1904, 1934.

8. பஞ்சலட்சணம், செல்வக்கேசவராய முதலியார், கி.க.அ. சங்கத்தார் அச்சுக்கூடம், 1903, 1921.

9. ராபின்சன் குரூசோ, செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1915.

10. வியாசமஞ்சரி (நற்புத்திபோதம்), செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1921.

ஆ. ஆய்வும் பதிப்பும்

11. அறநெறிச்சாரம் (பதி) செல்வக்கேசவராய முதலியார், தி. எஸ்பி.சி.கே. பிரஸ், வேப்பேரி, சென்னை, 1912.

12. பழமொழி நானூறு (பதி), செல்வக்கேசவராய முதலியார், எஸ்.பி.சி.கே. பிரஸ், வேப்பேரி, சென்னை, 1917.

13. முதுமொழிக் காஞ்சி (விளக்கவுரை) செல்வக்கேசவராய முதலியார், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1933.

14. Tamil essays, T. Celvakkesavaraya Mudaliar, S.P.C.K. Press, Vepery, 1907.

மேற்கோள் நூல்கள்

தமிழ்ப் புலவர் வரிசை, பகுதி-3, சு.அ. இராமசாமிப் புலவர், கழக வெளியீடு, திருநெல்வேலி, 1955.

நடையியல் அறிமுகம், சுந்தர மூர்த்தி, இ., அன்பு நூலகம், மக்கள் அச்சகம், சென்னை, 1978.

வாழ்வியல் களஞ்சியம், தொகுதி ஐந்து, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1981.

பார்வை நூல்கள்

இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம்), கா.சுப்பிரமணிய பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை, ஐந்தாம்பதிப்பு, 1956.

உரைநடைத்திறன், சோசபு சுந்தரராசு, சூ., எழிலரசு பதிப்பகம், பாளைங்கோட்டை, 1973.

கலைக்களஞ்சியம், தொகுதி ஐந்து, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1958.

தமிழ் இலக்கிய வகையும் வடிவும், சுப்பிரமணியம், ச.வே.., தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1984.

தமிழ் வியாசங்கள், சூரியநாராயண சாஸ்திரி, வி.கோ., மதுரை, 1950.

தமிழ்ப் புலவர் அகராதி, கந்தையாப் பிள்ளை, ந.சி. ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை, இ.ப, 1960.

பின்னிணைப்பு

செல்வக்கேசவராயர் குறிப்பிடும் உரைநடை நூல்களும் அதன் ஆசிரியரும்.

சைனர்	-	ஸ்ரீ புராணம்
வைணவர்	-	அஷ்டாதார ஹஸ்யம், குமரகுருபரா ப்ர பாவம் முதலிய வைணவ நூல்கள்.
ராபெர்ட் டிநொ பிலிப்ஸ்	-	கிறிஸ்தாப்தம்
வீரமாமுனிவர்	-	வேதியரொழுக்கம், வேதவிளக்கம், ஞான உணர்த்தல், அவிபோக பரிபூரண குருகதை.
வைத்தியநாத தேசிகர் சுப்பிரமணிய தீக்ஷிதர் சுவாமிநாத தேசிகர்	-	இலக்கணச் சூத்திரங்களுக்கு உரை எழுதியமை.
சிவஞான முனிவர்	-	இலக்கண சித்தாந்த சாஸ்திர உரைகள் கண்டனங்கள்
சரவணப் பெருமாளையர்	-	சிறுவர் வசனநூல்கள்
தாண்டவராய முதலியார்	-	கதாமஞ்சரி (தொகுப்பு)
		பஞ்சதந்திரக் கதைகள் (மகாராஷ்டிர பாஷையிலிருந்து தமிழில்மொழி பெயர்த்தது).

மழவை மகாலிங்க ஐயர்	-	போதவசனம்
ஆதிமூல முதலியார்	-	கதா சிந்தாமணி
திருச்சிற்றம்பல தேசிகர்	-	ராமாயணம் (கத்தியம்)
மதுரைக் கந்தசாமி	-	விவகார சங்கிரகம் (1826)
தேவன்ன பட்டாசாரியன்	-	மிருதி சந்திரிகையில் விவகாரகண்டம்
வால்டர் ஜாயில்	-	வாசக பாடங்கள் (மூன்று)
யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்	-	பால பாடங்கள் பெரிய புராண வசனம் திருவிளையாடற் புராணம் இலங்காபூமி சாஸ்திரம் கந்தபுராணத்தில் ஒருபகுதி
வீராசாமி செட்டியார்	-	விநோதரச மஞ்சரி (பத்திரிகை விஷயத் தொகுப்பு)
வேதநாயகம் பிள்ளை	-	பிரதாப முதலியார் சரித்திரம், குணசுந்தரி அபிநவக்கதைகள், பெண்கல்வி, பெண்மதி மாலை.
இராமலிங்க சுவாமிகள்	-	மனுமுறை கண்டவாசகம், ஜீவகாருண்யம்
தொழுவூர்வேலாயுத முதலியார்	-	வேளாண்மரபியல், திருவெண்காட்டடிகள் சரித்திரம், பெரியபுராண வசனம், சங்கர விஜயம், மார்க்கண்டேய புராண வசனம்
கிருஷ்ணமாச்சாரி	-	அரிச்சந்திர சரிதை
ஸ்ரீநிவாச ராகவாச்சாரி	-	உத்தர ராமாயண வசனம், விஷ்ணு புராண வசனம். தசகுமார சரித்திரம், ஆதி கதா சங்கிரகம் தண்டியலங்காரச் சாரம்.

துரைசாமி மூப்பனார்	-	அயோத்தி நகர மான்மியம் மாஜானகீ பரிணயம், பிரஸ்ந்நராகவம், வில்லிபாரதச் சுருக்கம், ராம பத்கீயம்,
பத்திரிகை	-	ஜன விநோதினி
சுதேச பாஷா பிவிர்த்தி சங்கம்	-	சமஸ்கிருத நாடகக் கதை, ஷேக்ஸ்பியரின் சில நாடகக்கதைகள், பாலியல் கட்டுரைக் கதைகள், உண்மைச் சரித்திரம்.

****

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100	50.00
நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
விவிலியத் தமிழ்	40.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
Agreement in Dravidian Languages	100.00
நாடகவியல்	70.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
கருவூரார் பல திரட்டு	70.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
பாரதி இந்தியா	40.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

Pub.No.509 திருமணம் செல்வக்கேசவராய முதலியார் 30.00